உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
இரண்டாம் பதிப்பு
சுடர் 32 கதிர் 298 புரட்டாதி 04ஆம் நாள் புதன்கிழமை 20 செப்ரெம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048
விலை: 20
பக்கங்கள்: 32

## தமிழருக்கு நீதிகேட்டு ஜெனிவாவில் போராட்டம்...



விரிவு பக். 04

# அரசியல் தீர்வு வரும் வராமலும் போகலாம்

## நிதானமாகச் செயற்படவேண்டும் என சம்பந்தன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 20
தீர்வு வரும் வராமல் போகலாம். நாங்கள் நிதானமாகச் செயற்பட வேண்டும். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்க இருவரும் தமது கட்சி உறுப்பினர்களை ஒழுங்காக முறையாக வழிநடத்த வேண்டும். இனிமேல்தான் முக்கிய தருணங்கள் இருக்கின்றன.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.
தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

>> 29

# சிங்களவருக்கு மகிந்த போன்று தமிழருக்கு பிரபாகரன் 'ஹீரோ'

## ஞானசார தேரர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 20
"மகிந்த அரசு போரின் மூலம் விடுதலைப் புலிகளை வெற்றி கொண்டபோதும் தமிழ் மக்களின் உள்ளத்தை வெற்றிகொள்வதற்கு எந்த வேலைத் திட்டமும் இருக்கவில்லை. தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு நந்திக்கடலில் பிரபாகரனுக்கு நினைவுத்தூபி அமைத்திருந்தாலும் பிரச்சினை இல்லை"
இவ்வாறு பொதுபல சேனாவின் செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்தார்.
"மகிந்த இங்குள்ள மக்களுக்கு வீரர் போன்று பிரபாகரன் தமிழ்

>> 29

# தமிழ் மக்களை விற்கமாட்டோம் உரிமைகளையும் அடகுவையோம்

## கூட்டமைப்பின் தலைவர் உறுதி

யாழ்ப்பாணம், செப். 20
"நாம் தமிழ் மக்களை விற்கமாட்டோம். எமது மக்களின் உரிமைகளை அடகு வைக்க மாட்டோம். மக்கள் ஏற்றுக் கொள்ளும் தீர்வையே நாம் ஏற்றுக் கொள்வோம்"
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

>> 29

# யாழ். சிறையிலிருக்கும் கைதிக்கு ஹெரோயின்

## ஆடைகளுக்குள் மறைத்துக் கடத்தியவர் சிக்கினார்

>> 29



நாளை வரும் இடைக்காலஅறிக்கைக்கு ஐயா இண்டைக்கே அலேட்....

## யாழ். நகரில் கொடூரம்

# குடும்பத்தலைவர் வெட்டிக்கொலை

## அவரது மகனும் படுகாயம்

யாழ்ப்பாணம், செப். 20
இளைஞர் கும்பலொன்றால் கடத்திச் செல்லப்பட்டு வெட்டுக் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் மீட்கப்பட்ட குடும்பத் தலைவர், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். அவரது மகன் படுகாயங்களுடன் சிகிச்சை பெற்று வருகிறார்.
மாடுகளை களவாடிய

>> 29

## கடும் எதிர்ப்புகளையும் மீறி

# மாகாணத் தேர்தல் திருத்தம் இன்று சபையில் முன்வைப்பு

கொழும்பு, செப். 20
தேர்தலை ஒத்திப்போடும் நோக்குடன், அரசு தோண்டியெடுத்துள்ள மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டவரைவை இரண்டாம் வாசிப்புக்கு குழு நிலையில் இன்று எடுத்துக் கொள்வதற்கு கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எதிர்ப்பு வெளியிடப்பட்டது. எதிரணியின் எதிர்ப்பையும் மீறி நாடாளுமன்றத்தில் இன்று இரண்டாம் வாசிப்புக்கு சட்டவரைவு கொண்டு வரப்படும் என்று ஆளும் தரப்புத் தெரிவித்துள்ளது.
20ஆவதுதிருத்தம்தொடர்பில் உயர்

>> 04

# உள்ளூராட்சித் தேர்தல் ஜனவரியில் நடக்கும்

## சபையில் அறிவித்தார் ரணில்

கொழும்பு, செப். 20
தேர்தலுக்கு நாம் அஞ்சவில்லை. கட்சித் தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஜனவரி மாதம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துமாறு தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரிடம் கோரியுள்ளோம். ஜனவரி மாதம் தேர்தல் நடைபெறும். தேர்தலொன்று அறிவிக்கப்பட்டால் எந்தக் கட்சியில் போட்டியிடுவீர்கள்?
இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க

>> 04

# சுமந்திரன் எம்.பி. கொலைச் சதி 5 சந்தேகநபர்களுக்கும் பிணை

## யாழ். மேல் நீதிமன்று நேற்றுக் கட்டளை

யாழ்ப்பாணம், செப். 20
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனைப் படுகொலை செய்யச் சதித் திட்டம் தீட்டினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 5 முன்னாள் போராளிகளும் நேற்று கடும் நிபந்தனைகளுடன்

>> 29

# தேர்தலைத் தள்ளிப்போட அரசுக்குள்ளேயே எதிர்ப்பு

## ரணிலுக்கு அமைச்சர்கள் புத்திமதி

கொழும்பு, செப். 20
தேர்தல்களை ஒத்திப்போடும் திட்டங்களைக் கைவிட்டு உடனடியாகத் தேர்தலொன்றுக்கு அரசு செல்லவேண்டும். சிறுபான்மையினர் பாதிக்கப்படும் வகையில் எந்தவொரு திருத்தங்களையும் அரசு செய்யுமாயின் அது நியாயமானதாக இருக்காது. தேர்தலை ஒத்திப்போட்டு ஆளும் கூட்டணி அரசு தன்

>> 29

# டெனீஸின் மனுவுக்கு ஒக். 3இல் கட்டளை

யாழ்ப்பாணம், செப். 20
அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கிய

>> 04





# சமூகப் பாதுகாப்புச் சபை அமைச்சால் மாணவர், உத்தியோகத்தர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், செப். 20

சமூக பாதுகாப்புச் சபை சமூக வலுவூட்டல் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சால், 2016 ஆம் ஆண்டு ஜி.சி.ஈ. சாதாரண தரப்பரீட்சையில் 9 ஏ தரச் சித்தியடைந்த மாணவர்கள், சிறப்பான சேவைகளை ஆற்றிய அரச உத்தியோகத்தர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு யாழ்ப்பாண மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

அதில் கடந்த 2016 ஆம் ஆண்டு ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் அதி உயர் புள்ளிகளைப் பெற்ற 40 மாணவர்களுக்கு, சுமார் 10 ஆயிரம் ரூபா புலமைப்பரிசில் கொடுப்பனவும், பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

அதேவேளை யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக சிறப்பான சேவையாற்றிய 32 அரச உத்தியோகத்தர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலகங்களில், அதி கூடிய மாணவர்களை இலங்கைச் சமூக பாதுகாப்புச் சபையின் ஓய்வூதியத் திட்டத்தில் இணைத்துக் கொண்டமைக்காக, கோப்பாய் மற்றும் சாவகச்சேரி, சண்டிலிப்பாய் பிரதேச செயலர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் சான்றிதழ்கள் மற்றும் நினைவுப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன், பிரதேச செயலாளர்கள், சமூக சேவை உத்தியோத்தர்கள், கிராம சேவையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் உள்ளிட்டவர்களும் கௌரவிக்கப்பட்டனர். யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா. வேதநாயகன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

அதில் இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் தலைவர் கீர்த்தி சுரஞ்சித் மாவல்லகே முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கினார்.

இந்த நிகழ்வில் இலங்கைச் சமூக பாதுகாப்புச் சபையின் உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (ஐ-10, 106)

# காணாமல் ஆக்கப்படுதல் தொடர்தலுக்கான அறிகுறி

## காணாமற் போனோருக்கான அலுவலகம் தொடர்பாக அமைச்சர் அனந்தி கருத்து



முல்லைத்தீவு, செப். 20

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட பலர் இருக்கின்றனர் என்பதற்கான ஒரு முன்னாயத்தமாக காணாமல் போனோருக்கான அலுவலகம் அமைக்கப்படவுள்ளது. இது கண்துடைப்பு அலுவலகம். காணாமல் யாரால் ஆக்கப்பட்டாரோ, அவரைப் பற்றியதகவல் தெரிந்தாலும் கூட அந்த உண்மை வெளியில் சொல்ல முடியாது.

இவ்வாறு வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவரங்களை வெளிப்படுத்தக் கோரி, முல்லைத்தீவில் உறவுகள் நேற்றுடன் 196 ஆவது நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்களை வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சர் அனந்தி சசிதரன் நேற்று நேரில் சந்தித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்டம் நீடித்துக் கொண்டே போகின்றது. எதிர்வரும் காலங்களில் மழை வரவுள்ளது. அவர்களின் போராட்டத்துக்கு அரச தலைவர் பதில் கூறவேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தைத் தானே கையாள்வதாகவும், தனக்கும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கும் ஒரு நல்ல உறவு இருப்பது போன்ற தகவலைப் பன்னாடுகளுக்கு அவர் தெரிவித்துள்ளார். அரச தலைவர் ஒரு அமைச்சராக இருந்த போது, போரில் பாதிக்கப்பட்ட மாணவிகளைச் சந்தித்தார். அந்தப் படம் ஊடகங்களில் வெளிவந்துள்ளது. அதில் நிற்கும் மாணவி ஒருவரின் தாயார் வவுனியாவில் போராட்டத்தில் இருக்கின்றார். அந்த மாணவியைக் கூட எந்தப் பாடசாலையில் சந்தித்தேன் என்ற புலனாய்வு அறிக்கையைகக் கூட செய்யமுடியாத ஒரு அரச தலைவராக அவர் காணப்படுகின்றார்.

கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பு முடிந்து விட்டது என்றோ அல்லது இனி இந்த இன அழிப்பு தமிழ்மக்களுக்கு எதிராக நடைபெறாது என்றோ பன்னாட்டுக்கு இலங்கை அரசு வாக்குறுதி அளிக்கவில்லை.

இந்த நிலையில் மீண்டும் கண்துடைப்பாக காணாமல் போனோருக்கான அலுவலகத்தை அமைக்கவுள்ளது. அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. மக்கள் நம்பிக்கை வைக்கவும் முடியாது -என்றார்.

(ஐ-10, ரி3)

# மின்சார சபை ஊழியர்கள் 7 ஆம் நாளாகப் போராட்டம்

கொழும்பு, செப்.20

மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, மின்சார சபை ஊழியர்களால் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நேற்று ஏழாம் நாளாகவும் தொடர்ந்தது.

"எமது கோரிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடலுக்கு இன்னமும் அழைப்பு விடுக்கப்படவில்லை. மின்சார சபையின் உயர் அதிகாரிகளுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளில் இடம்பெறும் முறைக்கேடுகள் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளோம்.

அரசு கோரிக்கைகளை நிறைவேற்றுவதாகத் தெரியவில்லை. தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும்" என்று மின்சார தொழிற்சங்கக் கூட்டமைப்பின் இணைப்பாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்தார்.

தொழிற்துறை அமைச்சர் டபிள்யு.டி.ஜே.செனேவிரத்னவுடன், தொழிற்சங்கத்தினர் பேச்சுக்கள் நடத்திய போதும், அது வெற்றியளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-33)

# மீனவருக்கு அடித்தது லட்சக்கணக்கில் அதிர்ஷ்டம்

மட்டக்களப்பு,செப்.20



ஆழ்கடல் மீன் பிடியில் ஈடுபடும் வாழைச்சேனை மீனவர் ஒருவருக்கு லட்சக்கணக்கில் அதிர்ஷ்டம் அடித்துள்ளது. அவரது வலையில் இரண்டாயிரம் கிலோவுக்கு மேற்பட்ட சுறா மீன்கள்பிடிபட்டுள்ளதால் மீனவர் பெரும் சந்தோசம் அடைந்தார்.

கடந்த சில நாள்களாக கடலில் தங்கியிருந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மீனவர், நேற்றுக் கரை திரும்பினார். அவரது படகில் அதிகளவான சுறா மீன்களும், ஒரு தொகை சிறு மீன்களும் பிடிபட்டுள்ளன.

இன்றைய விலை நிலவரப்படி பிடிபட்ட சுறாமீன்களின் பெறுமதி பத்து இலட்சம் ரூபா எனத்தெரிவிக்கப்பட்டது.

ஒரே தடவையில் லட்சக்கணக்கில் அதிர்ஷ்டம் கிடைத்தால் மீனவர் பெரும் சந்தோசமடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஆடு திருடிய இருவருக்கு 6 மாதங்கள் சிறை

சாவகச்சேரி,செப்.20

ஆடு திருடிய இருவருக்கு, ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட ஆறு மாதங்கள் சிறைத்தண்டனை சாவகச்சேரி நீதிமன்றால் நேற்று விதிக்கப்பட்டது.

மட்டுவில் தெற்குப் பகுதியில் கடந்த 2014 நவம்பர் மாதம் மேய்ச்சலுக்குக் சாலையோர கம்பத்தில் கட்டப்பட்டிருந்த 15 ஆயிரம் ரூபா பெறுமதியான குட்டிக்குப் பாலூட்டும் ஆட்டைத் திருடிச் சென்று, அதனை வேறொவருக்கு விற்பனை செய்த இருவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

அவர்கள் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். சாலையோரத்தில் கட்டப்பட்டிருந்த பாலூட்டும் ஆட்டைத் திருடியமை மற்றும் அதனை வேறொருவருக்கு விற்பனை செய்தமை தொடர்பான இரு குற்றங்கள் இருவர் மீதும் சுமத்தப்பட்டது. வழக்கை விசாரணை செய்த நீதிவான் அவர்கள் இருவருக்கும் தலா மூன்று மாதங்கள் வீதம் 6 மாதங்கள் சிறைத்தண்டனை விதித்து, அதனை ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைத்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# கஞ்சா வைத்திருந்தவருக்கு மூன்று ஆண்டுகள் மறுவாழ்வு

## சாவகச்சேரி நீதிவான் உத்தரவு

சாவகச்சேரி, செப். 20

கஞ்சா வைத்திருந்த குடும்பத் தலைவருக்கு பல்லேகல மறுவாழ்வு நிலையத்தில் 3 ஆண்டுகள் தடுத்து வைத்து மறுவாழ்வு வழங்குமாறு சாவகச்சேரி நீதிவான் மன்று நேற்று உத்தரவிட்டது.

நாவற்குழியைச் சேர்ந்தவருக்கே இந்த உத்தரவு வழங்கப்பட்டது.

நாவற்குழிப் பகுதியிலுள்ள வீடொன்றில் கடந்த 12 ஆம் திகதி பொலிஸார் சோதனையிட்டனர். அங்கு ஆயிரத்து 640 மில்லிகிராம் கஞ்சா மீட்கப்பட்டது. அதனை வைத்திருந்த குற்றச்சாட்டில் குடும்பத்தலைவர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர். விசாரணைகளின் பின்னர் அவர் சாவகச்சேரி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை நேற்றுவரை விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக் கொண்டார். பல்லேகல மறுவாழ்வு நிலையத்தில் குற்ற வாளிக்கு மூன்று ஆண்டுகள் மறுவாழ்வு வழங்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். அது பற்றிய கட்டளை சிறைச்சாலைகள் அத்தியட்சகருக்கு வழங்கப்பட்டது. (வ-4-9)

# அர்ஜுன் மகேந்திரனின் அலைபேசிச் தரவுகள் மாயம்

கொழும்பு, செப். 20

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனின் அலைபேசித் தரவுகள் காணாமல்போயுள்ளன என்று குற்றப் புலனாய்வு பிரிவினர் ஆணைக்குழுவில் தெரிவித்தனர்.

மத்திய வங்கியின் சர்ச்சைக்குரிய பிணை முறி விநியோகம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் அரச தலைவர் ஆணைக்குழுவில், அர்ஜுன் மகேந்திரன் நேற்று முற்பகல் முன்னிலையானார்.

அர்ஜுன் மகேந்திரனிடம் சாட்சியம் பெறும் தீர்மானம், கடந்த 13 ஆம் திகதி ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அவரின் சாட்சியம் மிகவும் அத்தியாவசியமானது என அறிவித்து, ஆணைக்குழு விடுத்த அழைப்பாணைக்கு அமைய அவர் நேற்று ஆணைக்குழுவில் முன்னிலையானார்.

இந்த நிலையில், அவரின் இரண்டு அலைபேசிகள் ஆணைக்குழுவின் பொறுப்பில் எடுக்கப்பட்டு, விசாரணக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அதற்கமைய அவரின் அலைபேசிகளில் கடந்த 11 மாதங்களின் தரவுகள் காணாமல்போயுள்ளன என்று குற்றப் புலனாய்வு பிரிவினர் ஆணைக்குழுவில் தெரிவித்தனர். (ஐ-33)

# தியானங்கள் உளவியல் மாற்றத்தை ஏற்படுத்தும்

## வடக்கு மாகாண முதலமைச்சர் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, செப். 20
தியானங்கள் உளவியல் ரீதியான மாற்றத்தைத் தரும். அதன் மூலம் பல்லாயிரம் துன்பச் சுமைகளை மனங்களில் தாங்கிக் கொண்டு, நடைப்பிணங்களாக உலாவிக் கொண்டிருக்கும் மக்களின் மனங்கள் சற்று அமைதி பெறும். இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.



பிரம்மகுமாரிகள் இராஜயோகத்தின் விஸ்வ சாந்தி அகம் நிலையத் திறப்பு விழா முல்லைத்தீவு வட்டுவாகலில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது;
தியான முறைமைகள் காலாதிகாலமாக இந்திய ஆன்மிகக் கலாசாரத்தில் இடம் பெற்று வந்துள்ளன. எமது சித்தர்களும், முனிவர்களும், யோகிகளும் அவ்வாறான தியான முறைமைகளிலேயே தமது உள்ளத்தையும் உணர்வையும் ஒரு முகப்படுத்தி ஏகாந்த நிலையில் நின்று யோக நிலைக்குச் சென்றார்கள். ஆனாலும் அவ்வாறான தியான முறைமைகள் பாமர மக்களுக்கும் மற்றும் இறைபக்தியாளர்களுக்கும் முறையாக பயிற்றுவிக்கப்படாமையால் அவர்கள் அந்தத் தியான முறைமைகளைக் கைக்கொள்ள முடியவில்லை. அதனால் தான் சமயத்தின் ஆழத்தை முறையாக அறியாத பலர் அது பற்றி விமர்சிக்கத் தலைப்படுகின்றனர்.
பிரம்ம குமாரிகள் மிகவும் கட்டுப்பாட்டுடன் கூடிய ஒரு அமைப்பு. எனினும் அவர்களின் அணுகுமுறை மக்களுக்கு உகந்தது. இலகுவானது. உங்களை மதம் மாற்றவோ தமது அமைப்பில் கட்டாயமாகச் சேர்க்கவோ அவர்கள் முனைவதில்லை. மாறாக மக்களின் மனக்கிலேசங்களைப் போக்கி அமைதியைப் பெற வழி வகுப்பதே அவர்களின் குறிக்கோள். அன்பும் அரவணைப்புமே அவர்களின் அன்றாடக் கருவிகள். மென் சொற்களே அவர்களின் மின்னாயுதம்.
இன்னொரு மதம் மாற்றும் அமைப்பு எம்மிடையே வந்து விட்டது என்று நீங்கள் எவரும் சிந்திக்கத் தேவையில்லை. அவர்கள் மதம் மாற்றவரவில்லை. மனச் சஞ்சலங்களை எப்படிக் குறைப்பது. நீக்குவது போன்ற விடயங்களைக் கற்றுத்தரவே வந்துள்ளார்கள்.
விஸ்வ சாந்தி அகம் என்பது மக்களுக்கு அமைதி நிலையைக் கொடுக்கும் இடம் எனப் பொருள்படும். அதனால் தானோ என்னவோ இந்த நிலையத்தை மக்கள் மிகவும் குழப்பமடைந்த வேதனைக்குள்ளாகிய வட்டுவாகல் பகுதியில் அமைத்திருக்கின்றார்கள் என்றார்.
(ஐ-10, ரி3)

# யாழ். அம்மாச்சி உணவகம் சத்தம் சந்தடியின்றித் திறப்பு

## கொழும்பின் அழுத்தம் காரணமா?

யாழ்ப்பாணம். செப். 20
வடக்கு மாகாண விவசாய அமைச்சால் நடத்தப்படும் அம்மாச்சி உணவகம் யாழ்ப்பாணத்தில் நேற்றுத் திறப்பு வைக்கப்பட்டது. கொழும்பு அரசின் அழுத்தத்தால் திறப்பு விழா நிகழ்வு ஏதுமின்றி அது இயங்கியது.
வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் விவசாயக் கண்காட்சி நேற்றையதினம் திருநெல்வேலியில் அமைந்துள்ள விவசாயப் பயிற்சி கல்லூரியில் ஆரம்பமானது. அதில் பயிற்சிக் கல்லூரிக்கு முன்பாக அம்மாச்சி உணவகம் ஊடாக கண்காட்சியில் பங்கேற்ற அனைவருக்கும் உணவுகள் வழங்கப்பட்டன.
வடக்கு மாகாண விவசாய அமைச்சால் அம்மாச்சி உணவகங்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் இடம் தெரிவாகியிருந்த போதும் அதற்கான நிதியை வழங்க கொழும்பு அரசு நிபந்தனை விதித்தது. அதனை சிங்களப் பெயரில் ஆரம்பிக்குமாறு கொழும்பு அழுத்தம் வழங்குவதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வ ரன் பகிரங்கமாகவே தெரிவித்திருந்தார்.
இந்த நிலையிலேயே அம்மாச்சி உணவகம் நேற்று பெயர்ப்பலகையின்றி எந்தவித ஆரவாரம் இல்லாது யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
இதேவேளை, வடக்கு மாகாண விவசாயக் கண்காட்சிக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு ஆரம்பித்து வைப்பார் என இறுதி வரை எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அவர் பங்குபற்றவில்லை.
அத்துடன் கண்காட்சி நிகழ்வில் மாகாண சபைக் கொடியோ அல்லது தேசியக் கொடியோ பறக்கவிடப்படவில்லை.
மேலும் நிகழ்வுக்கு வருகை தந்த பிரமுகர்களின் மேடையைச் சுற்றி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. மோப்ப நாய்களின் உதவியுடன் தேடுதல் நடவடிக்கையையும் பொலிஸார் மேற்கொண்டிருந்தனர். (வ-8)

## குடும்பச் சண்டை கத்திக்குத்தில் முடிந்தது


கொழும்பு,செப்.20
மனைவி மீது சந்தேகம் கொண்ட கணவன், தனது மனைவி மற்றும் மாமியாரைக் கத்தியால் குத்தினார் எனத் தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் காலி தொடருந்து நிலையத்துக்கு அருகில் நேற்று நடந்தது.
கத்திக் குத்தில் காயமடைந்தவர்கள் காலி கராப்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
அரச தொழில் புரியும் ஒருவரே இவ்வாறு தாக்குதல் நடத்தியுள்ளார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மத்திய மாகாண சபை 20 க்குப் பெரும் ஆதரவு

கொழும்பு, செப். 20
பெரும்பான்மை வாக்குகளுடன் அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்ட வரைவு மத்திய மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டது.
திருத்தங்களுடனான சட்ட வரைவுக்கு அங்கீகாரம் வழங்கும் வாக்கெடுப்பு மாகாண சபையில் நேற்று நடைபெற்றது.
வாக்கெடுப்பின் போது திருத்தச் சட்ட வரைவுக்கு ஆதரவாக 40 பேரும், எதிராக 9 பேரும் வாக்களித்தனர். அதேவேளை, இரண்டு பேர் நடுநிலையாக வாக்களித்தனர். 31 மேலதிக வாக்குகளால் 20 ஆவது திருத்தச் சட்ட வரைவு மத்திய மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டது.
அதேவேளை 20 ஆவது திருத்தச் சட்ட வரைவு மேல், சப்ரகமுவ, வடமேல், கிழக்கு, வட மத்திய மாகாணங்களில் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஊவா மற்றும் தென் மாகாணங்களில் தோல்வியடைந்துள்ளது. வடக்கு மாகாண சபையில் அது குறித்து இன்னமும் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.
(ஐ-33)

# படகுகள் மோதல்: ஒருவர் காயம்

யாழ்ப்பாணம்.செப்.20
உள்ளூர் மீனவர்களின் இரண்டு படகுகள் மோதுண்டதில் ஒருவர் காயமடைந்தார்.
இந்தச் சம்பவம் தொண்டமானாறுக் கடற்பரப்பில் நேற்று அதிகாலை நடந்தது. தொண்டமானாற்றில் இருந்து தொழிலுக்குச் சென்று திரும்பியவரின் படகை, வல்வெட்டித்துறையிலிருந்து வந்த படகு மோதியது எனத் தெரிவிக்கப்பட்டது.
மோதிய படகு அந்த இடத்தைவிட்டுச் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. படகு விபத்தில் தொண்டமானாறு படகில் சென்ற ஒருவர் காயமடைந்தார். அவர் ஊறணி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். படகு முற்றாகச் சேதமடைந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. படகு விபத்துத் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
(ஐ-26)





# வவுனியாவில் முதியவர்கள் கௌரவிப்பு

வவுனியா, செப். 20
பன்னாட்டு முதியோர் தினத்தை முன்னிட்டு, முதியோர் விழிப்புணர்வு, கௌரவிப்பு நிகழ்வு வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது.
அதில் நெளுக்குளம் முதியோர் சங்கத் தலைவர் உள்ளிட்ட பிரதான நிர்வாக உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்களால் மலர்மாலை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டனர்.
'மூத்தோர் வாயும் முதுநெல்லிக்காயும்' என்ற தலைப்பில் வவுனியா மாவட்டச் சமூக சேவை உத்தியோகத்தர் செ.ஶ்ரீநிவாசன் நிகழ்த்தினார்.
பாடசாலை அதிபர் க. சிவநாதன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.
அதில் மருத்துவர் கந்தையா இராமச்சந்திரன், எஸ். குமாரசாமி, என். நடராஜா, க. அன்னலிங்கம், மு. நாகேஸ்வரன், திருமதி. எஸ். மனோன்மணி ஆகியோர் கலந்து கொண்டனர்.
பன்னாட்டு முதியோர் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மத்தியில் மூத்த குடிமக்கள் தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையில், வவுனியா மாவட்ட சமூகசேவை அலுவலகம், விழிப்புணர்வு செயற்றிட்டங்களை வருடாந்தம் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.
(ஐ-10)

# தமிழினப் படுகொலைக்கு நீதிகேட்டுப் போராட்டம்

## கொட்டும் மழையிலும் ஜெனிவாவில் முன்னெடுப்பு

ஜெனிவா, செப். 20

ஐ.நாவிடம் நீதி கோரி ஜெனிவாவில் மக்கள் எழுச்சிப் போராட்டம் கொட்டும் மழைக்கும் மத்தியிலும் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 36ஆவது கூட்டத் தொடரின் இரண்டாம் வார நிகழ்வுகள் நேற்று ஆரம்பமாகிய நிலையிலேயே தமிழினப் படுகொலைக்கு நீதி கோரிப் போராட்டம் இடம்பெற்றது.

சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் போராட்டம் ஜெனிவா தொடருந்து நிலையத்துக்கு அருகாமையில் உள்ள பூங்காவில் பி.ப. 2 மணியளவில் ஆரம்பமாகி ஜெனிவா முருகதாசன் திடலை நோக்கி நகர்ந்தது.

இந்தப் போராட்டத்தில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி, தமிழின உணர்வாளர் வ.கௌதமன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(வ-5)

# இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்களை வெளிப்படுத்தக் கோரும் மனு ஒத்திவைப்பு

முல்லைத்தீவு, செப். 20

இறுதிப் போரின்போது இராணுவத்தினரிடம் சரணடைந்த எழிலன் உள்ளிட்ட 12 பேரை முன்னிலைப் படுத்துமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட ஆள்கொணர்வு மனு மீதான விசாரணை எதிர்வரும் நவம்பர் 9ஆம் திகதிவரை ஒத்திவைக்கப் பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் எனப்படும் சின்னத்துரை சசிதரன் உள்ளிட்ட 12 பேரும் இராணுவத்திடம் சரணடைந்ததன் பின்னர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அவர்களை முன்னிலைப்படுத்துமாறு கோரி வவுனியா மேல் நீதிமன்றில் ஆள்கொணர்வு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்தச் சம்பவம் இடம்பெற்றது முல்லைத்தீவு என்பதால் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்று வழக்குப் பாரப்படுத்தப்பட்டது. அங்கு இந்த வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி என்.எப்.எம். சம்சுதீன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரர்களில் ஒருவரான வடக்கு மாகாண அமைச்சர் அனந்தி சசிதரனும் நீதிமன்றில் முன்னிலையானார். முன்னாள் 58ஆவது படைப் பிரிவின் தளபதி சாணக்கிய குணவர்தன நேற்று சாட்சியமளித்திருந்தார்.

எழுத்துமூல சமர்ப்பணத்தை அடுத்த வழக்குத் தவணையின்போது முன்வைக்குமாறு மன்று உத்தரவிட்டது. வழக்கு நவம்பர் மாதம் 9ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

(வ-5)

# சுடர் ஒளி இணையத்தளம் நேற்றுத் தொடக்கிவைப்பு

'சுடர் ஒளி' இணையத்தள ஆரம்ப நிகழ்வு கொழும்பிலுள்ள 'சுடர் ஒளி' பத்திரிகையின் தலைமை அலுவலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

இதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட 'உதயன்' 'சுடர் ஒளி' குழுமத் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் இணையதளத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் அமைச்சருமான மனோ கணேசன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அரச தலைவர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தநிகழ்வில் இந்தியத்தூதரகத்தைப்பிரதிநிதித்துவப்படுத்தி அதன் அரசியல் பிரிவு தலைமை அதிகாரி ரமேஷ் பாபுவும், சீன தூதரகத்தின் சார்பில் அதன் அரசியல் பிரிவின் தலைமை அதிகாரி கியூ சிங்லியும் பங்கேற்றனர். (வ-சி)



# இரு வெவ்வேறு விபத்துக்கள்; இருவர் படுகாயம்

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற இரு வெவ்வேறு விபத்துக்களில் இருவர் படுகாயமடைந்தனர்.

அவர்கள் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வவுனியா மருதோடை கற்குளம் பகுதியில் இருந்து நெடுங்கேணி நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள், நெடுங்கேணியில் இருந்து வந்த ஜீப் ரக வாகனத்துடன் மோதியது.

அதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

அதேவேளை உலுக்குளம் அவ்சதபிட்டியவில் பயணித்த முச்சக்கர வண்டி, எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியது.

அதில் முச்சக்கர வண்டிச் சாரதி படுகாயமடைந்தார்.

விபத்துக்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஜ-10, 402)

# கிளி. கரைச்சிப் பிரதேச சபை நகர சபையாகத் தரமுயரும்

## அதற்கான பணிப்பு விரைவில் என நாடாளுமன்றில் நேற்று அறிவிப்பு

கொழும்பு, செப். 20

"கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேச சபை விரைவில் நகர சபையாக தரமுயர்த்தப்படும். இதற்கான அறிவுறுத்தலை அதிகாரிகளுக்கு வழங்குவேன்" என்று கொழும்பு உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா உறுதியளித்தார்.

நாடாளுமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கொண்டு வந்த கிளிநொச்சி பிரதேச சபையை நகர சபையாக தரமுயர்த்த வேண்டும் என்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் பதிலளித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு கிழக்கு மாகாணங்கள் போரால் அதிகளவில் பாதிக்கப்பட்டன. அங்குள்ள மக்களின் வேணவாக்களை நிறைவேற்ற வேண்டியது எமது கடமையாகும். ஏனைய இடங்களை விடவும் நான் வடக்கு கிழக்குக்கு முக்கியத்துவம் கொடுப்பேன்.

கிளிநொச்சிக்கு நகர சபை தேவையாகும். அதற்குரிய தகுதிகளும் கிளிநொச்சிக்கு உண்டு. நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் நகர சபை கோரிக்கையையும் யோகேஸ்வரனின் கோரிக்கையையும் நிறைவேற்ற வேண்டியது எனது கடமையாகும் -என்றார்.

(வ-31)

# யாழ். சின்மயாமிசனில் நவராத்திரி வழிபாடு

யாழ்ப்பாணம், செப்.20

யாழ். சின்மயா மிஷனின் நவராத்திரி விரத நிகழ்வுகள் இன்று புதன்கிழமை ஆரம்பமாகும். தொடர்ந்து எதிர்வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணி முதல் இரவு 7.30 மணிவரை வழிபாடுகள் நடைபெறும். இந்தத் தினங்களில் பூஜை, பஜன் மற்றும் சத்சங்கம் ஆகியன இடம்பெறும். அனைத்து அடியார்களையும் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (ய)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

## டெனீஸ்...

மைக்கு எதிராக முன்னாள் அமைச்சர் பா.டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு மீதான கட்டளை எதிர்வரும் 3ஆம் திகதி பிறப்பிக்கப்படவுள்ளது.

இந்த வழக்கில் தீர்ப்பு வரும்வரையில், அமைச்சர்களாகப் புதிதாக நியமிக்கப்பட்டவர்கள் செயற்படுவதை தடுக்கும் வகையில் இடைக்காலத் தடை உத்தரவு வழங்குமாறு அமைச்சர் டெனீஸ்வரன் கோரியிருந்தார். அது தொடர்பான கட்டளையே எதிர்வரும் 3ஆம் திகதி பிறப்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரனை பதவியிலிருந்து நீக்குவதாக ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி வடக்கு மாகாண முதலமைச்சர் எழுத்துமூலம் அறிவித்திருந்தார். வடக்கு மாகாண ஆளுநர் குரே அவரை இதற்கு அமைவாகப் பதவி நீக்கியிருந்தார்.

அமைச்சர் பதவியிலிருந்து நீக்குவதற்கு முதலமைச்சருக்கு அதிகாரம் இல்லை எனத் தெரிவித்து மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

நீதியரசர்களான பெல்தெனிய, சிரான் குணரட்ண முன்னிலையில் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. முதலாவது பிரதிவாதியான முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சார்பில் சட்டத்தரணி கனகஈஸ்வரனும், ஆறாவது பிரதிவாதியான முன்னாள் அமைச்சர் ப.சத்தியலிங்கம் சார்பில் சட்டத்தரணி நிரான் அங்கிரலும் முன்னிலையாகினர்.

இரு தரப்பினரும் தமது வாதங்களை முன்வைத்தனர். முதலமைச்சர் அமைச்சர்களை நியமிப்பது, நீக்குவது தொடர்பில் உள்ளார்ந்த தத்துவத்தை ஆராய்வதாக நீதியரசர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனடிப்படையில் மனுதாரர் கோரிய இடைக்காலத் தடை தொடர்பான கட்டளையை எதிர்வரும் 3ஆம் திகதி பிறப்பிப்பதாக நீதியரசர்கள் குறிப்பிட்டு வழக்கை அன்றைய தினத்துக்கு ஒத்திவைத்தனர். (வ- 5)

## உள்ளூராட்சித்...

மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பார்த்து சபையில் நேற்றுக் கேள்வி எழுப்பினார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் சிறப்பு அறிவிப்பு வெளியிட்டு, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை கலப்பு முறைமையில் நடத்தவுள்ளோம். அனைத்துக் கட்சிகளின் இணக்கத்துடனே நாம் புதிய முறைமையை நடைமுறைக்குக் கொண்டு வந்தோம். சிறுபான்மை கட்சிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டிருந்தது. இதனை சீர் செய்வதற்கே எமக்கு காலம் தேவைப்பட்டது. தற்போது எவருக்குமே பாதிப்பு ஏற்படாத வகையில் தேர்தல் முறைமையொன்றைக் கொண்டு வந்துள்ளோம்.

தேர்தலுக்கு முகம்கொடுப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் அஞ்சவில்லை. தேர்தலுக்கு அச்சமில்லாமல் முகம்கொடுப்பதற்கு கூட்டு அரசு தயாராகவே உள்ளது.

ஜனவரி மாதம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியும். நாம் தாமதம் செய்வது தேர்தலுக்கு அஞ்சியே என்று எதிரணியினர் கூறுகின்றனர். நாம் தேர்தலுக்கு அஞ்சவில்லை. தேர்தல் திகதி தொடர்பில் சிக்கல் உள்ளது. நாம் தேர்தலை பின்தள்ள இதுவே காரணம்.

மகிந்த அணியினரே தேர்தலுக்கு அஞ்சுகின்றனர். அவர்களுக்கு போட்டியிடுவதற்கு கட்சி இல்லை. அவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலா போட்டியிடப் போகின்றனர். தேர்தல் நடத்தினால் எந்தக் கட்சியில் போட்டியிடுவீர்கள்? என்று கேள்வி எழுப்பினார்.

(வ-5,31)

## மாகாணத்...

நீதிமன்ற வியாக்கியானத்தை சபாநாயகர் நாடாளுமன்றத்தில் அறிவித்தார். இதன் பின்னர், அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நாடாளுமன்றில் நடைபெற்றது.

20ஆவது திருத்தத்தை இன்று இரண்டாம் வாசிப்புக்கு எடுத்துக் கொள்ள முன்னர் திட்டமிட்டிருந்தபோதும், உயர் நீதிமன்ற வியாக்கியானத்துக்கு அமைவாக அதனைக் கைவிடத் தீர்மானித்துள்ளதாக அரசு, கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அறிவித்தது.

அதற்குப் பதிலாக 1988ஆம் ஆண்டு மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டவரைவு (பெண்களுக்கு 30 சதவீதமான ஒதுக்கீட்டை வழங்கும்) நாடாளுமன்றில் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதனை இரண்டாம் வாசிப்புக்கு எடுத்து திருத்தங்களை முன்வைக்கவுள்ளதாக கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அரசால் அறிவிக்கப்பட்டது.

சுதந்திரக் கட்சி இதற்கு ஆதரவு தெரிவித்திருந்தபோதும், அரசின் பங்காளிக் கட்சிகளான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகியவை கடுமையான விமர்சனங்களை முன்வைத்தன.

20ஆவது திருத்தச் சட்டவரைவு குறித்தும் தமக்குரிய தெளிவுபடுத்தல்கள் செய்யப்படவில்லை. ஏற்கனவே தேர்தல் முறைமை குறித்து சிறு மற்றும் சிறுபான்மை கட்சிகளான நான்கு தரப்புக்கள் கூட்டிணைந்து முன்மொழிவை செய்துள்ளன. அவை தொடர்பில் கவனமெடுக்கவேண்டும். கண்ணை மூடிக்கொண்டு அனைத்துக்கும் எமக்கு ஆதரவளிக்க முடியாது என்ற தொனிப்படக் கருத்துக்களை முன்வைத்ததாக உள்ளகத் தகவல்கள் தெரிவித்தன.

மகிந்த அணியால் கடுமையான எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டன. தேர்தலை பிற்போடுவதற்கான முனைப்புடன் அரசு இத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்வதாகக் குற்றம் சுமத்தியுள்ளனர். கட்சித் தல்லவர்கள் கூட்டத்தில் கடுமையான வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றன. ஒருமித்த முடிவு எதுவும் எடுக்கப்படாமல் கூட்டம் முடிவடைந்தது. (வ-5,31)

# தொழில்நுட்பக் கல்லூரிகள் பற்றி மாணவர்களுக்குத் தெளிவில்லை

## மாகாணசபை உறுப்பினர் ஜெயசேகரம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.20

யாழ்ப்பாணத்தில் 6 தொழில்நுட்பக் கல்லூரிகள் உள்ளன. எனினும் மாணவர்கள் மத்தியில் அவை தொடர்பான விழிப்புணர்வுகள் இல்லை.

இதனால் இளைய சமுதாயம் வேலையில்லாப் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர்.ஜெயசேகரம் இவ்வாறு கவலை தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இணைத்தலைவர்கள் தலைமையில் இடம்பெற்றது. கூட்டத்தில் மாவட்டத்தின் கல்விநிலை தொடர்பில் ஆராயப்பட்டது. அதன்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் 6 தொழில்நுட்பக் கல்லூரிகள்காணப்படுகின்றன. பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்த மாணவர்களுக்கு தொழிலை வழங்கும்வகையிலும், உயர்கல்வியைத் தொடரும் வகையிலும் இவை அமைக்கப்பட்டுள்ளன.

எனினும், இந்த தொழில்நுட்பக் கல்லூரிகள் எங்கெங்கு இருக்கின்றன. அவற்றில் எந்த வகையான பயிற்சி நெறிகள் காணப்படுகின்றனஎன்பது தொடர்பில் மாணவர்கள் மத்தியில் போதிய தெளிவு இல்லை.

இதனால் பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்து வெளியேறும் மாணவர்களுக்கு சரியான தொழில் மற்றும் கல்வி வழிகாட்டல் கிடைப்பதில்லை. இதனால் அவர்கள் எதிர்காலத்தில் தொழில் இல்லாமல் இருக்கின்றனர். எனவே மாணவர்கள் மத்தியில் யாழ்ப்பாணத்தில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடர்பான விழிப்புணர்வு களை வழங்க வேண்டும். இதற்குமாகாணக்கல்வி அமைச்சுநடவடிக்கைஎடுக்கவேண்டும் என்றார்.

மாகாணக்கல்விஅமைச்சின்ஊடாக பாடசாலை மாணவர்களுக்கான தெளிவூட்டல் நிகழ்வுகளை நடத்தி வருகின்றோம். எதிர்காலத்திலும் தொழில்துறைசார்ந்தவிடயங்களை தெளிவூட்டும்வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்றுவடக்குகல்வி அமைச்சர்தெரிவித்தார். (ய-8)

# அத்துமீறி அமைக்கப்பட்ட பௌத்த விகாரைக்கு அரச தலைவர் வருகிறார்

## காணிகளை இழந்த 40 குடும்பங்கள் வாடகை வீடுகளில் என சாள்ஸ் எம்.பி. விசனம்

மன்னார், செப்.20

"மன்னார் மாவட்டத்தில் தொல்பொருள் திணைக்களத்தின் காணியில் பௌத்த விகாரை ஒன்று சட்டவிரோதமாக அமைக்கப்பட்டது. இந்த விகாரைக்கு எதிர்வரும் 28ஆம் திகதி இந்த நாட்டின் அரசதலைவர் வரவிருக்கிறார். அதேநேரம் அந்தக் காணியை இழந்த 40 குடும்பங்கள் தற்போதும் வாடகை வீடுகளிலேயே வாழ்ந்து வருகின்றன" என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

திருக்கேதீஸ்வரம் ஆலயத்துக்கு அண்மை யாகவுள்ள நிலத்தில் நீண்ட காலமாக வாழ்ந்த மக்கள் போர் காரணமாக இடம்பெயர்ந்தனர். பின்னர் அவர்கள் அங்கு மீள்குடியமர அனுமதிக்கப்படவில்லை. ஏனெனில் அப்பகுதி தமது ஆளுகை என தொல்பொருள் திணைக்களம் உரிமை கோருகின்றது. தொல் பொருள் திணைக்களத்தால் உரிமை கோரும் அந்தக்காணியில் சட்டவிரோதமாக பௌத்த விகாரை ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

விகாரை அமைக்குப்போது மௌனம் காத்த தொல்பொருள் திணைக்களத்தினர், அங்கே வாழ்ந்த மக்களை மீள்குடியமர அனுமதிக்கவில்லை. நீண்ட சர்ச்சையின் பின்னரே குறித்த விகாரை அமைக்கப்படுகின்றது. எதிர்வரும் 28ஆம் திகதி அந்த விகாரைக்கு அரச தலைவர் வருகை தர வுள்ளார். எமது மக்களின் வாழ்விட அபகரிப்புக்கு வேறு நீதியும், பௌத்த விகாரைகள் அமைப்பதற்கு ஒரு நீதியும் பின்பற்றப்படுகின்றதா? இவ்வாறான விடயத்துக்கு அரசதலைவரும் ஆதரவா என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். ஏனெனில் அந்த நிலத்தை இழந்த சுமார் 40 குடும்பங்கள் தற்போதும் வாடகை வீடுகளிலேயே வாழ்கின்றனர். அவர்களின் விடயத்துக்கு இன்று வரை தீர்வு முன்வைக்கப்படவில்லை. இது தொடர்பில் நாடாளுமன்றிலும் சுட்டிக் காட்டியுள்ளேன். எனவே அரச தலைவர் இந்த மக்களுக்கு ஒரு தீர்வை வழங்க முன்வர வேண்டும் - என்றார். (ய-101)

## யாழ்.மாநகர சபை குத்தகை பெறாது மோசடி செய்கிறது

### அவைத் தலைவர் குற்றச்சாட்டு

நல்லூர் ஆலய பின் வீதியில் உள்ள பிரபல ஐஸ்கிறீம் கடைக்கான வாகனத் தரிப்பிடத்துக்கு மாநகரசபை குத்தகைப் பணத்தை அறவிடாது பலஇலட்சம்ரூபாபணம்மோசடிசெய்துள்ளதாக வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் குற்றம் சாட்டினார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதன்போதே இவ்வாறு குற்றஞ்சாட்டினார்.

குறித்த கடையின் வாகனத் தரிப்பிடத்துக்கு கடைக்கு முன்னால் உள்ள காணி மாநகர சபையால்வழங்கப்பட்டுள்ளபோதிலும்அதற்காக வரியோ குத்தகைப் பணமோ அறவிடப்படுவதில்லை. இந்தச் செயற்பாட்டின் ஊடாக யாழ்ப்பாணம் மாநகர சபை பல இலட்சம் ரூபா நிதி மோசடி செய்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (4-8)

## கசிப்பு வைத்திருந்தோருக்கு ரூபா45 ஆயிரம் தண்டம் விதிப்பு

கிளிநொச்சி, செப். 20

கிளிநொச்சியில் கசிப்புவைத்திருந்த பெண் உட்பட்ட நான்கு பேருக்கு45ஆயிரம்ரூபாதண்டம் விதித்தது கிளிநொச்சி நீதிமன்று.

கிளிநொச்சியைச் சேர்ந்த குறித்த 4 பேருக்கும் எதிராகப் பொலிஸார்வழக்குப்பதிவுசெய்தனர். அவர்கள் நேற்று முன்தினம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். விசாரணையின் போதுஅவர்கள்தம்மீதானகுற்றச்சாட்டுகளை ஏற்றுக் கொண்டனர்.

அதனையடுத்து அவர்களுக்குத் தண்டம் விதிக்கப்பட்டது. ஒரு போத்தல் கசிப்பை உடைமையில் வைத்திருந்தவருக்கு. 10ஆயிரம்ரூபாதண்டம்விதிக்கப்பட்டது. தண்டம் கட்டத்தவறின்ஒருமாதகாலசிறைத்தண்டனைஅனுபவிக்கவேண்டும். ஒருலீற்றர்கசிப்புவைத்திருந்த பெண்ணுக்கு10 ஆயிரம் ரூபா தண்டம்விதிக்கப்பட்டது. 2லீற்றர்கசிப்புவைத்திருந்தவருக்கு 15ஆயிரம்ரூபாதண்டம்விதிக்கப்பட்டது.

அதனைக் கட்டத்தவறின் 2 மாதங்கள் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும். ஒரு போத்தல் கசிப்பு வைத்தி ருந்தவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அதனைச் செலுத்தத் தவறின் ஒரு மாத காலசிறைத்தண்டனைஅனுபவிக்க வேண்டும் என்று நீதிமன்று உத்தரவிட்டது. (4-6)

## யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 25 ஆயிரம் வீடுகள் தேவை

யாழ்ப்பாண மாவட்டத்தில் பொதுமக்களின் வீட்டுத் தேவைகளை முழுமைப்படுத்த25ஆயிரத்துக்கும்மேற்பட்டவீடுகள்தேவையாக உள்ளன என்று யாழ்ப்பாண மாவட்டச்செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மக்களுக்கு நாம் வீடுகளைப் பரவலாக வழங்கி வருகிறோம். நாம் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் என்ற பாகுபாடு பார்ப்பதில்லை. வீடுகள் தேவையான அனைவருக்கும் வீடுகள் வழங்கி வருகின்றோம் என்று மேலும் தெரிவித்தார். (4-8)

# பன்னாட்டு விசாரணை மூலம் எமக்கு நீதி கிடைக்கவேண்டும்

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஜேர்மன் சட்டவாளரிடம் எடுத்துரைப்பு





கிளிநொச்சி, செப்.20

காணாமல் ஆக்கப்பட்ட தங்களின், உறவினர்களுக்கு நீதியான பன்னாட்டு விசாரணை ஒன்றின் மூலம் நீதிகிடைக்கவேண்டும்என கிளிநொச்சியில்காணாமல்ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஜேர்மனி நாட்டு சட்டவாளரிடம் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சியில் 210 நாள்களைக் கடந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்றுமுன்தினம் ஜேர்மனி நாட்டு சட்டவாளர் இவர்களை சந்தித்துக் கலந்துரையாடினார்.

அப்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர்முடிவடைந்தபின்னரும்எங்களுடைய உறவினர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட நிலையில் காணாமல் போகச்செய்யப்பட்டுள்ளனர்.

எனவே, எமக்கு காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகள் தொடர்பில் நீதிகிடைக்க வேண்டும். அந்த நீதியானது பன்னாட்டு விசாரணை ஒன்றின் மூலமே சாத்தியமாகும்.

காணாமல்ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் எதனையும் செய்யாது. நாட்டின் அரசதலைவரால்நேரடியாக யாழ்ப்பாணத்தில் வைத்து எங்களுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழியே இதுவரை நிறைவேற்றப்படவில்லை. இந்தநிலையில் ஒரு அலுவலகத்தால் எதனை மேற்கொள்ள முடியும்? எங்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்கும் வரைநாம்எமதுபோராட்டத்தைக்கைவிடப் போவதில்லை எனத்தெரிவித்தனர். (ய)

### மக்கள் பிரதிநிதியின் அசட்டையால்

# சாலைகள் சீரமைப்புத் திட்டம் மாகாணத்தில் தள்ளிப்போகிறது

யாழ்ப்பாணம், செப். 20

வடக்கு மாகாணத்தில் உள்ள சாலைகளைச் சீரமைப்பதற்கு 'ஐரோட்' செயற்றிட்டம் அடுத்த ஆண்டும் ஆரம்பிக்கப்படாது என்று சாலை அபிவிருத்தித் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன.

மக்கள் பிரதிநிதிகள் இதற்கு முன்னுரிமையளிக்காது இருப்பதே தாமதத்துக்கு முதன்மைக் காரணம் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அதனால் தற்போதைய நிலையில் ஆயிரம் கிலோமீற்றர் சாலை சீரமைக்கப்படுவது அடுத்த வருடமும் சந்தேகமே என்றும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலிருந்தும் பல சாலைகளைத் தேர்ந்தெடுத்து மொத்தமாக ஆயிரம் கிலோமீற்றர் நீளமான சாலைகளைச் சீரமைப்பது என்றும் 'ஐரோட்' திட்டத்தில் முன்னர் தீர்மானிக்கப்பட்டது. 'ஐரோட்' செயற்றிட்டம் இந்த வருட இறுதியில் கைகூடும் என்றும் தெரிவிக்கப்பட்டது. அதற்கான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. ஆசிய அபிவிருத்தி வங்கியின் இந்தத் திட்ட நிதி உதவியில் குறித்த சாலைகளைக் காப்பற் மற்றும் கொங்கிரீட் சாலைகளாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் நடப்பு வருடத்தின் இறுதியில் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த வருட இறுதியில் செயற்றிட்டம் சார்பான கேள்வி கோரல் நடைபெற்று அடுத்த வருடம் வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தற்போதைய நிலையில், சாலைகள் சீரமைப்பு வேலைகள் 2019ஆம் ஆண்டு ஆரம்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் உள்ள சாலைகளைச் சீரமைப்பதற்குத் துறைசார்ந்த மக்கள் பிரதிநிதிகள் 'ஐரோட்' செயற்றிட்டத்தை வடக்கு மாகாணத்துக்குப் பெற்றுக்கொடுக்க முன்வந்தனர். இதன் அடிப்படையில் பிரதேச சபைகளின் கீழ் உள்ள 500 கிலோமீற்றர் வரையான உள்ளூர் சாலைகள் மற்றும் 700 கிலோமீற்றர் வரையான முதன்மைச் சாலைகள் சீரமைக்கப்பட வேண்டியுள்ளன.

சாலை அபிவிருத்தி அதிகார சபையின் உதவியுடன் முதன்மை சாலைகள் சீரமைப்பின் போது 240 கிலோமீற்றர் நீளமான சாலைகள் யாழ்ப்பாணத்திலும், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களில் 130 தொடக்கம் 140 கிலோமீற்றர் நீளமான சாலைகள் சீரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

பின்னர் இந்தச் செயற்றிட்டங்களை யாரும் செயற்படுத்த முன்வரவில்லை. இதனால் அடுத்த வருடமும் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்க முடியாத நிலை உள்ளது.

அடுத்த வருடத்தின் ஜூலை மாதம் கேள்வி கோரல் நடைபெற்று, 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதமே வேலைகள் ஆரம்பிக்கும் நிலை காணப்படுகிறது.

இதேவேளை, 'ஐரோட்' செயற்றிட்டத்தில் கிழக்கு மாகாணத்தில் அடுத்த வருடம் ஜனவரி மாதம் சாலைகளைச் சீரமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-ரி)

## அரசடி வாள்வெட்டு காணொலி 8 மாதங்களின் பின் நீதிமன்றுக்கு

*அரச பகுப்பாய்வுக்கு அனுப்ப பொலிஸார் அனுமதி கோரினர்*

யாழ்ப்பாணம், செப். 20

யாழ்ப்பாணம் நல்லூர் அரசடியில் இடம்பெற்ற வாள்வெட்டு மற்றும் வர்த்தக நிலையத்துக்குத் தீ வைக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான சிசிரிவி காணொலியை 8 மாதங்களின் பின்னர் அரச பகுப்பாய்வுக்கு அனுப்ப பொலிஸார் நீதிமன்றில் அனுமதி கோரியுள்ளனர்.

கடந்த ஜனவரியில் சம்பவம் இடம்பெற்றது. சாலையில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 10 பேர் வாள்களுடன் சென்று வியாபார நிலையத்தில் நின்றிருந்தவர்களை வாளால் வெட்டி அச்சுறுத்தியுள்ளனர். பின்னர் வியாபார நிலையத்துக்குத் தீ வைத்துள்ளனர். சாலையால் பயணித்தவர்களையும் அவர்கள் வாள்களால் வீசிக்காட்டி அச்சுறுத்தினர்.

அந்தஇடத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமராவில் சம்பவங்கள் பதிவாகின. பொலிஸார் அது பற்றி விசாரணை மேற்கொண்டனர். காணொலிகளைக் கொண்டு 10 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் பாடசாலை மாணவர்களும் உள்ளடங்குவர்.

அவர்கள் பல மாதங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

9 பேர் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். 10 ஆவது சந்தேகநபர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் இந்த வழக்கு யாழ்ப்பாண நீதிவான் மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன்போதே சம்பவம் தொடர்பான காணொலிகளை அரச பகுப்பாய்வுக்கு அனுப்ப அனுமதி கோரினர். அதற்கு நீதிமன்று அனுமதி வழங்கியது. வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (4)

## சுதேச வைத்திய நிலையங்களுக்கு மூலிகைகளை வழங்க ஒழுங்கு

மாகாணத் திணைக்களம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.செப்.20

வடக்கு மாகாணத்தில் உள்ள சுதேச வைத்திய நிலையங்களுக்கு ஒரு வருடத்துக்குத் தேவையான மூலிகை வகைகளை உற்பத்தி செய்கை செய்து வழங்கவுள்ளதாக மாகாண சுதேச வைத்தியத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் சுதேச வைத்தியத் திணைக்களத்துக்குச் சொந்தமான 7 மூலிகைத் தோட்டங்கள் உள்ளன. யாழ்ப்பாணத்தில் 3 தோட்டங்களும், வவுனியா, மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் தலா ஒரு தோட்டமும் உள்ளன.

இவற்றில் குறிப்பிட்ட அளவு மூலிகைகள் செய்கை செய்து சுதேச வைத்திய நிலையங்களுக்கு விநியோக்கிக்கப்பட்டு வருகின்றன. எனினும், சுதேச வைத்தியம் சார்ந்த ஏனைய நிலையங்களுக்கும் மூலிகைகள் தேவையாக உள்ளன.

அதற்கமைவாக மூலிகைத் தோட்டங்களில், சுதேச வைத்திய நிலையங்களின் தேவைக்கு ஏற்ப ஒருவருடத்துக்குத் தேவையான மூலிகைகள் செய்கை செய்து விநியோகிக்கப்பட உள்ளன. இதற்கான நீண்டகால செயற்றிட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் புத்தூர், நவக்கிரி மற்றும் திருநெல்வேலி ஆகிய பிரதேசங்களில் அதிகளவான மூலிகை இனங்கள் உள்ளன.

அங்கிருந்து ஏனைய மாவட்டங்களுக்கு மூலிகைகளை அறுவடை செய்து வழங்கும் செயற்பாடும் தற்பொழுது நடைபெற்று வருகின்றது. வடக்கு மாகாணத்தில் உள்ள மூலிகைத் தோட்டங்களில் குறித்த ஒரு மூலிகை இனத்தை அதிகளவில் பயிரிட்டு, அதனை அனைத்து சுதேச வைத்திய நிலையங்களுக்கும் விநியோகிக்கப்படவுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(ய-ரி)

## முஸ்லிம்களின் மீள்குடியமர்வில் தமிழ்க் கூட்டமைப்பு பாரபட்சம்

மாகாணசபை உறுப்பினர் அஸ்மின் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப்.20

யாழ்ப்பாணத்தில் அகதிகளாக்கப்பட்ட முஸ்லிம் மக்களின் மீள் குடியமர்வு விடயத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் பாரபட்சம் காட்டுகின்றனர் என்று வடக்கு மாகாணசபை உறுப்பினர் அஸ்மின் குற்றஞ்சாட்டினார். யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக் கூட்டம் நேற்றுமுன்தினம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

1990ஆம் ஆண்டுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் 3417 முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்தன என யாழ். மாவட்டச் செயலகத் தரவுகள் தெரிவிக்கின்றன. 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் அந்த எண்ணிக்கை அதிகரித்திருக்கும். ஆனால் இன்றுவரை 1000 முஸ்லிம் குடும்பங்களுக்குக் கூட வீட்டுத்திட்டங்கள் வழங்கப்படவில்லை.

இதனை ஒரு பாரபட்சமான நடவடிக்கையாகவே மக்கள் நோக்குகின்றார்கள். வீட்டுத்திட்டம் குறித்து நாம் பேசும் போதெல்லாம், போதிய வீட்டுத்திட்டங்கள் எம்மிடம் இல்லை என்று அதிகாரிகள் கூறுகின்றார்கள்.

இந்திய அரசோடு பேசி 300 வீட்டுத்திட்டங்களை நாம் கொண்டுவந்தோம். பொதுவான நடைமுறைகளை மிகவும் இறுக்கமாகக் கடைப்பிடித்த அதிகாரிகள், 50இற்கும் குறைவான வீடுகளையே முஸ்லிம் மக்கள் பெற்றுக்கொள்ள வழிவிட்டார்கள். அதன் பின்னரும் இதே நிலைதான் தொடர்ந்தது.

இப்போது சிறப்பு மீள்குடியேற்ற செயலணியின் மூலம் 200 வீடுகள் முஸ்லிம் மக்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. அதற்கு அமைச்சரவை அங்கீகாரமும் வழங்கப்பட்டிருக்கின்றது.

ஆனால் அதிலும் இதே அதிகாரிகள் பொதுவான நடைமுறை என்ற பெயரில் முஸ்லிம் மக்கள் பயன்பெறுவதைத் தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள்.

வேறு மாவட்டங்களில் வீடுகள் கிடையாது என்று கடிதம் எடுத்துக்கொண்டு வாருங்கள் என்று கூறுகின்றார்கள்.

அப்படியாயின் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய 24 மாவட்டங்களுக்கும் எமது மக்கள் செல்லவேண்டும். அகதிகளாக்கப்பட்ட யாழ்ப்பாண முஸ்லிம் மக்கள் குறித்த பதிவுகளை எந்த அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ள முடியாது.

புத்தளம் மாவட்டச் செயலரிடம் சென்று விசாரித்தால் அவர், தனக்கு இந்த மக்களைப் பற்றி எதுவுமே தெரியாது என்றுதான் பதில் தருவார்.

அப்படியான நிலையில் அந்தப் பாமர மக்கள் அலையவிடப்பட்டிருக்கின்றார்கள். இது மிகவும் மோசமான நடவடிக்கையாகும்.

இப்போது ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்ற 200 வீடுகளுக்குமான பயனாளிகளாக முஸ்லிம் குடும்பங்களை உள்வாங்க வேண்டும். இதற்கு சிறப்பு வேலைத்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

அத்தோடு பறச்சேரிவயல் காணிகளில் வீடுகளை அமைப்பதற்கான அனுமதியையும் உடனடியாக வழங்கவேண்டும். முஸ்லிம்களின் குடியேற்றத்துக்கு தடையாக இருக்க வேண்டாம் - என்றார்.

(ய-8)

## மோ. சைக்கிள் உரிமையாளர் ரூ.14 ஆயிரத்தை இழந்தார்

*ஆவணங்கள் இல்லாதவருக்கு அதனை வழங்கிய குற்றத்துக்காக*

கிளிநொச்சி, செப். 20

சட்ட ரீதியான ஆவணங்கள் இல்லாதவருக்கு மோட்டார் சைக்கிள் செலுத்தக் கொடுத்தவர் 14 ஆயிரம் ரூபாவை தண்டமாக இழந்தார்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் காப்புறுதிப் பத்திரம், வரிப் பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாத ஒருவருக்கு மற்றொருவர் தனது வாகனத்தைச் செலுத்தக் கொடுத்துள்ளார்.

அவர் சாலையில் பயணிக்கும்போது விபத்தை ஏற்படுத்தியுள்ளார். அதனால் பொலிஸாரிடம் மாட்டினார்.

அவருக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டது. கிளிநொச்சி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டார். அதனை யடுத்து அவருக்கு 14 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கிளிநொச்சிப் பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய சிறுவனே விபத்தை ஏற்படுத்தியிருந்தார். அதனால் பயணி ஒருவர் காயமடைந்திருந்தார். அதனையடுத்துக் குறித்த குற்றச்சாட்டுக்காக சிறுவனை அரச சான்று பெற்ற பாடசாலையில் தடுத்து வைக்குமாறு மன்று உத்தரவிட்டிருந்தது.

அந்தச் சிறுவ்னுக்கே வாகனத்தைச் செலுத்தக் கொடுத்த வாகன உரிமையாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். (4-6)

# மகளிரின் சுயதொழில் நிலையமாக அச்சுவேலி நெசவு நிலையம்

## ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தீர்மானம்

அச்சவேலி, செப்.20
அச்சுவேலி நெசவு நிலையம் உடனடியாக மீட்கப்பட்டு பெண்களின் தொழில் முயற்சி நிலையமாகப் பயன் படுத்தப்படவேண்டும். இதற்கான நடவடிக்கைகள் உடனடியாகவே முன்னெடுக்கப்பட வேண்டும் என வலி. கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

வலி. கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று மாலை வலி. கிழக்கு பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதற்கு இணைத்தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் தலைமைவகித்தார். இந்தக் கூட்டத்தின் போது அச்சுவேலிநெசவுநிலையத்தின் தற்போதையநிலை தொடர்பில் ஆராயப்பட்டது. இதன்போது குறித்த நெசவு நிலையம் தற்பொது சயமக்குழுவினருடைய தேவைக்காகப் பயன்படுத்தப்படுவதாகவும் அதனை மீளப்பெற்று பெண்களுடைய சுயதொழில் முயற்சிக்குரிய இடமாக மாற்ற வேண்டும் என்று கூட்டத்தில் கலந்து கொண்ட பொது மக்கள் கோரினர். இதனை அடுத்து ஒருமனதாக குறித்த நிலையத்தை மீளப் பெறுவதாக தீர்மானிக்கப்பட்டது. பிரதேச் செயலாளர் திருமதி சுபாஜினிநெசவுநிலையம்தொடர்பானநிலைப்பாடுபற்றி தெரிவித்திருந்தார்.

குறித்த நெசவு நிலயத்தை மீளப் பெற்று பெண்களின் சுயதொழில்முயற்சிக்குபயன்படுமாறுமாற்றவேண்டும் என அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்களால் அண்மையில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (21.11)

**கார் விற்பனைக்கு**
NISSAN SUNNY Super Saloon QBi52004 பதிவு செய்யப்பட்டது. 076 683 7056
(2 மணிக்கு பின் தொடர்பு கொள்ளவும்)

**சிறுநீரகம் தேவை**
54 வயதுடைய பெண் ஒருவருக்கு B அல்லது O வகையைச் சேர்ந்த சிறுநீரகம் அவசியமாகத் தேவைப்படுகிறது. சிறுநீரகம் கொடுக்க விரும்பியவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்
**T. P : 075 435 0432, 011 236 1513**

## சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சமாசத்துக்கு உப தலைவராகத் தமிழர்

யாழ்ப்பாணம், செப்.20
இலங்கை சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்தின் உபதலைவராக இந்தமுறை தமிழர் ஒருவருக்கு இடம் வழங்கப்பட்டுள்ளது.



வடக்குமாகாணத்தைப்பிரதிநிதித்துவப்படுத்தும் முகமாக யாழ். மாவட்டச் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவரும் தமிழ் அரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினருமான செ. இலகுநாதனுக்கே இவ்வாறு சம்மேளன உபதலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

கேகாலை கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் கடந்த வாரம் இலங்கை சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்தின் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. இந்தத் தெரிவின் போது கலாநிதி பி. ஏ. கிரிவிந் தெனியா சம்மேளனத்தின் தலைவராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

ஒன்பது நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவில் இதுவரை காலமும் தமிழர் எவரும் தெரிவு செய்யப்படவில்லை.

இந்தமுறை நிர்வாக சபைத் தெரிவின்போது, தமிழர் ஒருவர் கட்டாயம் தெரிவு செய்யப்பட்டு அவருக்கு உப தலைவர் பதவி வழங்கப்பட வேண்டும்என்று கலாநிதி பி. ஏ. கிரிவந்தெனியா கூட்டத்தில் சுட்டிக்காட்டினார்.

அதற்கமைய வடக்கு மாகாணத்தை பிரதிநிதிப்படுத்தும் முகமாக யாழ். மாவட்டச் சிக்கனக்கடன் வழங்கும் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத் தலைவர் செ. இலகுநாதனுக்கு தெரிவின்போது உபதலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது. (வ-17)

## அத்தியார் இந்துவின் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், செப்.20
யாழ். நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் கு. ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார். (வ-17)

சீட்டிழுப்பு வாரம்: 191
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 19.09.2017
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 102,405,512/-
B 03 16 18 36
15 64 66 79

சீட்டிழுப்பு வாரம்: 20
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2017.09.19
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 55,443,705/-
அத கோடிபதி
வெற்றி இலக்கங்கள்
04 36 53 55 H
18 28 33 41

திகதி 19.09.2017 | வெற்றி வாரம் 2187 | வர்ணம் நீலம்
இடபம்
வெற்றி இலக்கங்கள் 24 36 52 57
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 517, 700/=
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்
10 35 40 44
2017.09.22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 601 வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 19.09.2017
வெற்றி இலக்கங்கள்
18 37 54 56 D
09 11 12 33
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 10,684,632/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்வு 25.05.1940 — உதிர்வு 02.10.2016



அமரர் **பொன்னையா துரைராஜா (பீற்றர்)**
(இளைப்பாறிய இ.போ.ச. சாலைப் பரிசோதகர்)
**திதி - 20.09.2017**

ஓர் ஆண்டு கடந்தாலும்
ஓர் ஆயிரம் உங்கள் நினைவுகள்
என்றும் எம்மனங்களில் பசுமையாக....

பிருந்தாவனம்,
அல்வாய்.

என்றும் நினைவுகளுடன்:
மனைவி, மகள், மருமகன், பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி உமாதேவி ஜெயவீரசிங்கம்
அவர்களின் பாசமிகு கணவர்

**கந்தையா ஜெயவீரசிங்கம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**வட்டமேசை,**
**யா/டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி.**

## மரண அறிவித்தல்

**பாலசுந்தரன் பிரசன்னா**



அல்லையம்பதி, துன்னாலை, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுந்தரன் பிரசன்னா நேற்று (19.09.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுந்தரன் - வசந்தகுமாரி தம்பதிகளின் பாசமிகு புதல்வனும், பிருந்தாவின் பாசமிகு அண்ணனும், திருநாவுக்கரசு, நிர்மலாதேவி, குகனேந்திரன், சந்திரமலர் ஆகியோரின் மருமகனும், தியாகராஜா, சிங்காரம், பரிபூரணம், சாம்பசிவம் ஆகியோரின் பேரனும், மயூரனின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2017) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அல்லையம்பதி, துன்னாலை. தகவல் : குடும்பத்தினர்.**

## வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் (VOGT)
## பதவி வெற்றிடம் / ஆள்சேர்ப்பு

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம், இலங்கை சோசலிசக் குடியரசின் 1980 ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புக்கள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டதாகும். இந்நிறுவனத்திற்கு பின்வரும் தகைமையுடைய வடமராட்சியில் நிரந்தரமாக வசிக்கும் 18 – 35 வயதிற்குட்பட்ட ஆண்/பெண் இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி நிலை : – களஉத்தியோகத்தர்கள் (ஆண் 01, பெண் 01)**

தகைமைகள் : –
1. க.பொ.த. (உயர்தரம்) சித்தி அல்லது அதற்கு மேற்பட்டது
2. ஆங்கில அறிவு, கணினி அறிவு
3. மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம்
4. ஏனைய தகைமைகள்

சேவையின் தன்மை – கிராம அமைப்புக்களுடனும் மக்களுடனும் சமூக அணி திரட்டும் ஆற்றலை மேம்படுத்தும் திறன், பேச்சாற்றல், தொடர்பாடல், ஆவணப்படுத்தல், அறிக்கை சமர்ப்பித்தல் எனும் திறன்களை கொண்டிருத்தல்.

விண்ணப்பதாரி தமது சுயவிவரக்கோவையுடன் விண்ணப்பங்களை தலைவர், வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் (VOGT), அல்வாய் கிழக்கு, அல்வாய் என்ற முகவரிக்கு 27.09.2017 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை
குடும்ப நல சேவையாளர் **திருமதி கோகுலதீபா (தீபா) தர்மசீலன்** அவர்களின் அன்புக் கணவர்

**தர்மசிங்கம் தர்மசீலன்**
(ஆனந்தன் வடலி வீதி, அரியாலை)

அவர்கள் கடந்த 16 ஆம் திகதி 16.09.2017 அன்று அகாலமரணமான தகவல் அறிந்து அதிர்ச்சியுற்றோம். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைக் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**குடும்ப சுகாதார உத்தியோகத்தர் சங்கம்.**
**யாழ். மாவட்டம்.**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 21.08.2017 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் பாலன் செல்லத்தம்பி**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (20.09.2017) புதன்கிழமை காலை 6 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்பட்டு பின்னர் பிற்பகல் ஒரு மணியளவில் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சர்வோதயா வீதி,
ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

**குடும்பத்தினர்.**

# வங்கி ஏ.ரி.எம். அட்டை திருடி ரூ.36 ஆயிரம் பெறப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், செப். 20

வீடு புகுந்து தன்னியக்கப் பரிமாற்றுஅட்டையைத்திருடிஅதன் மூலமாக வங்கியில் 36 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளதாக அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் அச்சுவேலியில் இடம் பெற்றது. நல்லூரடியைச் சேர்ந்த குடும்பத்தவர்களதுதன்னியக்கப் பரிமாற்று அட்டையே திரு டப்பட்டது. அச்சுவேலிக்குச்சென்றகுடும்பப்பெண் அங்குள்ள தனது தாயாரது வீட்டில் தனது கைப்பையை வைத்துவிட்டுக் கடந்த வெள்ளிக்கிழமை கோயிலுக்குச் சென்றுள்ளார்.

மறுநாள்தேவைநிமித்தம்தன்னியக்க அட்டையைத் தேடியபோது அதனைக் காணவில்லை. அட்டைக்குரிய வங்கியுடன் தொடர்பு கொண்டு விசாரித்தபோது அந்த அட்டையிலிருந்து ஆயிரம் 5 ஆயிரம்30ஆயிரம்என3கட்டங்களாக 36 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளமை தெரியவந்தது. அதுதொடர்பில்அச்சுவேலிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எவரும் கைது செய்யப்பட வில்லை. விசாரணை மேற்கொண்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (4)

# கைவிடப்பட்ட விவசாயக் காணிகளை பொறுப்பேற்க வேண்டும் பிரதேச சபை

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெயசேகரம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப் 20

வடக்கு மாகாணத்தில் கைவிடப்பட்டுள்ள நிலையில் உள்ள விவசாயக் காணிகளை பிரதேச சபைகள் பொறுப்பேற்க வேண்டும். அவற்றைக் குத்தகைக்கு எடுத்து விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தயார் படுத்த வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெயசேகரம் தெரிவித்தார்.

“காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளக் கூடிய சந்தையை நோக்கிய நிலைபேறான விவசாயம்' எனும் தொனிப்பொருளிலான வடக்கு மாகாண விவசாயக் கண்காட்சி யாழ்ப்பாணம் பலாலி வீதி திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம், விவசாய ஆராய்ச்சி நிலையம் மற்றும் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் இணைந்த வளாகத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:



வடக்கு மாகாணத்தில் ஏராளமான விவசாயக் காணிகள் உரிமையாளர்களின் பராமரிப்புக்கள் இல்லாது. புற்களால் சூழ்ந்து காணப்படுகின்றன. அவ்வாறு காணப்படும் விவசாயக் காணிகளின் உரிமையாளர்களின் விபரங்களைத் திரட்டி, அந்தந்த பிரதேச சபைகள் குறித்த விவசாய நிலங்களைக் குத்தகைக்கு எடுத்து விவசாய நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் போர்க் காலத்தில் எமது மக்களுக்கான உணவு தடைப்பட்ட போது, வடக்கு மாகாண மக்கள் தமது விவசாய உற்பத்திகள் ஊடாக தமது உணவுத் தேவைகளைப் நிறைவு செய்திருந்தனர். ஆனால் போர் முடிவடைந்துள்ள நிலையில் தற்போது எமக்குத் தேவையான உணவுகளை உற்பத்தி செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலையில் உள்ளோம்.

எனவே நாம் எமக்கான விவசாய மற்றும் மீன்பிடி உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவை உள்ளது - என்றார். நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் சிவநேசன், வடக்கு மாகாண விவசாய திணைக்களப் பணிப்பாளர், அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-8)

# கல்வியங்காட்டுச் சந்தை தற்காலிகமாக இடமாற்றம்

## சீரமைப்புப் பணிகளுக்காக

யாழ்ப்பாணம், செப். 20

கல்வியங்காட்டுப் பொதுச் சந்தையின் சீரமைப்புப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. அதற்கு முன்னேற்பாடாகச்சந்தைதற்காலிகமாக ஆடியபாதம் சாலையில் ஸ்ரீஇராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்துக்கு அருகில் உள்ள தனியார் காணியில் அமைக்கப்படுகிறது. முதற்கட்டமாகசந்தையின்மரக்கறிமற்றும்பழங்கள் விற்பனைத் தொகுதி சீரமைக்கப்பட வுள்ளது.

அதன்பின்னர் சந்தையின் ஆடியபாதம் சாலைப்பக்கமாக இருக்கும் கடைத் தொகுதிகளும் சீரமைக்கப்படவுள்ளன என்று யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் பொ. வாகீசன் தெரிவித்தார்.

சீரமைப்புப் பணிகளைத் தொடர்ந்து சந்தை வளாகத்தில் உள்ள மீன்சந்தைக் கட்டடத் தொகுதியும் இடித்து



அகலமாக்கப்பட்டு சீரமைக்கப்படவுள்ளது.

சந்தை வேலைகள் முடிவடைவதற்குச்சில்மாதங்கள் செல்லும். அதனாலேயே சந்தை தற்காலிகமாக இடம் மாறுகிறது. அதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மழைகாலம்வருவதற்குமுன்பாகக்கொட்டகைகளை அமைத்து முடிவுறுத்த வேண்டும். அதற்கான பணிகள் துரிதப்படுத்தப்பட்டிருக்கின்றன.

அத்துடன் குடிதண்ணீர் மற்றும்தற்காலிக மலசலகூட வசதிகளும் அமையவுள்ளசந்தைப்பகுதியில்அமைக்கப்படும் என்று ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (4-17)

## மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை பொன்னுச்சாமி



கச்சாய், கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கு, இராமா கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பொன்னுச்சாமி 17.09.2017 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அப்பாக்குட்டி செல்லையா - மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும் ஞானம்மாவின் அன்புக்கணவரும் ஸ்ரீபத்மநாதன், கலாரஞ்சனி (U.K.), கமலரஞ்சனி, யோகநாதன் (அதிபர் - வ/கற்காரம் குளம் இளங்கோ வித்தியாலயம்), விஜய நாதன் (கனடா), இதயரஞ்சனி (கனடா), விமலரஞ்சனி, சுபரஞ்சனி (ஆசிரியை - யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி), கோபிநாதன் (U.K.)ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கனகம்மா, திருஞானசம்பந்தமூர்த்திராசா (U.K.), காலஞ்சென்ற கணேசமூர்த்தி, சித்திவிநாயகர், இராஜபாமா (ஆசிரியை - நெளுக்குளம் கலைமகள் ம.வி.), அருள்நிதி (கனடா), பாஸ்கரன் (கனடா), குகேந்திரன் (உரிமையாளர் - கஜமுகன் மல்ரிசென்ரர், மீசாலை), அனுச்சந்திரா (U.K.) ஆகியோரின் பாசமிகு மாமனும் காலஞ்சென்ற தம்பிஐயா, காலஞ்சென்ற சுப்பிரமணியம், காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ஆறுமுகம், அன்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிரகலதா, பிரதீபன் (பிரான்ஸ்), பிறேமலதா (பிரான்ஸ்), சாந்தீபன் (துபாலதிபர் - மருதானை, கொழும்பு), வசந்தன் (கனடா), சியாழினி (U.K.), கஜந்தன், பிருந்தன், விதுஷன், நகுலபாஸ்கரன், சங்கீதன், ஹரிஸ் (கனடா), ஆதவன் (கனடா), லௌகீகன் (கனடா), மேனகா (கனடா), நிரேஸ், கீர்த்தனா, கஜனி, ஜஸ்ருதி, சேஷகன், கெயிலன் (U.K.) ஆகியோரின் அன்புப் பேரனும் கின்சியா, தனுஸ்கா, சானுஜன், சானிகா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.09.2017) வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு இல்லத்தில் நடைபெற்று மு.ப.10.00 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மீசாலை வடக்கு, இராமாவில், கொடிகாமம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**021 205 0376,**
**077 732 8657, 077 368 6873**

# பருத்தித்துறை விகாரைக்குள் முன்னாள் போராளி போராட்டம்

பருத்தித்துறை, செப்.20

அரசுக்கு எதிரான கவனவீர்ப்புப் போராட்டம் என்று எழுதப்பட்ட பனருடன் பருத்தித்துறையில் ஒருவர் போராட்டத்தில் ஈடுபட்டார். அவர் முன்னாள் போராளி என்று குறிப்பிட்டிருந்தார். நேற்றுக் காலை இந்தப் போராட்டம் இடம்பெற்றது. பருத்தித்துறை முனையில் உள்ள புத்த விகாரைக்குள் அவர் போராட்டத்தை முன்னெடுத்தார். 2013 அம் ஆண்டு நீர்வேலிப்ப குதியில் சென்று கொண்டிருந்த போது தனது பணத்தை கொள்ளையடித்ததாகவும், இன்று வரை அது மீட்டுக்கொடுக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார். அரசு முன்னாள் போராளிகள் விடையத்தில் கூடிய கவனமெடுத்து தீர்க்கமான முடிவுகளை கூற வேண்டும் என்றும் அவர் தெரிவித்திருந்தார். நேற்று மாலை போராட்டம் இடம்பெற்ற




பகுதிக்குச் சென்ற பருத்தித்துறைப் பொலிஸார் குறித்த நபரை சமாதானப்படுத்தினர். அவர் போராட்டத்தை நிறைவு செய்தார். (21,26)

# வடமராட்சியில் இரவோடிரவாக எல்லைக்கற்கள் வனஜீவராசிகள் திணைக்களம் நட்டது என்றனர் மக்கள்

கிளிநொச்சி செப் 20

வடமராட்சி கட்டைக்காடுப் பகுதியில் நேற்று முன்தினம் இரவோடிரவாக யாருக்கும் தெரியாமல் வெள்ளைநிற எல்லைக்கற்கள் நடப்பட்டுள்ளன என கிராம மட்ட அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

இதுதொடர்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

வடமராட்சியின் பகுதிகளில் தொடர்ச்சியாக வனஜீவராசிகள்திணைக்களத்தினால்மக்களின் காணிகளை உள்ளடக்கிய வகையில் எல்லைக்கற்கள் நடப்பட்டு வருகின்றன. இந்தநிலையில் நேற்றுமுன்தினம் இரவு முன்பள்ளி காணிக்குள்ளும் கப்பலேந்தி மாதா ஆலயத்துக்கு அருகிலும் இவ்வாறு எல்லைக்கற்கள் நடப்பட்டுள்ளன.

இதுதொடர்பாகவனஜீவராசிகள்திணைக்களத்திடம் கேட்டபோது, அவ்வாறுதாம்குறித்த பகுதியில் எல்லைக்கற்களை நடவில்லை எனத்தெரிவிக்கின்றனர்.

அவர்கள் தமது எல்லைகளை அடையாளமிட்டால் அங்கு செல்லக் கூட அனுமதிக்க மாட்டார்கள்.

அதேபோல் சுண்டிக்குளத்தில் உள்ள அன்னைவேளங்கன்னிஆலயம்கட்டப்படுகின்றபோது அங்கே துண்டறிக்கை ஒன்று ஒட்டப்பட்டது. அதில், வேலைகள் எவையும் மேற்கொள்ள வேண்டாம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இருப்பினும் நாங்கள் தொடர்ச்சியாக சீரமைப்புப்பணிகளில்ஈடுபட்டுவருகின்றோம். எனவே, இதுதொடர்பாக உரிய அதிகாரிகள் கவனமெடுக்கவேண்டும்எனகட்டைக்காடு கிராம அபிவிருத்தி சங்க தலைவர் யா. நி. விமலதாஸ் தெரிவித்தார்

இதுதொடர்பாகநாம்மருதங்கேணிபிரதேச செயலாளரைதொலைபேசிஊடாகதொடர்பு கொண்டபோதும் அது பயனளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ய-6)

# வடக்கு - தெற்கு இனவாதிகளிடையே உத்தியோகப்பற்றற்ற ஒப்பந்தங்கள்

## அமைச்சர் மனோகணேசனின் கண்டுபிடிப்பு இது

கொழும்பு, செப். 20
வடக்கு - தெற்கு இனவாதிகளிடையே உத்தியோகப்பற்றற்ற ஒப்பந்தங்கள் காணப்படுகின்றன. இவர்கள் அனைவரும் உறவினர்களாவர். இப்படியான உறவினர்கள் சிறிதளவே இருக்கின்றனர். இவர்களை ஓரம்கட்டி இலங்கையர்கள் என்பதன் கீழ் பயணிப்போம். இவ்வாறு அமைச்சர் மனோகணேசன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நியூயோர்க்குக்குச் சென்று ஐ.நா. பொதுச் சபை அமர்வில் உரையாற்றவுள்ளார். அவர் உரையாற்றும்போது அங்குள்ள இனவாதக் குழுக்கள் அவருக்கெதிராகப் போராட்டங்களைச் செய்யவுள்ளனர். பரவாயில்லை. இன்று இந்த நாட்டில் சகவாழ்வை முன்னிலைப்படுத்திப் பயணத்தை ஆரம்பித்திருக்கின்றோம்.
அதனைப் புரிந்துகொள்ள முடியாதவர்களே இன்னும் இனவாதத்தை தலைதூக்கச் செய்கின்றனர். பன்னாட்டுச் சமூகத்தில் மட்டுமல்ல, இனவாதம் எமது உள்நாட்டிலும் இருக்கின்றது. வடக்கிலும், தெற்கிலும் இருக்கின்றனர். வடக்கிலுள்ள இனவாதிகள் வாய் திறக்கும்போது தெற்கிலுள்ள இனவாதிகளுக்கு அவல் கிடைக்கின்றது. அதேபோல தெற்கிலுள்ள இனவாதிகள் வாய்திறந்தால் வடக்கிலுள்ள இனவாதிகளுக்கு அவல் கிடைக்கிறது. வடக்கு-தெற்கு இனவாதிகளிடையே உத்தியோகப்பற்றற்ற ஒப்பந்தங்கள் காணப்படுகின்றன. இவர்கள் அனைவரும் உறவினர்களாவர். அதனால் இப்படியான உறவினர்கள் சிறிதளவே இருக்கின்றனர். இவர்களை ஓரங்கட்டி இலங்கையர்கள் என்பதன் கீழ்ப் பயணிப்போம்.
இவற்றைக் கணக்கில் எடுக்கவேண்டாம். தேர்தல் காலத்தில் பார்த்துக் கொள்ளுங்கள். மற்றைய நேரங்களில் இலங்கையர்களாக நினைத்துக் கொள்ளுங்கள். இதனைப் புரிந்துகொண்டால் ஜெனீவா, ஐ.நா. பொதுச் சபை செல்ல வேண்டிய தேவை ஏற்படாது. அதேபோல ஹூசைன், டிரம்ப், நரேந்திர மோடி ஆகியோருடன் பேசுவதற்கும் அவசியம் ஏற்படாது - என்றார். (5)

# பிரதிவாதிகள் இல்லாமல் வழக்கு நடத்தத் தீர்மானம்

கொழும்பு, செப். 20
நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச உள்ளிட்ட அறுவருக்கு எதிரான வழக்கில், பிரதிவாதிகள் இருவர் இல்லாமல் வழக்கை நடத்துவதற்குக் கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்மானித்தது.
நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்குச் சொந்தமான கவர் கோப்ஸ் நிறுவனத்தின் பங்குகளை விற்று 30 மில்லியன் ரூபாவை பணச் சலவையில் ஈடுபடுத்தினர் என்ற குற்றச்சாட்டில், நாமல் ராஜபக்ச உள்ளிட்ட ஆறு பேருக்கு எதிராக நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.
கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க முன்னிலையில் வழக்கு நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டது. பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்ட இருவர் தலைமறைவாகியுள்ளனர் என்றும் அவர்கள் இல்லாமல் வழக்கைக் கொண்டு நடத்துவதற்குப் பிரதிசொலிசிட்டர் ஜெனரல் விடுத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்டு நீதிமன்று அனுமதித்தது.
(5)

# மடியில் கனமிருந்தால்தானே வழியில் பயமிருக்கவேண்டும்

## போர்க்குற்றச்சாட்டுக்கு அஞ்சும் ராணுவத்தை பார்த்துக் கேள்வி எழுப்புகிறார் பொன்சேகா



கொழும்பு, செப். 20
"தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் ஈடுபட்ட படையினர் எவரும், குற்றங்கள் எதையும் செய்யாவிடின் எந்தக் கவலையும் கொள்ளத் தேவையில்லையே?" இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதியும், அமைச்சருமான சரத் பொன்சேகா கேள்வி எழுப்பியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
காணாமற்போனோர் அலுவலகம் தனியே வடக்கு கிழக்கு மக்களுக்காக அமைக்கப்படவில்லை. தெற்கிலுள்ள மக்களுக்காகவும் தான் அமைக்கப்பட்டுள்ளது.
போரில் ஈடுபட்ட படையினர் மீது நடவடிக்கை எடுப்பதற்காகத் தான் இந்தப் பணியகம் அமைக்கப்பட்டுள்ளதாக மகிந்த அணியினர் கூறுகின்றனர். தாம் எந்தத் தவறையும் செய்யவில்லை என்று இதயபூர்வமாக நம்புகின்ற எந்தப் படைவீரரும், இது பற்றி எந்தக் கவலையும் கொள்ளத் தேவையில்லை. மகிந்த அணியினர் அவர்களின் அரசியல் நலன்களுக்காகவே, படையினர் சார்பாக அறிக்கைகளை வெளியிடுகின்றனர் - என்றார். (5)

# இலங்கையை சுயாதீனமாக செயற்பட அனுமதியுங்கள்

## கெஞ்சுகிறார் சுப்பிமணிய சுவாமி

கொழும்பு, செப். 20
இலங்கையை சுயாதீனமாகச் செயற்பட அனுமதிக்குமாறு இந்திய பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான சுப்ரமணிய சுவாமி தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கையில் போர் நிறைவடைந்து பல வருடங்கள் கடந்து தற்போது சமாதானத்தை நோக்கி நகர்கிறது. ஆனால் இன்று நிலவும் பன்னாட்டு அழுத்தங்கள் போரைப் போன்ற மனநிலையிலேயே இலங்கையை வைத்துள்ளது.
இந்த நிலமையிலிருந்து இலங்கையை விடுவித்து, சுயாதீனமாக செயற்படுவதற்குப் பன்னாட்டுச் சமூகம் அனுமதிக்க வேண்டும் -என்றார். (5.33)

# மைத்திரி ஹூசைன் சந்திப்பு வெள்ளியன்று

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹூசைனை, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.
நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள இந்தச் சந்திப்பு தனி அறையில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கையின் நல்லிணக்க முயற்சிகள் தாமதமடைவதாக ஹூசைன், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் ஆரம்பத்தில் குற்றம் சுமத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# அரசியலுக்கு என் பிள்ளைகள் வரமாட்டார்கள்

## *சந்திரிகா அம்மையார் திட்டவட்டம்*

கொழும்பு, செப். 20
எனது மகன் விமுக்தி குமாரதுங்கவை அரசியலுக்கு கொண்டு வரும் நோக்கம் கிடையாது என்று முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எனது மகன் விமுக்தி குமாரதுங்கவை அரசியலுக்குள் நுழைவதற்கு நான் ஊக்குவிப்பதாக சில சமூக ஊடகங்களிலும், இணையங்களிலும் செய்திகள் வெளியாகியுள்ளன. எனது மகனையோ, மகளையோ நான் அரசியலுக்குத் தயார்படுத்தவில்லை. அரசியல்வாதிகளை நான் தெரிவு செய்ய முடியாது. மக்கள் தான் தெரிவு செய்கிறார்கள் - என்றார். (5)

# பாடசாலைகளின் பழைய கட்டடங்களை ஆய்வுசெய்யத் திட்டம்

## *கல்வி இராஜாங்க அமைச்சின் செயலர் கூறுகின்றார்*

நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளின் பழைய கட்டடங்கள் தொடர்பில் ஆராய்வதற்குக் கல்வி இராஜாங்க அமைச்சு தீர்மா னித்துள்ளது.
நாட்டில் உள்ள சில பாடசாலைகளில் நூறு வருடங்களுக்கும் பழமையான கட்டடங்கள் உள்ளதாகக் கல்வி இராஜாங்க அமைச்சின் செயலர் திஸ்ஸ ஹேவாவிதான தெரிவித்துள்ளார்.
அந்தக் கட்டடங்களின் பாதுகாப்புத் தொடர்பில் சந்தேகம் நிலவுவதாக மாகாண கல்வித் திணைக்கள அதிகாரிகள் அமைச்சுக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.
அதனடிப்படையில் அமைச்சில் உள்ள பொறியியற் பிரிவின் ஊடாக இது தொடர்பில் ஆராய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
ஆரம்பத்தில் அடையாளம் காணப்படும் கட்டடங்களை மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது - என்றார். (5)

# போர்முடிந்தாலும் பாதுகாப்பை பலப்படுத்துவோம்

## பதில் பாதுகாப்பு அமைச்சர் ருவான் தெரிவிப்பு

கொழும்பு, செப். 20
படையினருக்குத் தேவையான நவீன உபகரணங்களை வழங்கி தேசியப் பாதுகாப்பை மேலும் உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதில் பாதுகாப்பு அமைச்சர் ருவான் விஜயவர்தன தெரிவித்தார்.
பியகம பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவித்தார். இதன்போது மேலும் தெரிவித்ததாவது:
படையினருக்குத் தேவையான நவீன உபகரணங்கள், கருவிகள் மற்றும் தொழில்நுட்பத்தை வழங்கி தேசியப் பாதுகாப்பை மேலும் உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார். இந்தக் காலப் பகுதியில் பாதுகாப்பு பதில் அமைச்சராகக் கடமையாற்றுமாறு அரச தலைவர் எனக்குப் பணிப்புரை விடுத்தார். என் மீது கொண்ட நம்பிக்கையால் பதில் பாதுகாப்பு அமைச்சர் பதவியை அரச தலைவர் வழங்கியுள்ளார்.
எனக்கு வழங்கப்பட்ட பொறுப்பை உரிய முறையில் நிறைவேற்றுவதே எனது இலக்காகும். நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்களைக் கைது செய்யும் பொறுப்பு பொலிஸாரைச் சாரும். அவ்வாறு வடக்கிலும், கிழக்கிலும் குற்றச் செயல்களில் ஈடுபட்ட பெரும் எண்ணிக்கையிலானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறான விடயங்கள் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையாது - என்றார். (5)

# மைத்திரி, மகிந்தவை இணைத்தே தேர்தலில் களமிறங்கவேண்டும்

## பதவி பறிக்கப்பட்ட அருந்திக்க தெரிவிப்பு

கொழும்பு, செப். 20
அடுத்த அரச தலைவர் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன மீண்டும் போட்டியிட விரும்பினால் மகிந்தவையும் இணைத்துக் கொண்டே களத்தில் இறங்க வேண்டும். மீண்டும் அன்னச் சின்னத்தில் பொது வேட்பாளராக அவர் போட்டியிடத் திட்டமிட்டால் மைத்திரியை நிராகரித்துவிட்டு தகுதியான ஒருவரை சுதந்திரக் கட்சி சார்பில் நிறுத்துவோம். இவ்வாறு பிரதி அமைச்சுப் பதவியில் இருந்து விலக்கப்பட்ட அருந்திக்க பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
நான் அரசில் இருந்து விலகப்போவதாகக் கூறிக்கொண்டிருந்தேன். பிரதி அமைச்சுப் பதவியில் இருந்து மைத்திரி என்னை விலக்கி விட்டார்.
இந்த அரசு மக்கள் விரோத அரசாக உள்ளது. இதைக் கவிழ்க்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள அனைவரும் இந்த மோசமான ஆட்சிமுறைமைக்கு பொறுப்புக்கு கூறவேண்டிய தேவை இல்லை. உயர் மட்டத்தில் உள்ள ஒரு சிலரே ஆட்சியை நடத்துகின்றனர். நாட்டைச் சீரழிக்கின்றனர். இதற்கு எதிரான கருத்தை உடைய அதிகம் பேர் ஐக்கிய தேசிய கட்சிக்குள் உள்ளனர்.
இந்த அரசை வீழ்த்துவதற்குச் சிறிலங்கா சுதந்திரக் கட்சி எமக்கு சந்தர்ப்பம் வழங்காவிட்டால் மகிந்த தரப்புடன் இணைந்தாவது அரசைக் கவிழ்க்க வேண்டும்.
மகிந்த ஆட்சியின் திருடர்களைப் பற்றி இந்த அரசு பேசுகின்றது. மகிந்தவுடன் இருந்தவர்களில் பாதிப்பேர் மைத்திரியுடன்தானே இருக்கின்றார்கள். அப்படியென்றால் ஏன் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை? மகிந்தவுடன் இருப்பவர்கள் மாத்திரம் தண்டிக்கப்படுவது ஏன்?
இதுபற்றி நான் சுதந்திரக் கட்சியின் கூட்டத்தில் பேசினேன். இதை அவர்களால் தாங்கிக்கொள்ள முடிய வில்லை. இதனால் தான் என்னைப் பதவி விலக்கியுள்ளனர். எது எப்படி இருந்தாலும், சுதந்திரக் கட்சி பாதுகாக்கப்பட வேண்டும். அது பலப்படுத்தப்பட வேண்டும். மைத்திரிபாலவும் மகிந்தவும் இணைந்தே சுதந்திரக் கட்சியை வழி நடத்த வேண்டும் என்கிற நிலைப்பாட்டில் நான் உள்ளேன்.
அடுத்த அரச தலைவர் வேட்பாளராக மைத்திரியின் பெயரும் பேசப்படுகிறது. கோத்தபாயவின் பெயரும் பேசப்படுகிறது. மைத்திரிபால சிறிசேன மீண்டும் போட்டியிட விரும்பினால் மகிந்தவையும் இணைத்துக் கொண்டே அவர் களத்தில் இறங்க வேண்டும். மீண்டும் அன்னச் சின்னத்தில் பொது வேட்பாளராக அவர் போட்டியிடத் திட்ட மிட்டால் அவரை நிராகரித்துவிட்டு தகுதியான ஒருவரை சுதந்திரக் கட்சி சார்பில் நிறுத்துவோம் - என்றார்.
(5,3)

## படையினர் பன்னாட்டு நீதிமன்றுக்கு கொண்டு செல்லப்பட்டால் பிக்குகள் வீதியில் குதிப்பர்

*மகிந்த அணி கொக்கரிப்பு*

கொழும்பு, செப். 20

முன்னாள் இராணுவத் தளபதி ஜெகத் ஜயசூரியவையோ அல்லது படையினரையோ பன்னாட்டு போர்க்குற்ற நீதிமன்றம் முன் நிறுத்தினால் அதற்கு எதிராக பௌத்த பிக்குகள் அனைவரும் வீதிக்கு இறங்குவர் என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் இந்திக அனுருத்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

படையினர் அவமதிக்கப்படுகின்றனர். பன்னாட்டுப் போர்க்குற்ற நீதிமன்றில் நிறுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுதலை குற்றமாக அறிவிக்கும் சட்டவரைவைக் கொண்டு வர எத்தனிக்கின்றனர்.

இந்தச் சட்டங்கள் ஊடாக படையினர் போர்க்குற்ற நீதிமன்றுக்கு அனுப்பப்படுவர். முன்னாள் இராணுவத் தளபதி ஜெகத் ஜயசூரியவையோ அல்லது படையினரையோ பன்னாட்டுப் போர்க்குற்ற நீதிமன்றம் முன் நிறுத்தினால் அதற்கு எதிராக பௌத்த பிக்குகள் அனைவரும் வீதிக்கு இறங்குவர் - என்றார். (5,3)

# வெட்கக்கேடு

## தேர்தலை ஒத்திவைக்கும் அரசின் முயற்சியை சாடுகிறது கபே அமைப்பு

கொழும்பு, செப். 20

தேர்தலுக்கு முகம்கொடுப்பதற்கு அஞ்சியுள்ள அரசு தேர்தலை ஒத்திவைப்பதற்கான உபாயத்தை பின் கதவால் நிறைவேற்ற முயற்சிப்பது வெட்கக்கேடானது என்று சுயாதீன தேர்தல் கண்காணிப்பு அமைப்பான 'கபே' விமர்சித்துள்ளது.

20ஆவது திருத்தச் சட்டவரைவைக் கொண்டு வந்து தேர்தலை ஒத்திவைக்க அரசு எடுத்த முயற்சி, உயர் நீதிமன்றத்தி[illegible] வியாக்கியானத்தால் பிசு[illegible]சுத்துப் போயுள்ளது. இதற்கு மாற்று ஏற்பாடாக, தேர்தல்முறைமை மாற்றத்தை நாடாளுமன்றத்தில் முன்வைத்து தேர்தலை ஒத்திப்போடுவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பில் கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்ததாவது:

சட்டத்தை இயற்றும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு உள்ளது என்ற உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்குள் ஒழிந்துகொண்டு, மக்களின் வாக்களிக்கும் உரிமை, மக்களின் சனநாயக உரிமை மற்றும் பொது வாக்கெடுப்பில் கலந்துகொள்ளும் உரிமை என்பவற்றை இல்லாமல் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட சட்டம் தொடர்பில், எந்தக் காரணங்களையும் மக்களுக்குத் தெரிவிக்காமல், உயர்நீதிமன்றத்துக்குத் காரணங்களைத் தெரிவிக்காமல், மக்களின் கருத்துக்களை அறிந்துகொள்ளாமல் சட்டத்தைத் திருத்த முயல்வது மோசமான செயற்பாடு.

சனநாயகமற்ற சட்டமொன்றை நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இருக்கும் கட்சியொன்று பின்கதவால் நிறைவேற்ற முயற்சிப்பது மோசமான நிலமையாகும். சட்டமொன்றை இரகசியமாக நிறைவேற்ற முயற்சிப்பது நல்லாட்சிக்கு எதிரான செயற்பாடாகும். இது தொடர்பாக சட்டமா அதிபர், சபாநாயகர் மற்றும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோருக்கும் கடிதங்களை அனுப்பிவைத்துள்ளோம்.

தேர்தல்கள் பிற்போடப்படுவதற்கு எதிரான குடிமக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் அவற்றுக்கு எதிராக நீதிமன்றம் சென்று அதனைச் சவாலுக்கு உட்படுத்த முடியும் -என்றார். (5)



## பி.ரி.ஐ. வழக்குகள் துரிதப்படும்

*அமைச்சர் சுவாமிநாதன் கூறுகிறார்*

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிரான வழக்குகளை துரிதப்படுத்துவதற்கு, சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும் என்று அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பவுண்டேசனில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேசிய சிறைக் கைதிகள் நாள் நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள 73 பேரின் வழக்குகளை துரிதமாக முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக, சட்டமா அதிபர் என்னிடம் உறுதியளித்துள்ளார். இந்த வழக்குகளை நாளாந்த அடிப்படையில் விசாரிக்குமாறு தாம் அழுத்தம் கொடுக்கப் போவதாகவும், ஏதாவது வழக்கு விசாரணைகள் ஒத்திவைக்கப்படுவதாக இருந்தால் அது இரண்டு வாரங்களுக்கு மேற்பட்டதாக இருக்காது என்றும் சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார். இந்த வழக்குகள் விரைவாக முடிவுக்கு வரும் - என்றார். (5)

## அரசின் சதிராட்டங்களை முறியடிப்போம்

### தேர்தலை ஒத்திவைக்க வகுக்கும் வியூகத்துக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுப்போம் என்கிறது எதிரணி

கொழும்பு, செப். 20

மாகாணசபைத் தேர்தல்களை ஒத்திவைப்பதை நோக்காகக் கொண்டு, 20ஆவது திருத்தச் சட்டவரைவுக்குப் பதிலாக கொண்டு வரப்படும் மாகாணசபை தேர்தல் முறைமை மாற்றத் திருத்தச் சட்டத்திற்கு எதிராகவும் நாம் நீதிமன்றை நாடுவோம். இவ்வாறு சிறிலங்கா பொதுசன முன்னணயின் தலைவரும் முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தற்போது அரசியல் உறுதிப்பாடற்ற நிலை தோற்றம் பெற்றுள்ளது. மக்கள் தீர்ப்புக்குப் பயந்து தேர்தலை நடத்தாது அரசு காலம்தாழ்த்தி வருகிறது. எந்தவொரு நாட்டிலும் ஒரே தினத்தில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுவதில்லை. தேர்தலைப் பிற்போடுவதை அடிப்படையாகக் கொண்டு அரசு அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டவரைவைக் கொண்டு வந்தது. அதற்கெதிராக நாம் உயர் நீதிமன்றத்தை நாடினோம்.

> நாட்டில் தற்போது அரசியல் உறுதிப்பாடற்ற நிலை தோற்றம் பெற்றுள்ளது. மக்கள் தீர்ப்புக்குப் பயந்து தேர்தலை நடத்தாது அரசு காலம்தாழ்த்தி வருகிறது.

உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பை அறிவித்துள்ளது. அரசின் தேவைக்கு ஏற்ப தேர்தலை ஒத்திவைக்க முடியாது. பதவிக்காலம் நிறைவடைவுள்ள கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தலை பிற்போடுவதற்கு அரசு மற்றுமொரு அணுகுமுறையைக் கையாளவுள்ளது.

பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டும் என்கின்ற தொனிப் பொருளிலான சாதாரண சட்டவரைவு நாடாளுமன்றில் உள்ளது. அரசு அந்தச் சட்டவரைவை இன்று அல்லதுநாளைவிவாதத்துக்கு எடுத்துக் கொள்ளும். அதன் பின்னர்குழுநிலையின்போது பல திருத்தங்களை முன்வைத்து அதன் நோக்கத்தை முழுமையாக மாற்றியமைக்கவுள்ளது.

அந்தச்சட்டவரைவில் உள்ளுராட்சி மன்றம் தொடர்பில் புதிதாகக் கொண்டுவரப்பட்டுள்ள தொகுதிவாரி முறைமையை மாகாண சபைத் தேர்தல் தொடர்பிலும் நடைமுறைப்படுத்துவது குறித்தே அரசு திருத்தம் கொண்டு வருவதற்கு எதிர்பார்த்துள்ளது. அவ்வாறு செய்வதற்கு எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டும் எனவும் அரசு குறிப்பிடுகிறது. ஆட்சிக்குவந்து இரண்டரை வருடங்கள் கடந்துள்ள நிலையில் அது தொடர்பில் அவதானம் செலுத்தாது தற்போது அவதானம் செலுத்துவது தேர்தலை பிற்போடுவதைப் பின்னணியாக் கொண்டதாகும்.

அரசு எதிர்பார்ப்பது போன்று மாகாண சபைத் தேர்தலைப் பிற்போடமுடியாது. அது சம்பந்தமாக சட்டச் சிக்கல் மூன்று உள்ளது. சட்டவரைவு தொடர்பில் குழுநிலையின்போது திருத்தம் முன்வைப்பதாக இருந்தால் அது சட்டவரைவின் பிரதான வரைவுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். சட்டவரைவின் நோக்கத்துக்குப் புறம்பாகச் சென்று திருத்தம் முன்வைக்க முடியாது.

சட்டவரைவின் நோக்கத்துக்குப் புறம்பாகச்செல்வதனால் புதிய சட்டவரைவையே வர்த்தமானியில் அறிவிக்க வேண்டும். வர்த்தமானியில் வெளியிட்டு அது தொடர்பில் மக்களின் அவதானத்துக்கும் கால அவகாசம் வழங்க வேண்டும். அரசு திருத்தச் சட்டவரைவு அல்லாமல் புதிய சட்டவரைவையே சமர்ப்பிப்பதற்கே எதிர்பார்க்கிறது.

பெண்களின் பிரதிநித்துவத்தை அதிகரிக்கும் இந்தச் சட்டவரைவு சகல மாகாண சபைகளுடனும் தொடர்புபட்டது. நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுப்பதற்கு முன்னர் சகல மாகாணசபைகளுக்கும் அனுப்ப வேண்டும். அந்தச் செயற்பாடு மேற்கொள்ளப்படவில்லை.

அரசு முன்னெடுத்துள்ள செயற்பாடுகளுக்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சி நடவடிக்கை எடுக்கவுள்ளது. அது தொடர்பில் இன்று (நேற்று) நாம் சபாநாயகருக்கு கடிதத்தை அனுப்பவுள்ளோம். சட்டமா அதிபருக்கும் கடிதத்தை அனுப்பவுள்ளோம் - என்றார். (5,31)

## சியோவில் மகேஸ்

தென்கொரியாவின் சியோல் நகரில் நடைபெறும் இந்தோ ஆசிய பசுபிக் பிராந்திய இராணுவத் தளபதிகளின் மாநாட்டில் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தலைமையிலான உயர்மட்டக் குழு பங்கேற்றுள்ளது.

நான்கு நாள்கள் நடைபெறும் பசுபிக் இராணுவத் தளபதிகள் முகாமைத்துவ கருத்தரங்கு சியோலில் நேற்று ஆரம்பமானது. ஒன்றுபட்ட முயற்சி மரபுசாரா பாதுகாப்பு அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கான தரைப்படையின் சிவில் இராணுவ ஒத்துழைப்பை கட்டியெழுப்புதல் என்ற தொனிப்பொருளில் இந்த மாநாடு நடைபெறுகிறது. (5)

## 6 மாதகாலத்தில் பி.ரி.ஐயில் எவரையும் பிடிக்கவில்லை

*சட்டம் ஒழுங்கு அமைச்சர் நாடாளுமன்றில் தெரிவிப்பு*

கொழும்பு, செப். 20

பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தின் கீழ் கடந்த 6 மாத காலப் பகுதியில் எவரும் கைதுசெய்யப்படவில்லை என்று சட்ட ஒழுங்குகள் மற்றும் தென்மாகாண அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

'பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதாக தேர்தலின் போது அரசு வாக்குறுதியளித்திருந்தது. ஆனால் அந்தச் சட்டத்தின் கீழ் அரசு தொடர்ச்சியாக கைதுகளை மேற்கொண்டு வருகின்றது. பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்குவது என்று கருதுவதால்தான் இவ்வாறு செய்கின்றீர்கள்' என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் சாகல ரத்நாயக்க, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்குப் பதிலாக புதிய சட்டத்தைக் கொண்டுவர அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. கடந்த 6 மாத காலமாக பயங்கரவாதச் சட்டத்தை நாம் பயன்படுத்தவில்லை. அவ்வாறான நிலை ஏற்படவில்லை. விரைவாக இந்தப் புதிய சட்டத்தை நாம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முயற்சி செய்கின்றோம் -என்றார். (5),

## அமெரிக்காவின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை

அமெரிக்காவின் புதிய அரசில் இலங்கை தொடர்பான வர்த்தகக் கொள்கையில் பெரியமாற்றங்கள் இருக்காது என்றுதெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி வர்த்தகப் பிரதிநிதி மார்க் லின்ஸ்கொட் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமெரிக்காவின் புதிய நிர்வாகம், பல்வேறு வர்த்தக உடன்பாடுகள் தொடர்பான கொள்கைகளில் மாற்றங்களைச் செய்துள்ளது. முக்கியமாக, ட்ரான்ஸ் பசுபிக் ஒத்துழைப்பு உடன்பாட்டைக் குறிப்பிடலாம். இலங்கையுடன் இருதரப்பு வர்த்தகம் அல்லது முதலீட்டு வரைவு உடன்பாடு தொடர்பான கொள்கைகளில் எந்த மாற்றங்களும் இடம்பெறும் என்று நான் நினைக்கவில்லை.

இலங்கைக்கு இது முக்கியமான தருணம். பிராந்தியத்தின் கேந்திரமாக மாறி வருகிறது. அமெரிக்கா ஒரு பெரிய ஏற்றுமதிச் சந்தையாக இலங்கைக்கு இருக்கிறது - என்றார். (5)

### 20ஆவது திருத்தத்துக்கான

# உயர் நீதிமன்றின் விளக்கம் நாடாளுமன்றில் அறிவிப்பு

கொழும்பு, செப். 20

அனைத்து மாகாண சபைகளுக்கும் ஒரே தினத்தில் தேர்தலை நடத்துவதற்கு வழிசெய்யும் வகையில் உருவாக்கப்பட்ட 20ஆவது திருத்தச்சட்டவரைவின் செயற்பாட்டுச் சரத்துக்கள், அரசமைப்புக்கு முரணானவை என்றும், சட்டவரைவு சட்டமாக்கப்பட வேண்டுமாக இருந்தால் நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பொது வாக்கெடுப்பினால் மக்கள் அங்கீகரிக்க வேண்டும். இவ்வாறு உயர் நீதிமன்றம் தனது வியாக்கியானத்தில் குறிப்பிட்டுள்ளதாக சபாநாயகர் தெரிவித்தார்.

அரசமைப்புக்கான 20ஆவது திருத்தச் சட்டவரைவு தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுக்களை ஆராய்ந்த உயர்நீதிமன்றம் அதனது தீர்ப்பை நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைத்துள்ளது.

இந்த மனுக்களை ஆராய்ந்த உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாமின் ஏகமனதாக தீர்மானமாக அன்றி பெரும்பான்மை அங்கத்தவர்களின் தீர்மானமாகவே நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சட்டவரைவின் 2, 3 மற்றும் 4ஆம் சரத்துக்கள் அரசமைப்பின் 3, 4, 12(1) மற்றும் 14(1)ஆம் உறுப்புரைகளுக்கு முரணாக உள்ளது. அரசமைப்பின் 80ஆவது உறுப்புரைக்கு இணங்க நாடாளுமன்ற உறுப்பினர்களினது எண்ணிக்கையில் (சபைக்கு சமுகமளிக்காத உறுப்பினர்கள் உள்பட) மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு குறையாத ஆதரவு வாக்குகளுடன் சபையில் நிறைவேற்றப்பட்டு, பொது வாக்கெடுப்பு மூலம் மக்களால் அங்கீகரிக்கப்பட்டு அதனடிப்படையில் அரச தலைவரினால் ஒப்புதல் வழங்கப்பட்டு கையெழுத்திடப்படும் சந்தர்ப்பத்திலேயே அரசமைப்பின் 83ஆவது உறுப்புரையின் கீழ் இந்தச் சட்டவரைவு சட்டமாக்கப்பட வேண்டும் என்றும் நீதிமன்றத்தின் பெரும்பான்மை தீர்மானித்துள்ளது என்றுள்ளது.

அரசமைப்புக்கான 20ஆவது திருத்தச் சட்டவரைவில் மொத்தமாகவே 5 சரத்துக்கள் மட்டுமே காணப்படுவதுடன், அவற்றில் 2, 3 மற்றும் 5ஆவது சரத்துக்களே செயற்பாட்டு சரத்துக்களாக காணப்படுகின்றன.

அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தல்கள் ஒரே தினத்தில் நடத்தப்பட வேண்டும் என்பதுடன், அனைத்து மாகாண சபைகளும் கலைக்கப்பட்டதாகவிருக்க வேண்டிய திகதியை நாடாளுமன்றமே தீர்மானிக்க வேண்டும் என்ற ஏற்பாடுகள் சட்டவரைவின் 2ஆவது சரத்தில் உள்ளது.

கலைப்பதற்கென குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னதாக முடிவடைகின்ற ஏதேனும் மாகாண சபையின் பதவிக்காலம் குறித்துரைக்கப்பட்ட அந்த திகதி வரை நீடிக்கப்பட வேண்டும். குறித்துரைக்கப்பட்ட அந்த திகதிக்கு அப்பால் தொடர்ந்திருக்கின்ற ஏதேனும் மாகாண சபையின் பதவிக்காலம் அந்த திகதியன்று முடிவடைய வேண்டும் என்பதுடன், அந்த திகதியன்று அது கலைக்கப்பட வேண்டும் என்ற ஏற்பாடுகள் சட்டவரைவின் 3ஆவது சரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாதேனும் காரணத்துக்காக மாகாண சபையொன்று முன்கூட்டியே கலைக்கப்படும் பட்சத்தில், அத்தகைய மாகாண சபையின் அதிகாரங்கள் அனைத்து மாகாண சபைகளும் கலைக்கப்படுவதற்கு குறித்துரைக்கப்படும் திகதி வரை நாடாளுமன்றத்தால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதற்கான ஏற்பாடுகள் சட்டவரைவின் 4ஆவது சரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அரசமைப்புக்கான 20ஆவது திருத்தச் சட்டவரைவின் மேற்படி சரத்துக்கள் மூன்றுமே அரசமைப்புக்கு முரணாக காணப்படுகின்றமையால், அந்தச் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்படுவதுடன் மட்டுமல்லாது, பொது வாக்கெடுப்பொன்றினால் மக்களால் அங்கீகரிக்கப்பட்டாலே சட்டமாகும் என்று உயர் நீதிமன்றம் கூறியுள்ளது. (5.31)

# ரோஹிங்கயர்களை ஏற்கும் தீர்மானம் இல்லை

### அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு



கொழும்பு, செப். 20

ரோஹிங்யவில் தனி நாட்டை அமைக்கும் நோக்குடன் அடிப்படைவாதக் குழு போராடி வருகின்றது. இவ்வாறான நிலையில் முஸ்லிம்களை இலங்கை அரசு ஒரு போதும் பொறுப்பேற்காது. இலங்கைக்குள் அனுமதிக்கவோ தஞ்சம் கொடுக்கவோ அமைச்சரவை தீர்மானிக்கவில்லை. இவ்வாறு அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மியன்மாரின் உள்நாட்டுக் குழப்பங்களை அடுத்து அங்குள்ளவர்களின் 10 ஆயிரம் ரோஹிங்ய முஸ்லிம்களை இலங்கை அரசு பொறுப்பேற்கத் தயாராக உள்ளதாக கடந்த வாரத்தில் இருந்து வெளிவரும் செய்திகள் அனைத்துமே உண்மைக்குப் புறம்பானவையாகும். இந்தச் செய்திக்கு பின்னர் நாட்டில் சில குழப்பகரமான கருத்துக்கள் வெளிவந்துள்ளன. அதே நிலையில்ஒருசிலமுஸ்லிம்அமைப்புகள் கொழும்பில் ரோஹிங்ய முஸ்லிம்களுக்கு ஆதரவாக பேரணிகளை நடத்துவித்துள்ளனர். அதனை எதிர்த்து பௌத்த அமைப்புகளும் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

அரசாக நாம் எந்தவொரு சந்தர்ப்பதிலும் ரோஹிங்ய முஸ்லிம்களை பொறுப்பேற்கவோ அல்லது அவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கவோ தீர்மானிக்கவில்லை. அமைச்சரவையில் எந்தத் தீர்மானமும் எடுக்கவில்லை. எனினும் சிலகாலத்துக்கு முன்னர் இலங்கை கடல் எல்லையில் ரோஹிங்ய முஸ்லிம்கள் சிலர் சட்டவிரோதமாக கப்பலில் வந்த நிலையில் அவர்களை மீட்டு மீண்டும் மியன்மாருக்கு அனுப்பப்பட்டது. அதைத் தவிர இலங்கை எந்தவித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. ரோஹிங்ய குழுவிடையே அடிப்படைவாத குழுவொன்று உருவாக்கியுள்ளதுடன் அவர்கள் தனி இராச்சியம் ஒன்றை உருவாக்கிக்கொள்ளும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகக் கூறப்படுகின்றது. இதன் காரணமாகவே பல நாடுகள் ரோஹிங்ய முஸ்லிம் சமூகத்தை நிராகரித்து வருகின்றனர் -என்றார். (5.31)

# கட்சி தாவினார் அருந்திக்க

### நாடாளுமன்றில் எதிர்கட்சி வரிசையில் நேற்று அமர்ந்தார்

கொழும்பு, செப். 20

போரை வெற்றி கொண்ட தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு பக்கபலமாக இருந்து இந்த ஆட்சியை கவிழ்க்கும் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கவுள்ளேன். இவ்வாறு பிரதி அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட அருந்திக்க பெர்னாண்டோ தெரிவித்தார். அவர் இவ்வாறு தெரிவித்தன் பின்னர், ஆளும் கட்சியிலிருந்து எதிர்க்கட்சி பக்கம் சென்றார். அங்கு அமர்ந்தார். இதன்போது மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேசையில் தட்டி ஆரவாரமிட்டனர்.

முன்னாள் அரச தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்சவும் சபையில் இருந்ததுடன் எதிர்க்கட்சிக்கு தாவிச் சென்றவுடன் மகிந்த ராஜபக்ச அவருக்கு கைலாகு கொடுத்து வரவேற்றார். அதன்பின்னர் அருந்திக்க பெர்னாண்டோ அவருக்கு அருகிலேயே அமர்ந்து கொண்டார்.

அருந்திக்க பெர்ணான்டோ உரையாற்ற ஆரம்பித்த போது தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உட்பட ஆளும் கட்சியினர் சபையில் இருந்து வெளியேறிச் சென்றிருந்தனர்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அருந்திக்க பெர்னாண்டோ தெரிவித்ததாவது:

போரை வெற்றி கொண்ட தலைவர் மகிந்த ராஜபக்சவின் பயணத்துக்கு ஆதரவளித்தேன். அதன் பின்னர் நல்லாட்சி அரசுக்கு. சுதந்திரக் கட்சிப் பிரதிநிதி என்ற வகையில் முழுமையான ஆதரவு வழங்கினோம். இந்த ஆட்சியின் மீது மக்கள் பெரும் எதிர்பார்ப்பை வைத்துள்ளனர். எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வதற்கும் இந்த ஆட்சியினால் முடியவில்லை. கடந்து வந்த இருவருடத்தில் அரசுதனக்கான தெளிவான கொள்கையை இதுவரை வெளியிடவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் நல்லவர்கள் உள்ளனர். இவர்களுடன் எனக்குப் பிரச்சினையில்லை. சுற்றுலா ஊக்குவிப்பு சபைக்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கவின் சகோதரரை நியமித்தனர். இந்த நிகழ்வுக்கு என்னை அழைக்கவில்லை.

இந்த அரசை கொழும்பு முதலாளித்துவவாதிகளே அழிவுக்குக் கொண்டு செல்கின்றனர். பல கோணங்களில் மோசடிகள் நடக்கின்றன. மத்திய அதிவேக பாதையின் அபிவிருத்தியிரும் மோசடிகள் நடக்கின்றன. இதனைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. சைட்டம் போன்ற விரைவாகத் தீர்க்க வேண்டிய பிரச்சினைகளைத் தீர்க்காமல் தொடர்ந்தும் பிரச்சி னைகளைக் கணக்கில் எடுக்காமல் நாட்டின் உறுதிப்பாட்டைப்பாதுகாக்கமுனையவில்லை. அதற்குப் பதிலாக அரசுக்கு எதிராகப்பரப்புரைகளைமுன்னெடுக்கும் போது கூட்டு பொறுப்பு என்ற காரணத்தை முன்வைத்து என்னைப் பிரதி அமைச்சு பதவியில் இருந்து நீக்கினர். இனிமேலும் இந்த ஆட்சியில் இருக்க முடியாது. இந்த ஆட்சியை கவிழ்க்கும் போராட்டத்தை ஆரம்பித்துவிட்டோம். அந்த போராட்டத்திற்கு நானும் இணைகின்றேன் - என்றார். (5.31)

# காணாமல் ஆக்கப்படுதலைக் குற்றமாக்கும் சட்டவரைவை ஒத்திப்போடவேண்டாம்: கைவிடுங்கள்

### தேசிய அமைப்புக்கான ஒன்றியம் தெரிவிப்பு

கொழும்பு, செப். 20

காணாமல் ஆக்கப்படுதலைக் குற்றமாக அறிவிக்கும் சட்டவரைவை நாடாளுமன்ற அமர்விலிருந்து ஒத்திப் போட வேண்டாம். அதனைக் கைவிடுங்கள். இவ்வாறு தேசிய அமைப்புக்கான ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இராஜகிரியவில் உள்ள தேசிய அமைப்புக்கான ஒன்றியத்தின் தலைமையகத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்ட களனி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அநுராகர தம்மரத்ன தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணாமல் ஆக்கப்படுதலை குற்றமாக அறிவிக்கும் சட்டவரைவை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதை தவிர்ப்பதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உறுதியளித்திருந்த போதிலும் தலைமை அமைச்சரின் செயற்பாடுகள் எமக்குச் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன. மேற்குலக நாடுகளின் தாளத்துக்கு ஆடுபவராகவே அவரை அன்று தொட்டு இன்று வரை நாம் அவதானித்து வருகின்றோம்.

இராணுவத்தினர் புலிகளை முறியடிப்பதற்காக நாட்டு மண்ணிலேயே போராடினர். வெற்றியும் கண்டனர். ஆனால், அமெரிக்கப் படையினரோ குவைத் மற்றும் ஈராக் போன்ற நாடுகளில் போர் புரிந்து அங்குள்ள அப்பாவி பொது மக்களை மோசமாக படுகொலை செய்ததுடன் ஈராக்கில் இராணுவ ஒழுக்கவிதிமுறைகளை எல்லை மீறி நடந்து கொண்டனர். அதற்காக அவர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்பட்;டார்களா? இல்லையே. அப்படியாயின் பயங்கரவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைத்த எமது படையினருக்கு எதிராக மட்டும் ஏன் இந்தச் சட்டவரைவு ? என்றார். (5.31)

### பன்னாட்டு அழுத்தத்திலிருந்து

# தப்ப வழியிருந்தும் தவறவிட்டோம்

### வருந்துகிறது சுதந்திரக் கட்சி

பன்னாட்டு அழுத்தங்களை தவிர்க்க சில மாற்று வழிமுறைகள் இருந்த போதிலும் எமது தவறான நகர்வுகளால் தவறவிட்டோம். பன்னாட்டு அழுத்தங்கள் அதிகரிக்கவும் காரணமாக அமைந்தது. எவ்வாறு இருப்பினும் இந்தச் சவால்களை வெற்றி கொள்வதே எமது இலக்கு. இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மையக் குழு உறுப்பினரும் அமைச்சருமான எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்தார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று நாம் கடினமான அழுத்தங்களில் செயற்படுவதற்கு, ஆரம்பத்தில் எடுத்த சில தவறான நகர்வுகளே காரணமாகும்.

அழுத்தங்கள் அதிகரித்த நிலையில்தான் மகிந்த தேர்தலை அறிவித்தார். நாம் தேர்தலை நிராகரிக்க முயற்சித்த போதிலும் மகிந்தவுக்கு மாற்று வழிமுறை இருக்கவில்லை. தேர்தலை நடத்தாது அடுத்த கூட்டத்தில் நாம் முகம் கொடுத்திருந்தால் எமக்கு எதிரான பொருளாதார தடை விதிக்கப்பட்டிருக்கும். ஆனால் பன்னாட்டு அழுத்தங்களைத் தவிர்க்க சில வழிமுறைகள் எமக்கு இருந்தன. வடக்கு கிழக்கின் நிலமைகளை மேலும் இலகுவாக கையாண்டு சரியான தீர்வை கையாண்டிருந்தால் நிலமைகளை மாற்றியமைத்திருக்க முடியும் - என்றார். (5.31)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## பொறுப்புக்கூறலை நிறைவேற்றுவது தமிழ்க் கூட்டமைப்பினது கடமை

பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதலைக் குற்றம் என்று அறிவிக்கும் சட்டவரைவின் மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் நாளை மறுதினம் நடைபெற இருந்த நிலையில் அது திடீரென நிறுத்தப்பட்டுள்ளது. இந்தச் சட்ட வரைவின் மீதானவிவாதம் நிறுத்தப்படுவது இது இரண்டாவது தடவை. அரசதலைவர்மைத்திரிபாலசிறிசேனவின் உத்தரவின்படியே விவாதம் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று தெரிகிறது. இதற்கு முன்னரும் ஒரு தடவை இவ்வாறே இந்த விவாதம் அரச தலைவரால் ஒத்திவைக்கப்பட்டது.

இந்தச் சட்டவரைவுக்கு எதிராகப் பிக்குகள் போர்க்கொடி தூக்கியதைத் தொடர்ந்து அதில் என்ன இருக்கிறது என்பதைத்தான் முழுமையாக ஆராய்ந்து பார்க்கும் வரைக்கும் விவாதத்தை ஒத்திவைக்குமாறு அரசதலைவர் கூறியிருந்தார். பின்னர் சட்டவரைவை ஆராய்ந்து பார்த்து விவாதத்துக்கு அனுமதி வழங்கியிருந்தார். அதனையடுத்தே நாளைமறுதினம் விவாதத்துக்குத் திகதியிடப்பட்டிருந்தது. இந்த நிலையில் மகிந்த அணியைச் சேர்ந்தவரும் முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சருமான ஜி.எல்.பீரிஸ் அரச தலைவரைச் சந்தித்து 'இந்தச் சட்டவரைவு தொடர்பில் பேசியதைத் தொடர்ந்தே அதன் மீதான விவாதம் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது.

அரசு இப்படிச் செய்திருப்பது பன்னாட்டுச் சமூகத்தை ஏமாற்றும் செயல் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டனம் தெரிவித்திருக்கிறது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் அதனை வைத்திருந்துவிட்டு, கூட்டத்தொடர் முடிவடைந்ததும் அதனை நிகழ்ச்சி நிரலில் இருந்து நீக்கிவிட்டுள்ளமை பன்னாட்டுச்சமூகத்தை ஏமாற்றும் செயல் என அது சுட்டிக்காட்டியுள்ளது. அதிலும், இலங்கையில் நல்லிணக்கச் செயற்பாடுகளும் பொறுப்புக்கூறுதலும் பன்னாட்டுச்சமூகத்தைத்திருப்திப்படுத்துவதற்கானநடவடிக்கைகளாக அன்றி நாட்டின் அனைத்து மக்களுக்கும் நன்மை பயப்பதற்கானதாக இருக்கவேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசைன் தனது கடைசி அறிக்கையில் தெரிவித்திருந்த நிலையில்கூட அரசு இப்படிச் செய்திருப்பது முற்றிலும் ஏமாற்றுவேலை என்று கூட்டமைப்புச் சுட்டிக்காட்டி யுள்ளது.

காணாமல் ஆக்கப்படுதலைக் குற்றமாக்கும் சட்டத்தை நிறைவேற்றுவதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கு கொழும்பு வாக்குறுதியளித்திருந்தது. ஆனால், அதனைநிறைவேற்றவில்லை. இது மட்டுமல்ல, பொறுப்புக்கூறல் விடயத்தில் வாக்குறுதியளித்த கலப்பு நீதிமன்றம் உள்ளிட்ட பலவற்றையும் அரசு நிறைவேற்றவில்லை.

அரசின் இந்தப் போக்குத் தொடர்பில் கூட்டமைப்பின் கடுமையான கண்டனம் அண்மைக் காலத்தில் வந்திருப்பது இதுவே முதல் தடவை. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை கொழும்பு அரசு அப்படியே நிறைவேற்ற வேண்டும்என்றுகூட்டமைப்புத்தெரிவித்து வந்தாலும்பொறுப்புக்கூறல் விடயத்தில் அரசைக் கண்டிக்கும் போக்கை அது கைவிட்டுக்காலம்பல ஆகிவிட்டது. குறிப்பாககூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அத்தகைய கண்டனங்களை வெளிப்படுத்துவதை அனேகமாகநிறுத்திவிட்டார். புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளின்சுமுகநிலையைக்குழப்பாமல் இருப்பதற்காகவேண்டி அவர் அப்படிச்செய்திருக்கலாம். அதில் ஒரு நியாயம் இருந்தாலும்கூட, அரசிடம் பொறுப்புக்கூறலை மீண்டும் மீண்டும் வலியுறுத்தவேண்டிய பொறுப்பும் அதனை நிறைவேற்ற வைக்கவேண்டிய பொறுப்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உண்டு. நீதி நிறைவேறாமல் நீடித்த நிலையான அமைதி சாத்தியம் இல்லை என்பதை அனைத்துப் பன்னாட்டு மனித உரிமைகள் அமைப்புகளும் ஏற்றுக்கொண்டுள்ளன. அப்படியிருக்கும்போது பொறுப்புக்கூறல் விடயத்தில் அரசுக்கு அழுத்தம் கொடுக்காமல், அரசமைப்புக்காக விட்டுக்கொடுக்கும் அல்லது மெத்தமான போக்கைக் கூட்டமைப்புக் கையாள்வது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. இந்த விடயத்தில் தனது காரசாரமான கண்டனத்தை அது எப்போதுமே வெளிப்படுத்தி நிற்கவேண்டும். ஏனெனில் அதுதமிழ் மக்களின் ஏகோபித்த குரல். நீதியை எதிர்பார்த்தே இன்றுவரையில்தமிழ் மக்கள் வீதிகளில் தவம் கிடக்கிறார்கள். கொழும்பு அரசு அதற்குப் பதில்சொல்லியே ஆகவேண்டும். புதிய அரசமைப்புக்காகவோ வேறு எதற்காகவுமோ பொறுப்புக்கூறல் விடயத்தில் எந்த விட்டுக்கொடுப்புக்களையும் தமிழ் மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

எனவே, காணாமல் ஆக்கப்படுதலைக் குற்றமாக்கும் சட்டவரைவின் மீதான விவாதத்தைப் பிற்போட்டமைக்குக் கண்டனத்தை வெளிப்படுத்தியதைப் போன்றே பொறுப்புக்கூறலின் ஒவ்வொருவிடயத்திலும் அரசுக்கு அழுத்தம் கொடுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வரவேண்டும்.

# தமிழ் அன்னையின் ஆத்மா இடையே ஒளிரும் இலட்சியம்

செ.யாழிசை

ஈழத்தமிழரின் வாழ்வுக்காகவும், சிங்கள அரசின் அடக்கு முறைகளில் இருந்துதமிழினத்தைக்காக்கும்நோக்குடனும் இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்நிறுத்தி நீரும் அருந்தாது அகிம்சை முறையில் போராடி திலீபன் தியாகச் சாவடைந்த நாள்கள் இவை. ஈழத் தமிழர்களின் மனதில் இந்தியா மீதான நம்பிக்கையின் பற்றுதல் தளர்ந்த நாள்கள் இவை.

### பார்த்தீபனாய் தாயன்பு பேணல்

சராசரி உயரமும், பொதுநிறமும், மிக மெல்லிய தோற்றமும் கொண்ட இளைஞன்தான் இராசையா பார்த்தீபன் என்னும் திலீபன். யாழ் மாவட்டம், வலிகாமம் பிரதேசத்தில் உள்ள ஊரெழு என்னும் கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்ட திலீபன், இராசையா ஆசிரியரின் கடைசி மகனாக 1963 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி பிறந்தான். அவனுக்கு இரு அண்ணன்மார் உடன்பிறப்புக்களாக பாசம் தந்தனர். அவர்களின் பாசப் பிணைப்போடு சிறு வயது முதலே அதீத புத்திக் கூர்மையும், திறமையும் கொண்டு வளர்ந்தான் பார்த்தீபன். அண்ணன்மார் இருவருமே படிப்பறிவும், அடக்கமும், உயர்ந்தபண்பியல்பும் கொண்டவர்களாகத் திகழ்ந்தனர். அவனை வழிநடத்தினர். தந்தையும் அப்படியே. அந்த ஊரில் மிகவும் மதிப்பும் செல்வாக்கும் மிக்கதொரு குடும்பமாக ஆசிரியர் இராசையாவினுடைய குடும்பம் திகழ்ந்தது என்றால் மிகையில்லை.

சிறுவயதிலேயே திலீபன் தாயைப் பறி கொடுத்தவன். தாயன்பு என்றால் என்னவென்றே தெரியாமல் வளர்ந்த அவன் மீது, தந்தையும் அண்ணன்கள் இருவரும் தாயன்பின் மகத்துவத்தை வெளிக்காட்டினர். அதன் ஆத்மார்த்தமான ஒப்புமை இலக்கணங்களை அவனிடத்தில் ஊட்டம் செய்து வளர்த்தனர். தன் பிள்ளை பிற்காலத்தில்மண்ணின்விடுதலைக்காகவும், மக்களின் உரிமை மீட்புக்காகவும் தன்னையே தியாகம்செய்வான்என்பதைஉணர்ந்ததன்மையால் போலும், தந்தையும் தன் மகனுக்காக தனதுஇன்பவாழ்வைத்தியாகம்செய்துகொண்டார். என்னே அந்த தியாகக் குடும்பத்தின் பாரம்பரியம். ஈழத்தின் தனித்துவத் தார்ப்பரியம் அது.

### கல்வி ஒளி காணல்

இயல்பிலேயே திலீபன் படிப்பில் ஆர்வம் உள்ளவனாக விளங்கினான். சிறுவயதுக் கல்வியை தனது சொந்த ஊரான ஊரெழுவிலும், மேற்படிப்பை யாழ். இந்துக் கல்லூரியிலும் பயின்றான். அவனது அறிவுத் திறனுக்கு எல்லையே இல்லை எனும் காலம் ஒன்று ஒரு காலத்தில் இந்துக் கல்லூரியில் இருந்தது என்பது மறுக்க முடியாத உண்மை. வகுப்பில் எப்போதும் முதலாவதாக வந்து தனது அறிவுத் திறமையை நிரூபித்து வந்தான் அவன்.

எழுபதுகளில் சிங்கள அரசு தமிழ் மாணவர்களின் பட்டப் படிப்பை, மருத்துவ கல்வியை பாழடிக்க கொண்டுவந்த தரப்படுத்தல் என்னும் திட்டமிட்ட சதியினால் எண்ணிறைந்த தமிழ் மாணவர்கள் தமது உயர் கல்வியை இடைநிறுத்தினர். வெளிநாடுகளுக்கு ஓடத் தொடங்கிய காலமாக அது அமைந்திருந்தது. எண்பதுகளின் ஆரம்பத்தில் பார்த்தீபன் க.பொ.த. உயர்தர வகுப்பில் மிகத் திறமையாக சித்தி பெற்று இலங்கை அரசின் தரப்படுத்தல் அளவையும் தாண்டி மருத்துவப் படிப்புக்குத் தெரிவானான். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மருத்துவக் கல்வியைத் தொடர்ந்தான்.

### விடுதலைப் பயணம் போதல்

அக்காலப்பகுதி, தமிழ் இனத்துக்கு ஒளி மழுங்கிய இருள் சூழ்ந்த காலமாக அமைந்திருந்தது. உண்மையில் இனக்கலவரத்தின் கோரப்பிடியில் சிக்கி தமிழ் இனம் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்துகொண்டிருந்தகாலம்அது. சிறிலங்காப் படைகளின் அட்டூழியம் எல்லை தாண்டிச் சென்று கொண்டிருந்தது.

சிறையில் குட்டிமணி தங்கத்துரை போன்றவர்கள் சிங்களக் கொடும் வெறியர்களால் ஈவிரக்கமின்றிக் கொல்லப் பட்டதும், இலங்கை முழுவதும்பெரிய இனக்கலவரத்தைதிட்டமிட்டு ஏற்படுத்தி தமிழர்களை சிங்களவர்கள் கொன்று குவித்ததும், தமிழ்ப்பெண்கள் வகைதொகையின்றி சிங்களப் பகுதிகளில் சிங்களக் காடையர்களால் பாலியல் வதைக்கு உட்படுத்தப்பட்டதும் இதே காலப்பகுதியில் தான். இந்த சந்தர்ப்பத்திலே விஸ்வரூபம் எடுத்து தாண்டவம் ஆடிய இனப்பிரச்சனையும், தமிழர்களின் அழிவும் பார்த்தீபனின் மருத்துவக் கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்தன. ஆம், ஊரெழுவில் பிறந்த அந்த உரிமைத் தாகம் மிக்க விடுதலைப் பறவை புலிகளின் கூட்டை நோக்கிப் பறந்தது.

### தியாகம் கொள்ளல்

ஆம், திலீபன் என்னும் பெயரில் ஆயுதமேந்தித் தனதுஇனவிடியலுக்காகசுதந்திரகீதம்பாட ஆரம்பித்தது. இறுதியில் தாகம் கொண்டு தியாக நாத சங்கமத்தையும், ஆன்ம உருக்கமாக மீட்டியது. 1987 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்துஉணவுஒறுப்புப்போராட்டத்தை ஆரம்பித்தான் திலீபன். 1987 ஆம் ஆண்டு செப்ரெம்பர்மாதம் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.48 மணிக்கு தியாகச் சாவடைந்தான். விடுதலையின் பொருள் தனை, ஆத்ம பலமாக இன்றும் உரைக்கின்றான்.



இந்துமதி

# குழம்பிப்போயுள்ள அரசியலும் குழப்பியடிக்கும் அரசியல்வாதிகளும்

எமது அரசியல்வாதிகளின் செயற்பாடுகளைப் பார்க்கும்போதுஎங்காவதுகண் காணாத தேசத்துக்கு ஓடிப் போய் விடலாமா? என்ற எண்ணம் தான் மனதில் தோன்றுகின்றது. அந்த அளவுக்கு இலங்கையின் அரசியல் சீர்கெட்டுப்போய்க்காணப்படுகின்றது. சுமார் 2 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கின்ற இந்த அழகிய நாட்டை மாற்றார் கண் முன்னால் அவலட்சணமாகக் காட்டிக் கொண்டிருப்பவர்கள் இந்த மோசமான அரசியல் வாதிகள்தான். அரசியல் ஒரு சாக்கடையென பேரறிஞர் பேர்னாட்ஷா கூறியதைக் கட்டாயமாக நிரூபித்தே ஆக வேண்டும்என்பதுபோன்று இவர்கள் வீறு கொண்டுசெயற்படுகின்றனர். அரசியல்வாதிகள் வேற்றுக்கிரகவாசிகளல்ல. இவர்களும் இந்தப் பூமியில் பிறந்தவர்கள்தான். அரசியலில் ஈடுபட்டதால் அரசியல்வாதிகளென்ற காரணப் பெயருடன் சமூகத்தில் நடமாடி வருகின்றனர். நாட்டினதும் மக்களதும் தலைவிதியை இவர்கள் தான் முடிவுசெய்கின்றனர்.

**ஏமாற்றத் தெரிந்தவர்களால் அரசியலில் பிரகாசிக்க இயலும்**

ஏமாற்றத் தெரிந்தவர்களும், பொய் சொல்லியே பழகிப் போனவர்களும் அரசியலில்நன்கு பிரகாசிக்க முடியும். ஓர் அலுவலகத்தில் கடைநிலை ஊழியனாகச் சேருவதற்கே சில கல்வித்தகைமைகள் தேவைப்படுகின்றன. ஆனால் எமது நாட்டின் நாடாளுமன்றத்தைப் பொறுத்த வரையில், அங்கு உறுப்பினர்களாக வருவதற்கு எந்த விதமான கல்வித்தகைமைகளும் தேவையில்லை. எமது நாடாளுமன்ற உறுப்பினர்களில் குறிப்பிட்ட சிலர் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் கூடச் சித்தியடையாதவர்களாகக் காணப்படுகின்றமை இந்த நாட்டு மக்களின் தலைவிதி என்றுதான் கூற வேண்டும். நாட்டின் அதியுயர் நிறுவனமாக நாடாளுமன்றம் உள்ள நிலையில், அதில் உறுப்பினராகப் பதவி வகிப்பவர்கள் கல்வியில் தற்குறிகளாகக் காணப்படுகின்றமை அரசியல் குழப்பநிலைகளுக்குக் காரணாகிவிட்டது.

மேடையில் ஏறி ஒலி வாங்கியைப் பிடித்துக் கொண்டு மக்களுக்கு ஒன்றுமே புரியாத விதத்தில் மணிக்கணக்காகப் பேசுபவர்கள் சிறந்த அரசியல் வாதிகளெனப் பெயர் சூட்டப்படுகின்றனர். உண்மையில் இவர்கள் பேசுவது இவர்களுக்கே புரிவதில்லை. இவர்களது மேடைப்பழக்கம் நாடாளுமன்றம் வரை தொடர்வதுதான் பரிதாபமாக உள்ளது.

**கடமை உணர்வுடன் செயற்படாத நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் உளர்**

நாடாளுமன்ற அமர்வுகள் இடம் பெறும் போது தூக்கத்தில் ஆழ்ந்திருந்தவர்கள் தொடர்பாகவும் நாம் அறிந்து வைத்திருக்கிறோம். இவர்களைத் திரிஞானயோகிகள் என்றுதான் அழைக்க வேண்டும். ஏனென்றால் தூக்கத்தில் ஆழ்ந்தவாறே நாடாளுமன்றத்தில் இடம்பெறுகின்றவற்றை அறிந்து கொள்கின்ற ஆற்றல் படைத்தவர்கள் இவர்கள். இவர்கள் நாடாளுமன்றத்தில் தூங்கிவிட்டுச்சென்றாலும் இவர்களுக்குரிய கொடுப்பனவுகள் ஒழுங்காக வழங்கப்பட்டுவிடும். உறங்குவதற்குக் கூட வேதனம் பெறுகின்ற அதிஷ்டசாலிகள் இவர்கள்.

ஒரு சிலர் அரசியலில் நுழைந்து பதவியொன்றையும் பெற்றுக் கொண்ட பின் தமது பழைய நிலையை மறந்து [illegible]கொள்கின்றார்கள். தெரிந்தவர்களை [illegible] தெரியாதவர்கள் போன்று நடிப்பதும் இவர்களுக்குக் கைவந்த கலை. இதனால் சிறந்த நடிகர்களாகவும் சிலர் மாறிவிடுவதுண்டு. ஒரு சிலர் தமது பழைய நிலையை மறந்து நடந்து கொள்ளப் போய் மூக்குடைபடுவதும் உண்டு. பழைய நாடாளுமன்றக் கட்டடத்துக்கு அருகிலுள்ள பிரபலமான ஹோட்டல் ஒன்றில் தேமிஸ் என்பவர் சிற்றூழியராகக் கடமையாற்றி வந்தார். அந்த வேளையில் நாட்டின் தலைமை அமைச்சராகப் பதவி வகித்தவர் சேர்.ஜோன் கொத்தலாவல. உயர் குடியில் பிறந்த இவர் தனது கனவான்தனத்தை ஒரு போதுமே கைவிட்டதில்லை. இவரது நடை, உடை, பாவனை யாவுமே ஓர் உயர்ந்த இடத்தில் வைத்து இவரால் பேணப்பட்டு வந்தன. இதற்குப் பாதகமான எதையும் ஒரு போதுமே கொத்தலாவல அனுமதிப்பதில்லை. அவர் அந்தக் ஹோட்டலுக்குச் செல்லும் போதெல்லாம் தேமிஸ் அவரைக் கண்டதும் காலில் விழாத குறையாக சிரம்தாழ்த்தி"துரைவாருங்கள்,அதோ அந்தப் பிரமுகர்கள் அமர்கின்ற பகுதியிலுள்ள ஆசனத்தில் அமருங்கள். தாங்கள் உத்தரவிட்டால் சாப்பிடுவதற்கு எதையாவது கொண்டு வருவேன்'' என்றெல்லாம் குழைவார். கொத்தலாவல தேமிசை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. அற்பப் புழுவொன்றைப் பார்ப்பது போன்றே தேமிசுடன் நடந்து கொள்வார்.



*ஜோன் கொத்தலாவ*

*அரசியல் ஒரு சாக்கடை என்றால் அதில் நெளிகின்ற புழுக்களாக அரசியல் வாதிகள் இருக்கக் கூடாது. அந்தச் சாக்கடையைச் சுத்தப்படுத்துகின்ற பணியாள்களாக அவர்கள் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும்.*

**மற்றவர்களை மதிக்கும் பண்பு அரசியல்வாதிகளுக்கு அவசியம்**

இந்த நிலையில் சாமானிய மக்களைக் கவருவதற்காக பண்டாரநாயக்கதமதுகட்சியின்சார்பில்தேமிசை நாடாளுமன்ற உறுப்பினர் ஆக்கினார். அந்தப் பதவி கிடைத்ததும் தேமிஸ் தம்மைத் தாமே மாற்றிக் கொண்டார். தம்மையொருகனவான்எனநினைக்கத் தொடங்கினார்.

தமது ஹோட்டல் வேலையையும் உதறித்தள்ளினார். கனவான்கள் அணியும் ஆடைகளை அணிந்து கொண்டார். இந்த நிலையில் தேமிஸ் கொத்தலாவலையை ஒரு சந்தர்ப்பத்தில் முன்னைய அதே ஹோட்டலில் எதேச்சையாகச் சந்திக்க நேர்ந்தது. கொத்தலாவலையைக் கண்டதும் அவரருகே சென்ற தேமிஸ் "ஹலோ, ஜோன் எப்படி இருக்கிறீர்கள்?'' எனக் கேட்டவாறு அவரது கையைக் குலுக்க முயன்றார். இதனால் கடும் சீற்றம் கொண்ட கொத்தலாவல, ''எனது கையைப் பிடிக்கவா வருகிறாய் அற்பனே?"எனக்கோபமாகக்கூறியவாறு தேமிசை காலால் எட்டி உதைத்தார். பல அடி தூரத்துக்கு அப்பால் போய்விழுந்த தேமிஸ் இந்தச் சம்பவத்துக்குப் பிறகு கொத்தலாவலையைக் கண்டதும் ஓடி ஒளிய ஆரம்பித்தார். தமது நிலை மறந்து தலைகீழாக நடந்து கொள்கின்ற அரசியல் வாதிகளுக்கு தேமிஸின் அனுபவம் ஒரு பாடமாக அமைய வேண்டும்.

அரசியல் ஒரு சாக்கடை என்றால் அதில் நெளிகின்ற புழுக்களாக அரசியல்வாதிகள் இருக்கக் கூடாது. அந்தச் சாக்கடையைச் சுத்தப்படுத்துகின்ற பணியாள்களாக அவர்கள் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அரசியலும் தூய்மை அடையும். அரசியல்வாதிகளும் புனிதர்களாக மதிக்கப்படுவார்கள்.

மகிந்த அரசின் காலத்தில் மோசடிகள் இடம்பெற்றதாகக் கூறினார்கள். விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன. அதேவேளை கூட்டு அரசிலுள்ள சிலரும் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டமை நிரூபிக்கப்பட்டுள்ளது. இதனால் நிதி அமைச்சுப் பொறுப்பில் இருந்தவர் பதவி விலக நேரிட்டது. நல்லாட்சி மீது விழுந்ததொரு கரும்புள்ளியாகவே இதைக் கருத முடியும்.

**நல்அரசியல் பண்புகளுக்கு உதாரணம் மேற்குலக அரசியல்வாதிகள்**

மேற்கத்திய நாடுகளில் அரசியல் வாதிகள் மக்களுக்குப் பயந்து நடக்கின்றனர். ஆனால் ஏனைய அநேகமான நாடுகளில் அரசியல் வாதிகள் மக்களை ஆட்டிப் படைக்கின்றனர். மக்களும் அவர்களுக்கு அஞ்சி நடக்கின்றனர்.

அரசியல் என்பது சாதாரண மக்களுக்கு உதவும் வகையில் அமைந்திருக்க வேண்டும். அரசியல்வாதிகள் தம்மை மாற்றிக் கொள்ளாதவரை அரசியலும் மாறவேமாட்டாது.

## ஆசிரியருக்கான கடிதம்

### பயணிகளது சிரமத்தைதவிர்க்க இ.போ.ச.நிர்வாகம் உதவ வேண்டும்

அரசஊழியர்குறிப்பாகஆசிரியர்களின்நன்மைகருதிமன்னாரில் இருந்து தினமும் பி.ப.1.30 மணிக்கு சங்குப்பிட்டி, கேரதீவு, மறவன் புலவு, நாவற்குழி ஊடாக யாழ்ப்பாணம்வரைநடத்தப்பட்டு வந்த இ.போ.ச. பஸ்சேவையின் பயணப்பாதை திடீரென மாற்றப்பட்டு கேரதீவு தனங்களப்பு சாவகச்சேரி ஊடாக மேற்கொள்ளப்படுகிறது.

இதனால் மறவன் புலவு, தச்சன் தோப்பு, தனங்களப்பு, நாவற்குழி ஆகிய இடங்களில்வசிக்கும்அரச உத்தியோகத்தர்கள் உட்படப் பொதுமக்களும் பாதிக்கப்பட்டு வருவதுடன், மேற்படி பஸ்ஸில் யாழ்ப்பாணம் வரை பயணம் செய்யும் அரச உத்தியோகத்தர்கள் நேரத்திற்கு யாழ்ப்பாணம் சென்றடைய முடியாததால் இணைப்பு பஸ் சேவையைத் தொடர முடியாமலும் திண்டாடுகிறார்கள்.

இந்தநிலைகுறித்துப்பாதிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களாகிய நாம்குறித்தபஸ்சேவையைஅரச உத்தியோகத்தர்களின் நலன் கருதி வழமை போல் மீண்டும் மறவன்புலவு, தச்சன்தோப்பு ஊடாக நடத்துவதற்கு நடவடிக்கைஎடுக்குமாறுஇ.போ.ச.வட பிராந்திய முகாமையாளரைக் கோரியுள்ளோம்.

இதுவரை காலமும் ஆசிரியர்களின் நலன் கருதி பி.ப.1.30 மணிக்கு மன்னாரிலிருந்து புறப்படும்இ.போ.ச.பஸ்சேவைபூநகரி சங்குப்பிட்டி கேரதீவு மறவன் புலவுநாவற்குழியூடாகயாழ்ப்பாணம் செல்வது வழக்கம்.

இந்தச்சேவையின் பயணமார்க்கம் கடந்த ஒரு மாதகாலமாக மாற்றப்பட்டு மறுவன் புலவு நாவற்குழி ஊடாகச் செல்லாமல் கேரதீவு சாவகச்சேரி ஊடாக யாழ்ப்பாணம் சென்றடைகின்றது. இதனால்மன்னார்மாவட்டத்தின் பலபகுதிகளில் சேவையாற்றும் அரச உத்தியோகத்தர்களாக்குறிப்பாகத்தினமும் யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் மாவட்டப்பாடசாலைகளுக்கு கற்பித்தல் பணிக்காகச் சென்று திரும்பும் ஆசிரிய சமூகத்தினர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே இ.போ.ச. வடபிராந்திய உயரதிகாரிகள் இது விடயத்தில் உரிய நடவடிக்கை எடுத்துதவ அழுத்தம் கொடுக்குமாறு வேண்டிக்கொள்கிறோம்.

*பாதிக்கப்படும் பயணிகள்*

# பங்குச்சந்தை உறுதியான பெறுபேற்றை கண்டுள்ளது

## 2017ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப் பதிவாக அமைவு

பங்குச்சந்தை உறுதியான பெறுபேற்றினை கண்டுள்ளதென கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம் தெரிவித்துள்ளது. இந்த உறுதியான பெறுபேறுகள் 2017ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப் பகுதிக்கான பதிவாக அமைந்துள்ளன.

அனைத்துப்பங்கு விலைச்சுட்டிகள் (ASPI) 8.35 வீத உயர்வினையும், எஸ் அன்ட் பி எஸ்.எல் (S&P SL) 20 விலைச்சுட்டிகள் 11.67 வீத உயர்வினையும் பதிவுசெய்துள்ளன. 2017ஆம் ஆண்டு முதல் அரையாண்டில் பதிவுசெய்யப்பட்ட வெளிநாட்டுக் கொள்வனவுகள் கடந்த ஆண்டை விடவும் இரு மடங்காக காணப்படுவதுடன் இவ் அதிகரிப்பானது முதல் அரையாண்டு காலப் பகுதியில் வெளிநாட்டு கொள்வனவுகளில் அதிகூடிய வரலாற்றுப் பெறுமதியாகவும் அமைந்துள்ளது.

அதேவேளை 2016 ஆம் ஆண்டு 0.383 பில்லியன் ரூபாவாக காணப்பட்ட தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் 2017 ஆம் ஆண்டின் இது வரையான காலப்பகுதியல் 22.2 பில்லியன் ரூபாவாகப் பதிவாகியுள்ளன. தவிர பெப்ரவரி மாதத்தின் முதலாம் வாரம் தொடக்கம் 24 வாரங்கள் தொடர்ச்சியாக தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்களைப் பதிவு செய்துள்ளன.

2016 ஆண்டில் மந்தமான பெறுபேற்றினை பதிவு செய்த கொழும்பு பங்குப்பரிவர்த்தனை 2017ஆம் ஆண்டு முதல் அரையாண்டு காலப்பகுதி வரையில் குறிப்பிடத்தக்க முன்னேற்ற த்தினை கண்டு கொண்டுள்ளன.

இதன்படி அனைத்துப்பங்கு விலைச்சுட்டி (ASPI) 8.35 வீத உறுதியான வளர்ச்சியினை பதிவுசெய்து ஜூலை 12ஆம் திகதி 6,748.15 புள்ளிகளாகக் காணப்பட்டது. பெரிய மூலதனம் மற்றும் திரவத்தன்மை நிறைந்த பண்புசார் பட்டியற்படுத்தப்பட்ட 20 கம்பனிகளை உள்ளடக்கிய எஸ் அன்ட் பி எஸ்.எல் 20 விலைச்சுட்டி 11.67 வீத வளர்ச்சியினை முதல் காலண்டில் பதிவு செய்து ஜூலை 12 ஆம் திகதி 3,904.45 புள்ளிகளாகக் காணப்பட்டது.

2016 மற்றும் 2015 ஆண்டுகாலப் பகுதிகளில் முறையே 9.66 வீதம், 5.54 வீதம் வரு டாந்த வீழ்ச்சியை வெளிப்படுத்திய அனைத்துப்பங்கு விலைச்சுட்டிகள் (ASPI) 2017 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை பதிவுசெய்து கொண்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு ரூபா 737.2 மில்லியனாகக் காணப்பட்ட நாளாந்த சராசரி புரள்வானது 2017 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலச் சராசரியாக 912.7 மில்லியன் ரூபாவை பதிவாக வெளிக்காட்டி மொத்த வியாபார நடவடிக்கைகளையும் துரிதமடையச் செய்துள்ளன. (ஒ)

## கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்கள் அதிகரிப்பு

### மே மாத உற்பத்தியில் 2.3 வீதமாகப் பதிவு

2016 ஆம் ஆண்டின் மாதாந்த உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டின் மே மாத உற்பத்தியில் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் அளவீடானது 2.3 வீதத்தால் அதிகரித்துள்ளதாக தகவலை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரப் பணிப்பாளர் நாயகம் அமர சதரசிங்க வெளிப்படுத்தியுள்ளார்.

தவிர, உற்பத்திக் கைத்தொழில்களில், 2016 ஆம் ஆண்டு மே மாத உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டின் மே மாத உற்பத்திகளில் தளபாடங்கள் 21.6 வீதமாகவும், ஏனைய உலோகமல்லாத தாதுப் பொருள்கள் உற்பத்திகள் 15.4 வீதமாகவும் மற்றும் ஆடை அணிகலன்கள் 14 வீதமாகவும் பதிவாகியுள்ளதுடன் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் காட்டுகின்றன. உணவு உற்பத்தியானது மே மாதத்தில் 0.1 வீதத்தால் அதிகரித்துள்ளது.

அதேவேளை மரம் மற்றும் மரம் சார்ந்த உற்பத்திகள் 5.7 வீதமாகவும், இரசாயனமும் இரசாயனப் பொருள் உற்பத்தியும் 21 வீதமாகவும் மற்றும் புகையிலை உற்பத்திகள் 6.1 வீதமாகவும் வீழ்ச்சியைப் பதிவிட்டுள்ளன.

கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது மிக முதன்மையான பொருளாதாரக் குறிகாட்டியாக உள்ளதுடன் அவை குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் கைத்தொழில் உற்பத்தியின் அளவில் ஏற்படும் குறுகிய கால மாற்றங்களையும் வெளிப்படுத்துகின்றமை குறித்து நோக்கத்தக்கது. (ஒ)

## தேறிய முதலீட்டு உட்பாய்ச்சல்கள் வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவர்ந்துள்ளது

"மத்திய வங்கியின் வெளியகத் துறைப் பெறுபேறுகள் தொடர்பான அறிக்கையில் குறிப்பிடப்பட்டதற்கு அமைவாக பங்குச்சந்தை மற்றும் அரச பிணையங்களின் சந்தையில் தொடர்ச்சியாக அதிகரித்துவரும் வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல்களின் அளவுகள் நாட்டின் சென்மதிநிலுவைக் கணக்குக்கு உறுதுணையாக அமைந்துள்ளன.

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் தேறிய முதலீட்டு உட்பாய்ச்சல்கள் வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவர்ந்துள்ளதென தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக இவ்வாண்டு பெப்ரவரி மாதத்தின் முதலாம் வாரம் தொடக்கம் தொடர்ச்சியான 24 வாரங்களுக்கு தேறிய வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சலின் ஊடு சந்தை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மத்தியில் முதலீட்டுக் கான ஆர்வத்தினை ஏற்படுத்திக்கொண்டுள்ளது.

நடப்பாண்டின் முதல் அரையாண்டுக்கான குறிப்பிடத்தக்க அபிவிருத்தியாக வெளிநாட்டுக் கொள்வனவுகள் 62.6 பில்லியன் ரூபாவாகக் காணப்படுகிறது. 2016 ஆம் ஆண்டின் முதலாம் அரையாண்டுக்குரித்தான கொள்வனவுப் பதிவிடல்களான 31.5 பில்லியன் ரூபாக்களைக் காட்டிலும் இரண்டு மடங்காகப் பதிவு செய்து நிதியாண்டுகளின் அரையாண்டுக்கான உச்சவரம்பாக இவை அமைந்துள்ளன.

நடப்பாண்டில் இன்றுவரையான தேறிய வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல் என்பது 22.2 பில்லியன் ரூபாவாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் அதிகரித்ததான அடைவாக அமைந்துள்ளது. கடந்த ஆண்டினை எடுத்து நோக்கும் போது 383.5 மில்லியன் ரூபா முதலீட்டு உட்பாய்ச்சலினைப் பங்குச் சந்தை பதிவு செய்திருந்தது. மாறாக 2015 ஆம் ஆண்டு 5.3 பில்லியன் ரூபாக்கள் வெளிப்பாச்சலாக அமைந்திருந்தது. தவிர 2012 ஆம் ஆண்டு வரலாற்றில் அதிகூடிய தேறிய வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல் ஆண்டாக அமைந்திருந்தமையும் நிதியாண்டின் முடிவில் உட்பாய்ச்சலாக 38.6 பில்லியன் ரூபா பதிவிடப்பட்டிருந்தமையும் குறித்து நோக்கத்தக்கது. (ஒ)

## வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்களிப்பு சந்தைப் புரள்வில் அதிகரித்துப் பதிவு




கடந்த இரு நிதியாண்டுகளுடன் ஒப்பிட்டு நோக்கும் போது மொத்தச் சந்தைப் புரள்வில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்களிப்பு அதிகரித்துள்ளது. 2016 ஆம் ஆண்டு மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் முறையே 42.0 வீதமாகவும், 34.4 வீதமாகவும் காணப்பட்ட மொத்தச் சந்தைப் புரள்வில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்களிப்பானது நடப்பாண்டில் 47.2 வீத வளர்ச்சியை வழங்கியுள்ளன. அத்துடன் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் நடப்பாண்டின் இன்று வரையான காலப்பகுதிகளில் கடந்த ஏப்ரல் மாத புரள்வானது 50 வீதத்தினைத் தாண்டியுள்ளது. (ஒ)

### பங்குச்சந்தைத் தகவல்கள்

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 0212221455

CSE COLOMBO STOCK EXCHANGE — 19/9/2017 — www.cse.lk

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | ↑ 18.42 | 6,428.07 | 6,409.65 |
| S&P SL20 | ↑ 8.83 | 3,692.52 | 3,683.69 |
| வியாபாரப்புரள்வு | | 1,628,084,860 | 459,225,408 |
| உள்நாடு:- கொள்வனவு | | 642,996,350 | 183,866,464 |
| விற்பனை | | 772,903,300 | 281,543,616 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 985,088,580 | 275,358,944 |
| விற்பனை | | 855,181,570 | 177,681,776 |




| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 165.2 | 4,397,737 | 724,449,681 |
| மாதுளசிமா ப்ளாண்டேஷன்ஸ் | MADU.N | 15.3 | 17,414,204 | 295,299,270 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 233 | 679,750 | 158,381,761 |
| பலாங்கொட ப்ளாண்டேஷன்ஸ் | BALA.N | 27.7 | 3,766,224 | 119,984,501 |
| ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் | HHL.N | 123 | 566,100 | 69,671,650 |
| சம்பத் வங்கி | SAMP.N | 295.00 | 141,402 | 41,713,642 |
| டோக்கியோ சீமெண்ட் | TKYO.N | 70 | 469,978 | 32,897,087 |
| கொமர்சியல் வங்கி | COMB.N | 137 | 102,070 | 13,981,397 |
| ஷெவ்றோன் லூப்ரிக்கன் | LLUB.N | 123.5 | 102,847 | 12,704,692 |
| பர்ஸ்ட் கேப்பிடல் | CFVF.N | 37.2 | 346,867 | 12,698,914 |

**அறிவித்தல்கள்**

பங்குலாபம்
கார்கில்ஸ் (CARG) - Rs. 1.90
சி டி ஹோல்டிங்ஸ் (CTHR) - Rs. 1.80
ஹெண்டர்ஸ் அண்ட் கம்பெனி (HUNT) - Rs. 3.75

| சந்தைக் குறிகாட்டிகள். | | |
|---|---|---|
| கம்பனிகள் | ↑ | 295 |
| பரிமாற்றத்தில் | ↑ | 241 |
| விலை உழைப்பு | ↓ | 10.7 |
| புத்தகப்பெறுமதி | ↓ | 1.4 |
| பங்குலாப விளைவு | ↓ | 3 |



# ரொஹிங்யர்களுக்கு 14,000 முகாம்கள்

டாக்கா, செப். 20
மியன்மாரில் இருந்து தப்பித்து வரும் ரொஹிங்யர்களுக்காக பங்களாதேஷில் சுமார் 14ஆயிரம் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

மியன்மார், பௌத்தர்களை பெரும்பான்மை இனமாகக் கொண்ட நாடு. அங்கு சிறுபான்மை மக்களாக ரொஹிங்ய முஸ்லிம்கள் வாழுகின்றனர். கடந்த 25ஆம் திகதி ரொஹிங்ய முஸ்லிம்களின் உரிமைக்காகப் போராடிவரும் ஆயுதக் குழு மியன்மார் சிப்பாய்கள் மீது தாக்குதல் நடத்தியதில் 10 சிப்பாய்கள் உயிரிழந்தனர்.

இதையடுத்து ரொஹிங்யர்கள் மீதான அடக்குமுறைகள் அதிகரித்துள்ளன. இதுவரை சுமார் 5 லட்சம் ரொஹிங்யர்கள் அகதிகளாக பங்களாதேஷுக்கு சென்றுள்ளனர். அவர்களுக்கு பங்களாதேஷ் எல்லையில் சுமார் 14ஆயிரம் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அளவுக்கு அதிகமான அகதிகளை வைத்து பராமரிக்க முடியாமை தொடர்பாக பங்களாதேஷ் பல தடவைகள் பல கருத்துக்களைப் பதிவுசெய்துள்ளது. அவர்களைப் பராமரிப்பதற்காக அண்மையில் உலக நாடுகளின் உதவியைக் கோரியிருந்தது ஐக்கிய நாடுகள் சபை. (ம)



பங்களாதேஷில் ரொஹிங்யர்கள் தங்கியுள்ள அகதிகள் முகாமில் அவர்களுக்கு் உணவு வழங்கப்படுவதை வெளிப்படுத்தும் ஒளிப்படமே இது. ரொஹியர்கள் எதிர்கொள்ளும் உணவுத்தட்டுப்பாட்டை துல்லியமாகப் பறைசாற்றுகிறது இந்தப் படம். (ம)

# பொருளாதாரத் தடைகளால் சோதனைகள் அதிகரிக்கும்

## வடகொரியா மிரட்டல்

பியாங்யாங், செப். 20
'வடகொரியாவுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபை விதித்துள்ள பொருளாதாரத் தடைகள் எம்மை ஒன்றும் செய்யா' என்று வடகொரியா அறிவித்துள்ளது.

வடகொரியாவின் தொடர் சோதனைகளை அடுத்து அந்த நாட்டின் மீது ஏகப்பட்ட பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளது. இதன்படி வடகொரியாவின் முக்கிய ஏற்றுமதிகள் முடக்கப்பட்டுள்ளன. இதனால் வடகொரியா கட்டுப்படும் என்பது ஐ.நா. சபையின் கணிப்பு. இந்த நிலையில் 'எம்மை எந்தத் தடையும் கட்டுப்படுத்தாது' என்று தெரிவித்துள்ளது வடகொரியா. (ம)

# குர்து இனத்தவர்களுக்கு தனிநாட்டுக்கு இடமில்லை

## ஈராக் திட்டவட்டம்



"குர்து இன மக்களின் தனி நாட்டுக் கோரிக்கையை ஒருபோதும் ஏற்க முடியாது" என்று ஈராக் அரசு திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

ஈராக்கின் வடபகுதியில் குர்து இன மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். குர்திஸ்தான் என்றழைக்கப்படும் இந்தப் பகுதி ஈராக் ஆட்சியின் கீழ் தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படுகிறது. இந்த நிலையில் தனி நாடு கோரி குர்து இன மக்கள் தீவிர போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுதொடர்பாக வரும் 25ஆம் திகதி குர்திஸ்தான் பகுதியில் பொதுவாக்கெடுப்பு நடத்தப்படுகிறது. இதற்கு ஈராக் அரசு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. குர்து இன மக்களின் போராட்டத்துக்கு இஸ்ரேல் ஆதரவு தெரிவித்துள்ளது.

இந்த விவகாரம் குறித்து ஈராக் தலைமை அமைச்சர் ஹைதர் அல்பாக்தாதி, 'குர்து இன மக்கள் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும். அவர்கள் தீயோடு விளையாடுகிறார்கள். ஏதாவது பிரச்சினை எழுந்தால் இராணுவ ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும்" என்று எச்சரிக்கை விடுத்துள்ளார். (ம)






## முஸ்லிம் பெண்கள் வேற்று மதத்தினரை மணம்முடிக்க அனுமதி

### துனிசியாவில் திருப்பம்

துனிஸ், செப். 20

துனிசியா நாட்டில் முஸ்லிம் பெண்கள் வேற்று மதத்தினரை திருமணம் செய்து கொள்ள அனுமதி அளித்து புதிய சட்டம் உருவாக்கப்பட்டது.

இஸ்லாமிய மதத்தினர் அதிகம் வாழும் துனிசியா நாட்டில் சரீஅத் சட்டத்துக்கு உட்பட்ட ஆட்சி நடைபெற்று வருகிறது. பெற்றோரின் சொத்துகளில் அங்குள்ள பெண்களுக்கு சம உரிமை கிடையாது. மகன்களுக்கு இரண்டு பங்கும், மகள்களுக்கு ஒரு பங்கும் வழங்கும் பழக்கம்தான் செயல்பாட்டில் உள்ளது.

மேலும், முஸ்லிம் இளைஞர்கள் எந்த மதத்தை சேர்ந்த பெண்ணையும் காதலித்து, திருமணம் செய்துகொள்ள முடியும். ஆனால், முஸ்லிம் பெண்ணை காதலிக்கும் வேற்று மதத்தவர் யாராக இருந்தாலும் அவர் முஸ்லிமாக மதம் மாறிய பின்னர்தான் திருமணம் செய்து கொள்ள முடியும் என்ற சட்டம் கடந்த 44 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வருகிறது. இந்தச் சட்டத்தில் தற்போது மாற்றம் செய்யப்பட்டுள்ளது. (ம)





# பதற்றம் தருகின்ற போர்ப் பயிற்சிகள்

வொஷிங்டன், செப். 20

கொரியத் தீபகற்பத்தின் பிரச்சினை பூதாகரமாக வெடித்துள்ள நிலையில் அமெரிக்கா, தென் கொரியா இரண்டுநாடுகளும் கூட்டாக இணைந்து போர்ப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன. அதேபோல் சீனாவும், ரஷ்யாவும் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன. இந்தக் கூட்டுப் பயிற்சிகள் பதற்றத்தை மேலும் இரட்டிப்பாக்கியுள்ளன.

பன்னாட்டு சட்டதிட்டங்களை மீறி வடகொரியா தொடர்ந்து ஆயுத மற்றும் அணுவாயுதச் சோதனைகளை நடத்தி வருகிறது. இதற்கு உலக நாடுகள் பலவும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. வடகொரியாவைக் கட்டுப்படுத்துவதில் அமெரிக்கா கூடுதல் முனைப்புடன் செயற்படுகிறது. வடகொரியாவின் அயல் நாடுகளான ஜப்பான் மற்றும் தென்கொரியா என்பன அமெரிக்காவுடன் கைகோர்த்துள்ளன.

வடகொரியா இந்த மாதத்தில் மட்டும் மூன்று முக்கிய சோதனைகளை நடத்தியுள்ளது. இரண்டு ஏவுகணைகள் ஜப்பான் கடல் பரப்புக்கு மேலாகப் பறந்தன. ஒரு சோதனை ஐதரசன் குண்டுச் சோதனையாக அமைந்தது. ஐதரசன் குண்டுச் சோதனை அணுகுண்டுச் சோதனையை விடவும் சக்தி வாய்ந்தது. இந்தச் சோதனைகளால் வடகொரியா மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகள் மேலும் இறுக்கப்பட்டுள்ளன. வடகொரியா அணுவாயுதச் சோதனை



யைக் கைவிட வேண்டும் என்று உலக நாடுகள் அழுத்தம் கொடுத்து வருகின்றன. எனினும் "அமெரிக்காவுக்கு நிகராக அணுவாயுதச் சமநிலை ஏற்படும் வரையில், தமது சோதனைகள் தொடரும் என்று வடகொரியா அறிவித்துள்ளது". இதனால் கோபமடைந்த அமெரிக்கா 'வடகொரியா மீது விரைவில் இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும்" என்று எச்சரித்துள்ளது. எச்சரித்ததுடன் நின்றுவிடாமல் தென்கொரியாவுடன் இணைந்து போர்ப் பயிற்சியையும் நேற்றுமுன்தினம் மேற்கொண்டது. இதையடுத்து சீனாவும், ரஷ்யாவும் இணைந்து போர்ப் பயிற்சியை மேற்கொண்டன. வல்லரசு நாடுகளின் இந்தப் பயிற்சி பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளது. (ம)

## கியூபாவில் இருக்கும் அமெரிக்க தூதரகங்களை மூட முடிவு



வொஷிங்டன், செப். 20

கியூபாவில் ஒருவகை கிருமிகள் மூலம் நோய் பரவுவதால் அமெரிக்கத் தூதரகம் மூடப்படும் சூழ்நிலை உருவாகி உள்ளது.

அமெரிக்காவுக்கும் அதன் அண்டை நாடான கியூபா வுக்கும் இடையே பல ஆண்டுகளாக பகை இருந்தது. இதனால் இரண்டு நாடுகளுக்கும் இடையில் தூதரக உறவுகள் துண்டிக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் கடந்த 2015ஆம் ஆண்டு அப்போதைய அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா கியூபாவுடன் அமெரிக்காவின் உறவைப் புதுப்பித்தார். அதைத் தொடர்ந்து கியூபா தலைநகர் ஹவான்னாவில் அமெரிக்க தூதரகம் திறக்கப்பட்டது.

ட்ரம்ப் ஆட்சிப்பீடம் ஏறியதும் ஒபாமாவின் நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்கினார். எனினும் கியூபாவில் உள்ள அமெரிக்க தூதரகம் மூடப்படாது என உத்தரவாதம் வழங்கினார். இந்த நிலையில் தற்போது கியூபாவில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மூடப்படும் சூழ்நிலை உருவாகி உள்ளது. அங்கு பணிபுரியும் ஊழியர்கள் மூளைக்கட்டி, மூச்சுத் திணறல், தலைசுற்றல் உள்ளிட்ட புதுவிதமான நோய்களால் அவதிப்பட்டு வருகின்றனர். ஒருவகை கிருமிகளின் மூலம் இந்த நோய் பரவுகிறது என்று அமெரிக்கா சந்தேகப்படுகிறது. இதனாலேயே கியூபாவில் அமெரிக்கத் தூதரகத்தை மூடத் திட்டமிட்டுள்ளது. (ம)



அமெரிக்கா - மெக்சிக்கோ எல்லையில் தடுப்புச் சுவர் அமைக்கப்பட்டுள்ள நிலையில், ட்ரம்பின் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாக குழந்தை ஒன்றின் மிகப் பிரமாண்டமான பதாகையொன்று எல்லையில் வைக்கப்பட்டுள்ளது. (ம)


## கேள்வி அறிவித்தல்
## PSDG வேலைத்திட்டம் - 2017
## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை வட மாகாணம்

01. தலைவர்.உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு.வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை.தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வீதி வேலைகளுக்காக கோருகின்றார்.

02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, சித்தி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் 04/2016(i) ஆம் இலக்க 30.09.2016 ஆம் திகதிய பொதுச்சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) வீதி வேலை செய்வதற்கான கீழே அட்டவணையில் காட்டப்பட்டபடி பொருத்தமான தரத்தில் பதிவினை மேற்கொண்டிருப்பதுடன் வடக்கு மாகாணத்திற்குள் செல்லுபடியான வியாபார/கம்பனி பதிவினையும் கொண்டிருத்தல் வேண்டும்

04. தேவையான தகைமைகள். கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule)கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர் / செயலாளர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை நேரியகுளம்வீதி, நெளுக்குளம், வவுனியா (தொலைபேசி: 0242225737, தொலைநகல் - 0242050067, மின்னஞ்சல் npvstps@yahoo.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 03.10.2017ஆம் திகதி வரை மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணி வரை கேள்வி ஆவணத்தினை பார்வையிடலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணங்களை ஆங்கில மொழியில் தலைவர் / செயலாளர்,வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை. நேரியகுளம் வீதி. நெளுக்குளம் ,வவுனியா எனும் இடத்திலிருந்து 19.09.2017 திகதியிலிருந்து 03.10.2017 வரை காலை 09.00 மணிக்கும் 14:00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000/= (வரிகள் நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்பட வேண்டும்.

07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர் /செயலாளர் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை. நேரியகுளம் வீதி நெளுக்குளம். வவுனியா எனும் முகவரிக்கு 03.10.2017 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது. கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியிலிருந்து 63(அறுபத்தி மூன்று நாள்கள் 05.12.2017) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்

09. கேள்விப்பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ)மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/43(5)/5.5/10-5/17 | கற்பகபுரம் முதலாம் ஒழுங்கை கலனிட்டு தாரிடல்(02ம் கட்டம்) | 2.384 மில்லியன் | 45 நாட்கள் | C8 வீதி வேலை | 24,000.00 | 02.01.2018 |

10. கேள்வி கோரல் பற்றிய முன்னோடிக் கூட்டம் 26.09.2017 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபைக் கட்டிடத்தில் நடைபெறும் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்தச் செலவில் கலந்து கொள்ள முடியும்.

**தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை,**
**நெளுக்குளம், வவுனியா.**
**19.09.2017**

புதன் பொய்கை

பக்கங்கள் - 08



தேர்ந்தெடுக்கப்பட்டவன் அயோக்கியன் என்றால் தேர்ந்தெடுத்தவன் முட்டாள் என்று அர்த்தம்

- பெரியார்

# மொழி பெயர்ப்பு

## ஒரு படைப்பின் அர்த்தங்களை படைப்பாளியின் நிலைநின்று கருத்தூட்டல்

அம்பலவாணர் துரைசிங்கம்

ஒரு நாட்டில் வாழும் மக்கள் கூட்டத்தில் உள்ள தனிமங்கள் பேச்சு அல்லது எழுத்து மூலம் ஒருவருக்கொருவர் தொடர்பாடலை மேற்கொள்ள கருவியாக அமைந்திருப்பதே மொழி என வரையறை செய்யப்படுகிறது. இதன் வழியே உலகில் உள்ள ஒவ்வோர் சமூகங்களும் தமக்குரித்தான மரபுசார் வழக்கியல் நிலைகளுக்கு உட்பட்டு, தனித்துவமான மொழி அகராதிகளை உபயோகிக்கப்படுத்திக் கொள்கின்றன. அடிப்படையில் மக்களிடையேயான புரிந்துணர்வும், பரஸ்பர நம்பிக்கையும் மொழி சார்ந்து கட்டமைக்கப்படுகின்றன. இவற்றின் இடையே தொழில்நுட்பத்தின் பெறுதிகள் மிக வேகமாக முன்னேறி வருகிறது. அதன் அனுகூலங்களை அனைவரும் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவைப்பாடு உரித்துடையதாக்கப்படுகிறது. மொழிபெயர்ப்பு என்பது அதற்கான ஊடகமாக முதன்மைப் படுத்தப்படுகிறது. ஆங்கிலமொழியில் மொழிபெயர்ப்பு (Translation) என பெயர் குறிப்பிடப்படுகிறது.

### மொழிபெயர்ப்பு


மொழிபெயர்ப்பு என்பது. "ஒரு விடயத்தின் அர்த்தத்தினை படைப்பாளியின் கருத்து மற்றும் நோக்கத்தின் பால் விளக்கம் தர வேறொரு மொழியில் அர்த்தம் கற்பித்தல்" என வரைவிலக்கணம் கொள்ளலாம்.

மொழிபெயர்ப்பு என்ற செயல்நிலையை எடுத்து நோக்கின் அங்கு படைப்பாளி, மொழிபெயர்ப்பாளர் என இரு தனிம வகையினர் மொழியார்ந்து இணைவு பெறுகின்றனர். இவர்களுக்கிடையேயான வேறுபாடு என்ன என்பதைக் கருதின் 'ஒரு படைப்பாளிக்குரித்தான கட்டுக்கடங்காத சுதந்திரம்' எனப் பொருள்படும். படைப்பாளி தன் படைப்பை எப்படி வேண்டுமானாலும் எழுதலாம். எந்தவிதமான கட்டுப்பாடுகளும் இல்லை. ஆனால் மொழிபெயர்ப்பாளரின் நிலை அவ்வாறு அமைவு பெறுவதில்லை. அவர் தனது கற்பனை விருத்தியை உள்நுழைக்க முடியாது. திருமணம் என்ற வரையறைக்குள் கட்டுண்ட பெண்போலவே வகுக்கப்பட்ட கடமைகளோடு செயலாற்ற வேண்டும். படைப்பாளரின் கருத்துக்களில் எதையும் மாற்றாது அதே சமயம் சரியான மொழி நடையில் வாசகரை சென்றடைந்து சரியான பின்னூட்டம் தரும் வழிமுறையுள் செயற்பட வேண்டும்.

### மொழித்தேர்ச்சி

மொழிபெயர்ப்பாளர் இரு மொழித் தேர்ச்சி உடையவ்ராக இருக்க வேண்டும். அம்மொழிகளுக்குரிய கலாசாரங்களையும் அறிந்திருக்க வேண்டும். சம்பந்தப்பட்ட விடயம் குறித்த அறிவைக் கொண்டிருத்தல் சாலச்சிறந்தது. உதாரணமாக, விஞ்ஞானம் தொடர்பில் கல்வி கற்ற ஒருவர் கலை தொடர்பான விடயம் ஒன்றினை மொழிபெயர்ப்புச்செய்ய முற்படும் போது அதனால் அதிக சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

மொழிபெயர்ப்பு என்பது தொடர்பாடல், பிறிதோர் கலாசாரத்தை அறிமுகப்படுத்தல் அல்லது அறிந்து கொள்ளல், பிற மொழியினை கற்பது தொடர்பான நுட்பங் களை அறிதல் மற்றும் ஒருவரின் தனிப்பட்ட இரசனையோடு தொடர் புறல் சார்ந்து முக்கிய பங்கினைக் கொண்டுள்ளது. விஞ்ஞானம், தொழில்நுட்பம், நிறுவனம், சமூக பொருளாதாரம், அரசியல், இலக்கியம், தத்துவம் தொடர்பான விடயங்களிலும் முதன்மைப் பங்காற்றுகைக் காரணியாக சிறப்பிடம் பெறுகிறது.



மொழிபெயர்ப்பில் முதன்மையானது, விடயத்தினை எவ்வகையில் மொழிபெயர்ப்பது அதாவது இலகுமொழிபெயர்ப்பு ( free Translation) அல்லது சொல்லுக்கு சொல் மொழிபெயர்ப்பு (Literal translation) என்பதனை தீர்மானிப்பதாகும். மொழிபெயர்ப்பு என்பது கடினமான பணி. இருந்த போதும் மேற்குறிப்பிட்ட காரணிகளை கருத்திற்கொண்டு இளம்மொழிபெயர்ப்பாளர்களை எம்மவர்கள் ஊக்குவிப்பது வரவேற்கத்தக்க விடயம்.




### மொழியின் தொழிற்பாடும் பரிமாற்றமும்

ஒருமொழியின்தொழிற்பாட்டினை நோக்கும் போது மொழியானது ஆக்கபூர்வமான படைப்பு, தகவலை வழங்கும் படைப்பு (creative/informative) விடயத்தின் இரசனைகளை வெளிப்படுத்துகின்ற (expressive) படைப்பு, ஒருவரின் செயற்பாடுகளை மாற்றக்கூடிய அல்லது தூண்டக் கூடிய படைப்பு (opera tive) என்றவிதமாக பரிமாற்றம் கொள்கிறது. உபயோகம் தருகிறது.

ஆக்கபூர்வமான அல்லது தகவல் வழங்கும் படைப்புக்களாக உசாத்துணை அறிக்கைகள், அறிக்கைகள், உரையாற்றுகைகள், இயக்குதல் தொடர்பான வழிமுறைகள், சுற்றுலாக்கையேடுகள், உத்தியோகபூர்வ உரைகள், விமர்சனங்கள் உள்ளடக்கம் பெறுகின்றன.

விடயத்தின் இரசனைகளை வெளிப்படுப்படுத்துகின்ற படைப்புக்களாக கவிதைகள், நாவல்கள், சிறுகதைகள், நாடகங்கள், சுயசரிதைகள் குறிப்பிடப்படுகின்றன.

ஒருவரின் சிந்தனை மற்றும் செயற்பாடுகளை மாற்றுவது தொடர்பான படைப்புகளாக விளம்பரங்கள், தேர்தல் உரைகள், சமயப் பரப்புரைகள் போன்றன கொள்ளப்படுகின்றன. அதாவது கேட்பவர்களை அல்லது வாசிப்பவர்களை அதற்கிணங்கவே செயற்படும்படி தூண்டுதல் தொடர்பானது.

சில விடயங்கள் கலப்புத் தன்மை உடையவையாக (Hybrid) அமையலாம். ஒரு சுயசரிதையானது தகவலை வழங்குவதுடன் வாசிப்பவரை சிலவிடயங்கள் தொடர்பில் தூண்டுவதாகவும் அமையலாம். அதேபோன்று சமய பிரசாரங்கள் குறிப்பிட்ட சமயம் தொடர்பான தகவலுடன் கேட்போரை குறிப்பிட்ட சில செயற்பாடுகள் தொடர்பில் பின்பற்ற தூண்டுதல் தருபவையாகவும் அமையலாம்.

### அறிவும் விடயத் தீர்மானமும்

எனவே மொழிபெயர்ப்பாளர் மொழிபெயர்க்கப்படும் விடயம் தொடர்பில் போதுமான அறிவு, அவ்விடயம் தொடர்பான கலாசாரம் மற்றும் மொழிபெயர்ப்பினை வாசித்து பயன்பெறும் வாசகர் தொடர்பாக அதிய அவதானம் கொண்டிருத்தல் அவசியமாகிறது.

### வாசகரை இனம் காணலும் பொருத்தமுறலும்


மொழிபெயர்ப்பில் முதன்மையானது, விடயத்தினை எவ்வகையில் மொழிபெயர்ப்பது என்று அதாவது இலகு மொழிபெயர்ப்பு ( free Translation) அல்லது சொல்லுக்கு சொல் மொழிபெயர்ப்பு (Literal translation) என்பதனை தீர்மானிப்பதாகும். முற்காலத்தில் கற்றோர் பலரும் இலகு மொழி பெயர்ப்பு முறையினை ஆதரித்ததாக அறியக்கிடைக்கிறது. 20 ஆம் நூற்றாண்டில் 'மனித வர்க்க சாஸ்திரம்' (Anthropology) ஒரு மொழியை சம்பந்தப்பட்ட கலாசாரத்தின் வெளிப்பாடாக கருதியது. அத்துடன் ஒரு மொழியில் இருந்து இன்னொரு மொழிக்கு மாற்றம் செய்வது சாத்தியம் அற்றது என்ற கருத்து நிலையைக் கொண்டிருந்தது. அதன் பேறாக சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பு விருப்புடையதாக காணப்பட்டது. இக்கோட்பாடு தற்போது மாற்றம் அடைந்துள்ளது. தற்போது விடயம் மட்டுமல்ல மொழிபெயர்ப்பின் நோக்கம், வாசகர்களின் தகுதிநிலை மற்றும் விடயத்தின் வகை என்பனவும் கருத்தில் கொள்ளப்படல் வேண்டியது அவசியமாகிறது.

மொழிபெயர்ப்பு என்பது கடினமான பணி. இருந்த போதும் மேற்குறிப்பிட்ட காரணிகளை கருத்திற்கொண்டு இளம்மொழிபெயர்ப்பாளர்களை எம்மவர்கள் ஊக்குவிப்பது வரவேற்கத்தக்க விடயம். உதாரணமாக "Good Morning" என்றால் நல்ல காலைப்பொழுது எனலாம் ஆனாலும் 'இனிய காலை வணக்கம்" என்பது பொருத்தமுடைய மொழியின் பெயர்வாக அமையும்.

தொழில்நுட்பச் சொற்களை மொழிபெயர்ப்பது மிகக் கடினமான விடயம். புரியக்கூடிய மொழியில் ஐயம் தெளிந்து அவற்றை மொழிபெயர்த்தல் அவசியம். இந்த சந்தர்ப்பங்களின் போது உரிய ஆங்கில சொற்களை அருகில் அடைப்புக்குறிகள் கொடுப்பது பொருத்தமானது.

புத்தகங்களை மொழிபெயர்க்கும் போது நூலாசிரியரின் அடிப்படை நோக்கத்தினை

புரிந்து கொண்டு மொழிபெயர்க்க வேண்டும்.இந்த மொழிபெயர்ப்பு ஆளுமை ஆங்கில மொழியில் இலகு மொழிபெயர்ப்பு என அழைக்கப்படுகிறது.



உரைபெயர்ப்பு (Interpretation) என்பதும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது.இவை சமகால உரைபெயர்ப்பு, தொடர்ச்சியான உரைபெயர்ப்பு என வகைப் படுத்தப்படுகின்றன. ஒருவர் உரையாற்றும் போது அதனை உடனடித் தன்மையோடு சமகாலத்தில் உரைபெயர்ப்பது சமகால உரைபெயர்ப்பு எனப்படும். நாடாளுமன்றத்தில் இவ்வகையான உரைபெயர்ப்பே இடம் பெறுகிறது.

இது மிகவும் கடினமான செயற்பாடாகும். ஒருவர் பேசுவதை கிரகித்து உடனுக்குடன் கேட்போர் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் கூறுவதற்கு அனுபவம் கைகொடுக்கிறது.

தொடர்ச்சியான உரைபெயர்ப்பு என்பது பேச்சுத்தொடர் அல்லது கலந்துரையாடல் முடிந்ததும் அல்லது குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் உரை நிறுத்தப்பட்டு உரிய உரை பெயர்ப்பினை வழங்குவதை குறிக்கும். மொழிபெயர்ப்பாளராக சேவையாற்ற விரும்புவோர் இரண்டு மொழித் தேர்ச்சியுடன், சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் போதுமான அறிவு உடையவராக இருத்தல் வேண்டும். எனவே முயற்சியும் கூடுதலான வாசிப்புப்பழக்கமும் தரமான மொழிபெயர்ப்பாளனை உருவாக்கும்.


**வேண்டப்படும் பணி**

ஆக,தற்போது சில பாடசாலைகளில் நிலவும் ஆங்கில மொழித்தேக்க நிலை எதிர்காலத்தில் தரமான மொழிபெயர்ப்பாளர்கள் உருவாக்கிக் கொள்வதில் தடைகளை ஏற்படுத்திவிடலாம். இதனைச் சிந்தனைபூர்வமாக அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். பாடசாலைகளில் உரிய முறையில் ஆங்கில மொழிக்கல்வியை பெற்றுத் தரப் பணி செய்ய வேண்டும்.தரம் 3 தொடக்கம் அதற்கான படிநிலைகளையும் வழிமுறைகளையும் ஏற்படுத்திக் கொடுத்து மாணவர்களுக்கு ஊக்கம் தர வேண்டும்.













நிந்தவூரைச் சேர்ந்த பன்னூலாசிரியரும், கவிஞருமான ராஜகவி ஏ.ஸீ.ராகிலின் 'ஓவியனை வாசித்த புல்லாங்குழலின் வர்ண இசை' எனும் கவிதை நூலின் வெளியீட்டு விழா நிந்தவூரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. புலவர் மருதூர் ஏ.மஜித் தலைமையில் நிந்தவூர் பிரதேச மண்டபத்தில் நிகழ்வுகள் நடைபெற்றன. விழாவில் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம். ரீ.ஏ.நிசாம் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டார். கவிஞர் சோலைக்கிளி வாழ்த்துரையையும், பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா ஆய்வுரையையும் நிகழ்த்தினர். (ம-30)

# கம்பனும் அவ்வையும்

## கவிப்புலமையூடு ஆத்மங்களை வெளிக்காட்டும் தனித்துவங்கள்

வளவை வளவன்

தமிழ்கூறும் நல்லுலகு என்றென்றும் கவிஞர்களையும் புலவர்களையும் மதிப்போடு பாராட்டுவதும், அவர்களைப் பேணுவதும், சமூகத்தின் பால் எடுத்துக் காட்டுவதும் என தனித்துவமான பண்பியல்பை வழக்கமாகக் கொண்டிருந்தன. இன்றும் அந்தப் பண்பியல்பில் குறைவின்றிய தன்மை இல்லாவிட்டாலும் அன்று போல இன்று இல்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.

**கவிப் புலமைகள்**

அன்று பெரும்புலவர்கள் வாழ்ந்திருந்த போதும் கம்பர் மட்டுமே 'கவிச்சக்கரவர்த்தி' என்று அழைக்கப்பட்டார். பெண்பாற் கவிஞர்களுள் அவ்வையார் மட்டுமே 'கவிமடந்தை' என்று பேசப்பட்டார். வரலாற்றின் பக்கங்களில் பலவாறு இவர்கள் பேசப்பட்டும் தனித்துவமாகக் குறிப்பிடப்பட்டும் வருகின்றனர். இத்தகைய பெருமைக்குரியவர்களாக வாழ்ந்த தமிழ்ப்புலவர்களின் மத்தியிலே கம்பர் சிறப்பிடம் பெறுகிறார். ஆயிரம் பொற்காசுகள் தந்தால் ஒரு நாலடி வெண்பா பாடிக் கொடுப்பது அன்று கம்பரின் வழக்காகியிருந்தது.

**சிலம்பியின் காத்திருப்பு**

இந்த நிலையில் சோழ மண்டலத்து வீதியொன்றில் வாழ்ந்து வந்த சிலம்பி என்ற பெண் பேராசை கொண்டாள். கம்பரின் கவிதையால் தன்னை வாழ்த்திப் பாடுவிக்க விருப்பினாள். தன்னிடமிருந்த அனைத்துப் பொருள்களையும் திரட்டிப் பொற்காசுகளாக மாற்றிக் கொண்டு கம்பரின் வருகைக்காக காத்திருந்தாள். காலங்கள் கரைந்தன. கம்பர் அந்த வீதியால் ஒரு நாள் வந்து சேர்ந்தார்.

**கம்பரின் வருகை**

சிலம்பி கம்பரை வணங்கினாள். பல நாள்களாகத் அவரது வரவை எதிர்பார்த்துக் காத்திருப்பதாகத் கூறினாள். என்னைப் புகழ்ந்து பாட வேண்டும் கவிச்சக்கரவர்த்தி அவர்களே என்று தன் விருப்பை வெளிப்படுத்தினாள். கம்பர் புன்னகைத்தார். பின்பு "என் கவிதைக்கான வெகுமதியைக் கொடுத்தால் பாடுவேன்" என்றார்.
சிலம்பி மனம் மகிழ்ந்தாள். தான் சேர்த்து வைத்திருந்த பொற்காசுகளை எண்ணிப் பார்த்துவிட்டு அப்படியே கம்பரிடம் ஒப்புவித்தாள். கம்பரும் பொற்காசுகளை எண்ணிப்பார்த்தார். அதில் ஐந்நூறு மட்டுமே இருந்தன. கம்பர் சிந்தனைவயப்பட்டார். அவளுடைய பேராசைக்கு ஏற்ப தான் பெற்றுக்கொண்ட பொற்காசுகளுக் குரித்தான வகையில் அளவாகப் பாட்டை எழுதிக் கொடுப்போம் என்று எண்ணினார். இதோ பாடுகிறேன் எனக் கூறினார் கம்பர். தான் கூறியவாறே சிலம்பியின் வீட்டுச் சுவரில் இரண்டு அடிகளை எழுதினார்.

**கம்பனின் கவி**

அந்த இரு வரிகளும்
"தண்ணீரும் காவிரியே தார் வேந்தன் சோழனே
மண்ணாவதும் சோழ மண்டலமே....!" என அமைந்திருந்தன. சிலம்பியை விழித்த கம்பர், "நீ கொடுத்த பொற்காசுகளுக்கு ஏற்ற கவிதையை எழுதியுள்ளேன்" எனக் கூறி அவ்விடம் இருந்து நகர்ந்தார்.
சிலம்பிக்கோ பெருங்கவலையாகிப் போய்விட்டது. இத்தனை பொற்காசுகளைக் கொடுத்தும் எனது பெயரைப் பாடலில் வருமாறு பாடவில்லையே என்ற ஏக்க மேலீட்டோடு சோர்ந்து போய் இருந்தாள்.

**அவ்வையின் வருகை**

இந்தச் சந்தர்ப்பத்திலே அவளது நல்ல காலமோ அல்லது அவளது ஆசை ஈடேறுவதற்குரிய காலமோ தெரியவில்லை யாருமறியாமல் அந்த வீதி வழியாக அவ்வைப்பாட்டி வந்து சேர்ந்தார்.
அவ்வையின் வருகையைக் கண்ணுற்ற சிலம்பி அவரை அன்போடு வரவேற்றாள். தன் வீட்டு வாசலுக்கு அழைத்தாள். அவ்வையும் சற்றுக் களைப்பாறிச் செல்ல விரும்பினார். சிலம்பியின் அழைப்பை ஏற்றுக் கொண்டார். அவள் வீட்டுத் திண்ணையில் வந்து அமர்ந்து கொண்டார்.
"பாட்டி களைத்துப் போனீர்கள். அடுப்பிலே கூழ் அவிந்து கொண்டு இருக்கிறது. இறக்கி ஆற வைத்து விட்டு வருகிறேன். களைப்பாறுங்கள்" எனக்கூறிச் சென்ற சிலம்பி கூழைப் பக்குவமாக இறக்கி ஆற வைத்து பருக ஏற்றவாறு ஆற்றி எடுத்துக்கொண்டு திண்ணைப் பக்கமாக வந்தாள்.
அவ்வை அங்கே வீட்டின் திண்ணை மேற் சுவரில் எழுதி இருந்த பாடலைப் பார்த்துக் கொண்டிருந்தாள். சிலம்பி அதைக் கவனிக்காதது போல நடந்து கொண்டாள். "அம்மா தாயே கூழ் பதமாக இருக்கிறது. குடியுங்கள்" என்று கூறிக் குவளைக்குள் ஊற்றிக் கொடுத்தாள்.





**கம்பனின் கவியைப் பாடி முடித்தல்**

அவ்வை கூழைப் பெற்றுக் கொண்டார். "இந்தப் பாடலை யார் எழுதினார்கள்..?" என்று கேட்டார். பின்பு எழுதியவர் குறையில் ஏன் விட்டு விட்டார் என்று சிலம்பியைக் கேட்டார். நடந்தவற்றை அறிந்து கம்பரின் செயலை நொந்துகொண்டார். கவலை கொண்டு சிலம்பியைத் தேற்றினார். கூழைக் குடித்து முடித்தார். பின்னர் சுவரில் எழுதும் பச்சிலையைப் பெற்றார்.
"பெண்ணாவாள் அம்பொற் சிலம்பி அரவிந்தத்தாள் அணியும் செம்பொற் சிலம்பே சிலம்பு" எனப்பாட்டை எழுதி முடித்துப் புன்னகைத்தார். "உனது பெயர் வருமாறு பாட்டை முடித்துள்ளேன் பார் சிலம்பி. மகிழ்ச்சி தானே" என்றாள் அவ்வை.
அவ்வையின் குறை வரிகளில் தனது பெயர் வந்ததைக் கண்டு சிலம்பி மனம் மகிழ்ந்தாள். அவ்வையை ஆரத் தழுவி ஆனந்தம் கொண்டாள். அவ்வையும் ஒரு பெண்ணின் கவலையைப் போக்கி மகிழ்ச்சியடைய வைத்த திருப்தியோடு தன் பயணத்தைத் தொடர்ந்தாள்.

**கம்பன் கொண்ட சினமும் கவித் தூற்றலும்**

கம்பன் இந்தச் செய்தியை அறிந்து கொண்டான். "என்னை இழிவுபடுத்தும் விதமாக கூழுக்காகப் பாடி என்பாட்டைப் குறையின்றி நிறைவேற்றிய அவ்வையே உனை 'அடியே' என வரவேற்பேன்" எனக் கூறி மனதுள் தீராத குழைவோடு காத்திருந்தார் கம்பர்.
சோழமன்னனின் புலவர்கள் தங்குமிடம் நோக்கி அவ்வையார் செல்வதை கம்பர் கவனித்துக் கொண்டார்:. "ஒற்றைக்

அன்று பெரும்புலவர்கள் வாழ்ந்திருந்த போதும் கம்பர் மட்டுமே 'கவிச்சக்கரவர்த்தி' என்று அழைக்கப்பட்டார். பெண்பாற் கவிஞர்களுள் அவ்வையார் மட்டுமே 'கவிமடந்தை' என்று பேசப்பட்டார். வரலாற்றின் பக்கங்களில் பலவாறு இவர்கள் பேசப்பட்டும் தனித்துவமாகக் குறிப்பிடப்பட்டும் வருகின்றனர். இத்தகைய பெருமைக்குரியவர்களாக வாழ்ந்த தமிழ்ப் புலவர்களின் மத்தியிலே கம்பர் சிறப்பிடம் பெறுகிறார். ஆயிரம் பொற்காசுகள் தந்தால் ஒரு நாலடி வெண்பா பாடிக் கொடுப்பது அன்று கம்பரின் வழக்காகியிருந்தது.

கால் நாலிலைப் பந்தலடி அது என்ன என்பது போல் விடை கூறு" எனக் கிண்டல் பண்ணினார். அவ்வையை 'அடியே' என விழித்து வரவேற்றார் கம்பர்.
உண்மையில் ஆரைக் கீரைக்கு இலைகள் குறைவாக இருக்கும். கிளையில்லாதது அதன் கீரைத்தண்டு என்பதை உவமித்துத் தலையில் மயிர் அதிகம் இல்லாத நாலு மயிர்க்குடுமியை உடைய அவ்வை பொல்லூன்றி நடப்பதால் அந்தப் பொல்லைக் கீரைத்தண்டுக்கு உவமித்து ஆரைக் கீரை அடியே எனப்பாடியதை பலரும் விளங்கிக் கொள்வர் என எண்ணி மனதில் மகிழ்ந்திருந்தார் கம்பர்.

**அவ்வையின் பதில்கவி மேவல்**

அவ்வை உற்றகவி மடந்தையல்லவா? கம்பன் கூற்றின் அர்த்தத்தை உள்வாங்கிக் கொண்டாள். மிக இலகுவாகப் பதிலளித்தாள்.
"எட்டுக்கால் இலட்சணமே எமனேறும் பரியே
முட்ட முட்டக் கூரையில்லா வீடே
குலராமன் தூதுவனே
ஆரையடா சொன்னாய் எனத் தனது வார்த்தை மொழிவை முடித்தாள். தன்னை இழிவுபடுத்தி அடியே எனப்பாடிய கம்பருக்கு 'அடா' என இடித்துரைத்துப் பதில் விழித்து அமர்ந்தாள் அவ்வை.
'அடி' என்று கர்ச்சித்த கம்பனுக்கு 'அடா' என பதிலை இடித்துரைத்து அவன் கொட்டத்தை அடக்கிய அவ்வையின் கவிப்புலமையைத் தமிழ் கூறும் உலகம் இன்றும் போற்றிப் பணிகிறது.

**நீங்க வல்லமைகள்**

இத்தகு சிறப்புடைய இரு பெரும் வல்ல கவிச்சுடர்களின் வல்லமையும். கவிதா ஆற்றலும் இலக்கியப் பொய்கைக்குள் புதையலாக இருப்பது தமிழின் சுவைக்கு இன்பம் பயப்பதன்றோ! தமிழ் உள்ளவரை அந்த இரு வல்லவர்களும் வாழ்ந்திருப்பர்.

# வாழ்வு தரும் வாழ்வகம்

■ வை.க.ரவீகரன்





வாழ்வகம் அதன் பெயருக்கு ஏற்றால் போல் வந்தவர்களை வாழ வைத்துக்கொண்டிருக்கும் ஒரு புண்ணிய பூமியாகும். விழிப்புலவலுவிழந்தவர்களை மட்டுமன்றி அங்குபணிக்கு வரும் எவரையும் வாழவைப்பதில் ஒரு சக்தி உண்டெனில். எவரும் மறுப்பதற்கிடமில்லை. இதற்கெல்லாம் வாழ்வகத்தில் உறங்கியிருந்து சூட்சுமமாக அனைவரையும் ஆசீர்வதித்துக்கொண்டிருக்கும் வாழ்வக அன்னை கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் திருவருளே காரணமாகும். வாழ்வகம் ஆரம்பிக்கப்பட்டு முப்பதாவது ஆண்டினைத்தொட்டுள்ள இந்நேரத்தில், இதன் நிறுவுனர் கலாநிதிஅன்னலட்சுமிசின்னத்தம்பியை நினைந்து இக்கட்டுரை வரையப்படுகின்றது.

அன்னையவர்கள் மறைந்த பின்னும் கூட அவர்கள் எம்முடனே இருக்க வேண்டும்என்பதுவாழ்வகப்பிள்ளைகளினதும் வாழ்வக சமூகத்தவர்களினதும் விருப்பம் அவரது பொன்னுடல் வாழ்வக வளாகத்தில் சமாதியாக்கப்பட்டுள்ளது.

**வாழ்வகம் எனும் விருட்சத்தின் வேர்**

வாழ்வக பிள்ளைகளினால் வாழ்வகத்தம்மா என மிகஅன்பாக பேசப்படும் கலாநிதிஅன்னலட்சுமிசின்னத்தம்பிஅம்மையார் விழிப்புலனற்றவர்கள் வாழவழி தெரியாமல் தவித்து நின்றபோது அவர்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டி அவனியிலே அவர்கள் தலைநிமிர்ந்து வாழஅரும்பணியாற்றி, தன் வாழ்நாள் முழுவதனையும் விழிப்புலனற்ற பிள்ளைகளுக்கே அர்ப்பணித்து வாழ்வகம் எனும் பெருவிருட்சத்தினை நிறுவி, திறம்பட முகாமை செய்து இன்று வாழ்வக வளாகத்திலே உடலால் உறங்கியும் உள்ளத்தால் சூட்சுமமாக வாழ்ந்து வாழ்வகம் வரும் யாவரையும் ஆசீர்வதித்துக்கொண்டிருக்கிறார்.

சின்னத்தம்பி தையற்பிள்ளை தம்பதியினரின் ஏழாவது மகளாய் 11.01.1937 இல் அன்னை அவதரித்தார். வளரும் பயிரை முளையிலே தெரியும் என்பதற்கிணங்க நிதானமும் நல்லொழுக்கமும் புத்திக் கூர்மையும் அவரிடம் இயல்பாகவே குடி கொண்டிருந்தன. தனக்கு சரியெனப்பட்டதை ஆற்றுவதற்கோ அல்லது கூறுவதற்கோ ஒரு போதும் தயங்குவதில்லை. அன்னையவர்கள் தனது பாடசாலைக் கல்வியை காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி, மாவிட்டபுரம் வீமன்காமம் மகாவித்தியாலயம், சுன்னாகம் இராமநாதன் கல்லூரி ஆகியவற்றில் கற்றுத்தேறி 1958 இல் திருநெல்வேலி ஆசிரியப்பயிற்சிக்கலாசாலையில் இணைந்து ஆசிரியப் பயிற்சியினை சிறப்பாக மேற்கொண்டார். 01.06.1960 இல் அன்னையவர்கள் களுத்துறை சாகிராக்கல்லூரியிலே தனது முதல் ஆசிரியப்பணியினைப் பொறுப்பேற்றுக்கொண்டார். பின்னர் 01.07.1968 இல் இடமாற்றம் பெற்று கொழும்பு கொட்டாஞ்சேனை விவே கானந்தா மகாவித்தியாலயத்தில் பணி புரியத்தொடங்கினார். அக்காலத்திலேயே அன்னையின் வாழ்வில் பெரிய மாற்றம் ஒன்று ஏற்பட்டது. இதுவே வாழ்வகம் எனும்பெருவிருட்சம்தோன்றக்காரணம் எனலாம்.

**வாழ்வகம் தோன்றியதற்கான அடிப்படைக் காரணம்**

ஒருதடவை தற்செயலாக கண்பார்வையற்ற ஒருவரை சந்திக்க நேர்ந்தது. அந்தக் கணமே, அன்னையவர்களின் மனதில் இனம்புரியாத ஒருமாற்றம் நிகழ்ந்ததனை அவர் உணர்ந்தார். இருள் சூழ்ந்த இவர்கள்போன்றவர்களின் வாழ்வுக்காக ஏன் நாம் ஒளியாக இருக்கமுடியாது என சிந்தித்தார். அக்கணம்முதல் அவரது கண்கள் பார்வையற்றோருக்காக ஒளி வீசத்தொடங்கின. தன் உடல்பொருள் ஆவி அத்தனை[illegible] வாழ்நாள் [illegible] விழிப்புல[illegible]விழந்தவர்களுக்காக அர்ப்பணிக்கவெனத் திடம் கொண்டுஅவ்வாறேவாழ்ந்தும்காட்டினார்.

அறுபதுகளில் இலங்கையில் கண்பார்வையற்றவர்கள் கல்வியில் மேம்படுவதற்கோ அதன் மூலமாக தமது வாழ்வாதாரத்தினை உயர்த்திக்கொள்வதற்கோ எவ்வித வசதிவாய்ப்புக்களும் காணப்படவில்லை. இந்நிலைமையினைப்போக்கும் வகையில் 1972 ஆம் ஆண்டு இலங்கையில் ஒருமுகப்படுத்தப்பட்ட கல்வித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் பயனாக பார்வையற்ற மாணவர்கள் சாதாரணமாணவர்களுடன் இணைந்து கல்வி கற்பதற்கு வாய்ப்புக்கிட்டியது. எனினும் இத்தகைய திட்டத்தினை யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு எவருமே முன்வரவில்லை. ஏனெனில் சலுகைகள் ஏதுமற்ற இக்கடினமான பணியினைதுணிந்து மேற்கொள்ளக்கூடிய மனப்பாங்கு யாரிடமும் இருக்கவில்லை. இந்த வேளையில் தான் நமது அன்னை செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி விசேட கல்வி டிப்ளோமாக்கற்கை நெறியினை மகரகம ஆசிரியர்பயிற்சிக்கல்லூரியில் நிறைவு செய்து 1972 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வருகை தந்து தனது பணியினைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இதுவே இத்தேசமெங்கும் தமிழ்பேசும் விழிப்புல வலுவிழந்தவர்களது வாழ்வில் ஒளியேற்றி பெரும் புரட்சியாக மாறியது. கிராமம் கிராமமாக, வீடு வீடாக சென்று பார்வையற்ற பிள்ளைகளை பல்வேறுதரப்பினர் ஊடாக தேடிக்கண்டு பிடித்து அவர்களையெல்லாம் பாடசாலைக்கு கைப்பிடியாய் அழைத்துவந்தார். பார்வையற்ற பிள்ளைகளை தமது குடும்பகௌரவம் கருதி மூடிமறைத்து வீடுகளில் ஒளித்து வைத்த மரபை அன்னையவர் மாற்றிப்புடம்போட்டார். போக்குவரத்து வசதிகள் அதிகம் இல்லாத அக்காலகட்டத்தில் நெரிசல்மிக்க பேருந்துகளிலும் பல சமயங்களில் வெகுதூரம் கால்நடையாகவும் சென்று தனது பணிகளினை முன்னெடுத்தார். எனினும் இச்சிரமங்களை எள்ளளவும் பொருட்படுத்தாது தனது இலக்கினை மட்டும் குறிக்கோளாகக்கொண்டு விழிவலுவிழந்த பிள்ளைகள் பலரை இனங்கண்டு சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி, பாஷையூர் புனித அந்தோனியார் பாடசாலை, யாழ் இந்துக்கல்லூரி, சுன்னாகம் இராமநாதன் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி [illegible] நிலைப்பள்ளி, வீமன்காமம் மகா[illegible]யாலயம், [illegible] பெண்கள் [illegible] துறை [illegible] தில் சேர்த்து [illegible]தார்.

**பார்வையற்றோர் பட்டதாரிகளாகினர்**

அன்னையின் முயற்சியினால் இருபதுக்கும் அதிகமான பார்வையற்றோர் பட்டதாரிகளாயினார். இன்னும் பலர் பல்வேறு நிலைகளில் தமது கல்வியினைப் பெற்று வாழ்வில் வளம் கண்டுள்ளனர். 1980 களின் நடுவே ஓய்வு பெறுகின்ற காலம்நெருங்கி வரவே தனக்குப்பதிலாக விசேடகல்வி ஆசிரியர் ஒருவரை குடாநாட்டில் நியமிக்குமாறு கல்வி அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தும், யாரும் அது தொடர்பில் செவிசாய்க்காத காரணத்தால் பார்வையற்ற மாணவர்கள் ஆரோக்கியமான சூழ்நிலையில் தங்கியிருந்து தமது கல்வியைத்தொடரக்கூடியதான இல்லம் ஒன்றினை அமைத்தல் வேண்டும் என்ற எண்ணம் அவர் மனதில் உதயமாகியது. இதன் பெறுபேறாக 1988 இல் தெல்லிப்பழை காசிவிநாயகர் ஆலயம் அருகே வாழ்வகம் உதயமாயிற்று. 1990 இல் அன்னையவர்கள் தனது ஆசிரியப்பணியிலிருந்து ஓய்வு பெற்றது முதற்கொண்டு தன்னை முழுவதுமாகவே வாழ்வகத்திற்கு அர்ப்பணித்து அதன் இன்னல்கள் இடப்பெயர்வுகள் அத்தனைக்கும் தனியொருவராய் நின்று ஈடுகொடுத்தார். ஈற்றில் 2002ஆம் ஆண்டு வாழ்வகத்தை தற்போதுள்ள அதனது சொந்த வதிவிடத்தில் நிலைநிறுத்துவதிலும் பெரும் வெற்றி கண்டார்.

2016ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஒன்பதாம் திகதி சடுதியாய் நோயுற்று, அதே மாதம் பதினோராம் திகதி இறைபதம் அடைந்தார். அவரின் மறைவுக்குப் பின்னர் அவரது விருப்பம் போலவே அவரின் மாணாக்கரான திரு. ஆறுமுகம் ரவீந்திரன் வாழ்வகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று தொய்வேதுமின்றி வாழ்வகப் பணிகளை இற்றைவரை மிகச்சிறப்பாக முன்னெடுத்துவருகின்றார். வாழ்வகத்தம்மா கண்ட கனவுகளை நிறைவேற்றுவதில் தலைவர் திரு. ஆ. ரவீந்திரன் மிக முனைப்பாக ஈடுபட்டு வருகின்றார்.

**வாழ்வகத்தின் சாதனைகள்**

கல்வியில் பெற்றுக்கொண்ட சாதனைகளாக, விழிப்புலனற்றவர்களில் பதினைந்துக்கும் மேற்பட்டவர்களை பட்டதாரிகளாக உருவாக்கியுள்ளமை. அது மட்டுமன்றி இன்னும் பல மாணவர்கள் கற்றுத்தே[illegible] உயர்ந்த நி[illegible]ளினை [illegible] கல்வியிலு[illegible] இவர்கள் [illegible] தாமே [illegible] சொந்[illegible] [illegible] வது சட்டத்தரணியாகிய திரு. ஃப்ரனிஸ் அற்புதராஜை உருவாக்கிய பெருமையும் வாழ்வகத்தினையே சாரும். இவ்வாறே தற்போது திரு. சொர்ணலிங்கம் தர்மதன் என்ற மாணவன் க.பொ.த உயர்தரப்பரீட்சையில் 3 ஏ பெற்று யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறையில் இறுதிவருட மாணவனாக கல்விகற்றுக்கொண்டிருக்கின்றார்.

தற்போது ஆறு மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் கற்றுக்கொண்டிருக்கும் அதே வேளை மேலும் ஐந்து மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ளனர். செல்வன் கலாமோகன் பிரகான் என்ற மாணவன் தேசிய மட்ட தமிழ்த்தினப்பேச்சுப்போட்டி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு மகாவலி அபிவிருத்தி அமைச்சு நடாத்திய பேச்சுப்போட்டி ஆகிய இரண்டிலும் கலந்துகொண்டு இலங்கை ரீதியில் முதலிடம் பெற்று அதில் ஒரு பரிசாகிய தங்கப்பதக்கத்தினை இலங்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அவர்களது கரங்களால்பெற்று வாழ்வகத்துக்கு பெருமை சேர்த்திருந்தார்.

இறைவன் எம்மை நன்றாக படைத்ததன் நோக்கம், மாற்று வலுவுடையவர்களை அன்புடன் அரவணைப்பதற்காகவே என்ற சிந்தனையினை மனதில் நிறுத்தி வாழ்வகத்தினை அமைத்து இன்று மீளாத்துயில்கொள்ளும் அன்னையின் சேவைகள் மதிக்கப்படல்வேண்டும். அவர் ஆற்றிய பணிகளை எதிர்காலச்சந்ததியினர் அறியச்செய்தல்வேண்டும். இதற்காக அன்னை ஆற்றிய சேவைகள் இனிவரும் காலங்களில் பாடநூல்களில் பொறிக்கப்படல் வேண்டும். இவையெல்லாம் எமது நீண்டநாள் அவாவாகும்.

நிறைவாக வாழ்வகத்தினை அன்னைக்குப்பின் தொய்வின்றி தோள்கொடுத்து நடாத்திவரும் அதன் தற்போதைய தலைவர் திரு ஆறுமுகம் ரவீந்திரனும் (விரிவுரையாளர் தேசிய கல்வியியல் கல்லூரி) உபதலைவராகிய அவர்தம்பாரியார் திருமதி மோகனவதனி ரவீந்திரனும் (ஆசிரியர், மகாஜனாக்கல்லூரி, தெல்லிப்பழை) மற்றும் மிகச்சிறந்த நிர்வாகசபையினரும் ஆற்றிவரும் பணிகள் அன்னையின் ஆசீர்வாதங்களால் மெருகூட்டப்படுவதுடன் மென்மேலும் விரிவடைய வேண்டும். பிள்ளைகளது ஆற்றல்கள் மேலும் மேலும் [illegible]


[illegible]

சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்

# பிரட்ரிக் கோட்டை கல்வெட்டுக்கள் காக்கப்படுமா?

அச்சுதன்





பிரட்ரிக் கோட்டையில் உள்ள கல்வெட்டுக்கள்...

ஈழத்தில் புகழ்பெற்ற சிவத்தலங்களாக திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் என்னும் இரண்டு சிவத்தலங்களும் சிறப்பு பெறுகின்றன. தமிழ்நாட்டுத்திருத்தலங்களின் வரலாறுகள்பன்னெடுங்காலமாகஉலகச் சைவமக்களின் நெஞ்சில் நிலைபெற்றிருப்பதுபோன்றுஈழநாட்டுத்திருத்தலங்களும் இந்துக்களின் இதயத்தில் இருந்து வருகின்றன.

**திருக்கோணேஸ்வரம்**


திருக்கோணேஸ்வரம், இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் உலகப் பிரசித்தி பெற்ற இயற்கைத் துறைமுகமா கிய திருகோணமலைத்துறைமுகம் அமைவதற்குச் சாதகமாயுள்ள மூன்று மலைகளின் உச்சியில்இருக்கின்றது. மூன்றுமலைகளைக் கொண்டு முக்கோண வடிவில் அமைந்திருப்பதால்திருக்கோணமலை, என்று இந்த நகரம் பெயர் பெற்றது. இந்த நகரத்தில் பிரசித்தி பெற்ற திருத்தலம் கோணேஸ்வரம் ஆதலால் திருகோணமலை எனவும் இந்த நகரம் பெயர் பெறுகின்றது. இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இந்துக்களின் திருத்தலமாகிய திருக்கோணேஸ் வரம் புனித சேஷத்திரமாக இருந்துவந்ததைபுராண. இதிகாச வரலாறுகள் கூறுகின்றன. எனவேஇந்தத்தலத்தின்இயல்பானதெய்வீக விசேடத்தினாலே இந்த நகரம் திருக்கோணமலை என்ற பெயரால் வழங்கி வருகின்றது.

**திருமலையில் போர்த்துக்கீசர்கள்**

போர்த்துக்கீசர்1505 ஆம் ஆண்டு இலங்கையில் தடம் பதித்தனர். போர்த்துக்கீசரின் வருகையின் பொழுது திருகோணமலை மாவட்டம் நான்கு பிரிவுகளாக இருந்தது. கொட்டியாரம்பற்று, தம்பலகாமம் பற்று, கட்டுக்குளப்பற்று, திருகோணமலைநகர் ஆகியன அந்தநான்குபிரிவுகளாகும். இவற்றைத் தமிழ் வன்னிய குறுநில மன்னர்கள் ஆட்சி செய்தனர்.



பிரட்ரிக் கோட்டையின் நுழைவாயில்....



யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆளுகைக்குள் திருகோணமலை உட்பட்டிருந்தது. ஆனாலும்கொட்டியாரம்பற்றுகாலத்திற்கு காலம் கண்டிய மன்னர்களின் ஆட்சியிலும் இருந்தது.1551 ஆம் ஆண்டில் சங்கிலியனின்ஆட்சிஅஸ்தமிக்கத்தொடங்கிய பொழுது கண்டி எழுச்சி பெற்றது.

இலங்கையின்கரையோரப்பகுதிகளைக் கைப்பற்றிய போர்த்துக்கீசரை அகற்றுவதற்காக கண்டிய மன்னன் செனரத் விடா முயற்சி கொண்டான். அதற்காக டச்சுக்காரருடன்ஒப்பந்தம்செய்துகொண்டான். இச்சூழ்நிலையில்டச்சுக்காரர்திருகோணமலையைப்பிடிக்கமுடியாமல்தடுப்பதற்கு போர்த்துக்கீசர் நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

கோட்டைஒன்றைகட்டுவதற்குபோர்த்துக்கீச தளபதி கொன்ஸரன்ரைன் டி சா கோணேஸ்வர ஆலயம் அமைந்திருந்த மலைப்பகுதியை தெரிவு செய்தான் என்பது வரலாறு.

**திருகோணமலையின் சிறப்புக் கூறும் சாசனங்கள்**

இந்த நிலையில் கிழக்கில் திருகோணமலை மாவட்டத்தில் புராதன வரலாற்றுச் சாசனங்கள் நிறையவே காணப்படுகின்றன. காலத்தால்இன்றும்பேசப்படும்ஒரு விடயத்தை பதிவு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

சடையவர் மகன் வீரபாண்டியன் இலங்கை அரசனானமுதலாம்புவனேகபாகுவைஅடக்கித்திருகோணமலையில் தன் கயற்கொடியைப் பதின்மூன்றாம் நூற்றாண்டிற் பொறித்தான் என்று தென்னிந்தியக் கோயிற் சாசனங்களிலொன்றானகுடுமியாமலைச்சாசனங்கூறுகின்றது. இவ்வினைக்கயல்மீன்கள்திருகோணமலைபிரட்ரிக்கோட்டைநுழைவாயிலின் இரு மருங்கிலும் இப் பொழுதும் காணப்படுகின்றன. அத்துடன் அன்று ஆயிரங்கால்ஆலயம் என்று அழைக்கப்பட்டகோணநாதர்கோயிற்தூண்ஒன்றிற் பொறிக்கப்பட்ட கல்வெட்டின் சிறு பகுதியொன்றை பிரட்ரிக் கோட்டை வாசல் தூணில் உள்ள மீன் சின்னத்திற்கு கீழே இன்றும்காணலாம். இக்கல்வெட்டானது குளக்கோட்ட மன்னன் காலத்து தீர்க்க தரிசன கல்வெட்டாகும்.

*“முன்னே குளக்கோட்டன் மூட்டும்*
*திருப்பணியைப்*
*பின்னே பறங்கி பிரிக்கவே மன்னாகேள்*
*பூனைக்கண், செங்கன்,*
*புகைக்கண்ணன். ஆண்டபின்*
*தானே வடுகாய் விடும்”*

என்று அந்தக் கல்வெட்டு காணப்படுகின்றது. எனவே திருகோணமலையின் வரலாறு ஆதாரமாகவும், ஈழத்தில்தமிழரின் அடையாளசின்னமாகவும்இந்தவிடயம் திகழ்வதுடன், திருக்கோணேஸ்வரத்தின் வரலாறுகளை விவரிப்பதாகவும் காணப்படுகின்றது. எனினும் இச்சாசனக்களின் இன்றைய நிலை பற்றி பார்க்கின்ற போது மிகவும் கவலை அளிக்கின்றது.


வீதிகளுக்கு பூசப்படும் வர்ணங்கள் இச் சாசனக்கல் மீது பூசப்பட்டிருப்பதால், சாசனங்களின் தொன்மை சிதைக்கப்பட்டு இருப்பதுடன், அதன் சிறப்பும் அதன் அழகும் அழிக்கப்பட்டிருக்கின்றது. இச் சாசனம் அமைந்துள்ள பிரட்ரிக் கோட்டை வாசலின் ஊடாக தினமும் வாகனங்கள் பயணிப்பதால் அதன் அதிர்வுகளாலும், வாகன புகைகளினாலும் சாசனங்கள் சேதம் ஆவதற்கு நிறையவே வாய்ப்புக்கள் உண்டு.

எனவே இச் சாசனங்களை பாதுகாக்க திருக்கோணேஸ்வரத்தின் ஆலய பரிபாலன சபையினரும், திருகோணமலை மண்ணின் தமிழ் அரசியல் வாதிகளும் முன்வரவேண்டும்.இந்தவிடயத்திலாவது இவர்கள் கவனம் எடுப்பார்களா...?





பாசையூரைச் சேர்ந்த நூலாசிரியர் பெஞ்சமின் கிறிஸ்தோப்பரின் 'ஞானசௌந்தரி நாட்டுக்கூத்து' நூல் வெளியீட்டு நிகழ்வு கலாபூஷணம் பி.யூல்ஸ் கொலின் தலைமையில் பாசையூரில் அண்மையில் இடம்பெற்றது. நூல் வெளியீட்டைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. (ம - 23)



# நவராத்திரி விழாவும் கும்பம் வைத்தலும்

தி.தவரத்தினம்

இந்துமதம் பரந்த நோக்கோடு மனித வாழ்வை மேம்படுத்தத் தக்கவகையில் வாழ்வியலை சமயத்துடன் இணைத்து சமயம், சமூகம் சார்ந்த விழாக்களையும், விரதங்கள் பண்டிகைகளையும் வகுத்துள்ளது. அவை மகிழ்ச்சியான மானிட வாழ்வுக்கு அவை வழிகாட்டி நிற்கின்றன.

அந்த வகையில் விரதங்களையும், விழாக்களையும் சிறப்புற நடத்திட திதி, நட்சத்திரம், நாள், கிழமை, மாதம், ஆகியவற்றைக் காரண காரியமாகக் கொண்டு உருவாக்கினர் எமது முன்னோர்.

ஒவ்வொரு ஆண்டும் புரட்டாதி மாதத்தில் வருகின்ற அமாவாசையை அடுத்துவரும் பிரதமை திதிமுதல் பத்துத் தினங்கள் அம்பிகையை வெவ்வேறு வடிவங்களில் எழுந்தருளச் செய்து இந்து மதத்தவர்கள் வழிபாடு இயற்றுவர்.

முதல் மூன்று நாள்களும் வீரத்தை வேண்டி துர்க்கையையும் அடுத்துவரும் மூன்று நாள்களும் செல்வத்தை வேண்டி இலட்சுமியையும் இறுதி மூன்று நாள்களும் கல்வியை வேண்டி சரஸ்வதியையும் வணங்கிப் பணிவர்.

இறுதியான பத்தாம் நாள் விஜயதசமியாகிய வெற்றியின் திருநாள் அன்று மகிசாசூர சங்சாரம் நடைபெறும்.

பத்தாம் நாள் ஆகிய தசமி தியில் துர்க்கா, மகிசாசூரனை சங்கரிக்க தேவியானவள் இலட்சுமி, சரஸ்வதி ஆகிய மும்மூர்த்திகளின் அம்சமாக மூன்று சக்திகளும் ஒருங்கே பெற்றவளாக விளங்குவாள்.

நவராத்திரி விழாவை சரஸ்வதி பூசை என சிறப்பாக அழைப்பர். இது ஒரு சமய விழா மாத்திரம் அன்று பண்பாட்டு விழுமியங்களை வெளிக்கொணரும் உன்னதமான சமூக விழாவாகும்.

தமிழர் தம் கலை, பண்பாடு, கலாசாரம் ஆகியவற்றைப் பேணிப் பாதுகாக்கும் சிறப்பான கலைத்தாயவள் வாணி விழாவாகும். இந்தக் காலப் பகுதி தொழிலை நேசிக்கவும், அருள் வேண்டவும், காரியங்களைத் தொடக்கவும், கல்வி கற்கவும் உகந்த காலப் பகுதியாக கொள்ளப்படுகின்றது.

நவராத்திரிவிழா பன்னடுங் காலமாக சிறப்பாக நடைபெற்று வந்தமைக்கு இதிகாச புராணங்களில் சான்றாதாரங்கள் உண்டு. இராமாயணத்தில் விஜயதசமி நாளிலே. ஆயுதபூசை செய்தமை பற்றிக் குறிப்பிடப்படுகின்றது.

நவராத்திரி விழா ஆரம்பம் பற்றி இந்த முறை முரண்பாடான கால விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன. இதே போன்றே 2014 ஆம் ஆண்டு மகிசாசூர சங்காரத்திலும் இவ்வாறானதொரு நிலை காணப்பட்டு பத்திரிகை வாயிலாக விளக்கம் அளிக்கப்பட்டு இருந்தது.

இந்த வருடமும் நவராத்திரி விழா ஆரம்பக் கும்பம் வைத்தல் பற்றிய விளக்கத்தில் மாறுபாடு காணப்படுகின்றது. நவராத்திரி காலத்தில் கும்பத்தில் தேவியரை எழுந்தருளச் செய்யும் திதி நிர்ணயமே முக்கியமாக கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியதாகின்றது.

> நவராத்திரி விழாவை சரஸ்வதி பூசை என சிறப்பாக அழைப்பார். இது ஒரு சமய விழா மாத்திரம் அன்று ஒரு பண்பாட்டு விழுமியங்களை வெளிக்கொணரும் உன்னத சமூக விழாவாகும். தமிழர் தம் கலை, பண்பாடு, கலாசாரம் ஆகியவற்றைப் பேணிப் பாதுகாக்கும் சிறப்பான வாணி விழாவாகும். இந்தக் காலம் தொழிலை நேசிக்கவும், அருள் வேண்டவும், காரியங்களைத் தொடக்கவும் கல்வி கற்கவும் உகந்த காலமாக கொள்ளப்படுகின்றது.



ஆகவே, நவராத்திரியின் உள்பொருள் இராத்திரியில் தேவியரைப் பூசை செய்வதே சிறந்தது என்பதை அர்த்தப்படுத்துகிறது. எனவே இன்று புதன்கிழமை புரட்டாதி வளர்பிறை பிரதமை திதி. அமாவாசை முடிய 13 நாடி 21 விநாடி உள்ளது. வாக்கிய சாங்கப் படி முற்பகல் 11 மணி 23 மணியில் இருந்து பிரதமை ஆரம்பமாகின்றது..

எனவே முற்பகல் வேளையில் இருந்தே கும்பம் வைக்கலாம். 21 ஆம் திகதி ஆரம்பித்தால் அன்று பகல் வேளை முற்பகலுடன் பிரதமை அற்றுப் போகிறது. எனவே, எங்ஙனம் ஒரு இரத்திரி திதியை கடைப்பிடிப்பது. அத்தோடு ஒரு திதி எவ்வளவு நேரம் அதிகமாக நிற்கும் நாளையே நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இன்று முற்பகல் 11.20 மணிக்கு மேல் கும்பம் வைக்கலாம்.

இதனை சகல பாடசாலைகளும் ஆலயங்களும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்தமுறை திதி காரணமாக 11 நாள்கள் நவராத்திரி விழா நடைபெறுகின்றது.

விழாவின் இறுதி விஜயதசமி ஏடு தொடக்குதலுடன் கூடிய முக்கியமான நாளாகும். அன்று சிறார்களுக்கு சுப நேரத்தில் குறிப்பாக ஏடு தொடக்கும் நேரத்தில் கும்பம் இருத்தல் மிக முக்கியமானது. கும்பம் கலைத்தபின் ஏடுதொடக்குதல் நல்லதல்ல; முத்தேவியரும் கும்பத்தில் எழுந்தருளி இருக்கும் நேரத்தில் ஏடு தொடக்குவதே சாலச் சிறந்ததாகும். எனவே சகல குருமார்களும் பனை ஓலையிலான ஏடுகளில் கல்விக்கான ஆரம்பம் தருதல் நன்று. தேவியரின் இறையருளினால் நலம்பல பெற்று வாழ்வில் வளம் பெறுவோமாக.

*கட்டுரையாளர்: அதிபர்*
*யா/அராலி முருகமூர்த்தி வித்தியாசாலை*





சி.கா.செந்திவேல் எழுதிய 'வட்டுக்கோட்டையிலிருந்து முல்லைத்தீவு வரை' நூற் பிரதியின் அறிமுக நிகழ்வு புத்தூர் கலைமதி கிராம மக்கள் மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் நூலாசிரியர்கள், விமர்சகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம)



# மாணவர்களது ஓவியத்திறனை பலரறிய வைத்த சித்திரக்கண்காட்சி

தென்னவன்





ஓவியங்கள் உயிரோட்டம் உள்ளவையாக அமையும் பட்சத்தில் அவை நிச்சயம் காலங் காலமாக காட்சிப் பொருள்களாக பாதுகாக்கப்படுகின்றன. சிகிரியா குகையில் காணப்படும் அஜந்தா ஓவியங்கள் இன்றும் பாதுகாக்கப்படுவதற்கு அதன் உயிரோட்டத் தன்மை காலம் காலமாக அழியாத்தன்மை கொண்டவையாக உள்ளமையே காரணமாகும்.
ஓவியம் மற்றும் சிற்பம் போன்றவை சிறந்த மொழியாகக் கருதப்படுகின்றன. இனம் மொழி நாடு போன்றவற்றுக்கு அப்பால் அனைவரும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் அவை காணப்படுவதால் ஓவியம், சிற்பம் போன்றவற்றுக்கு எங்கும் தனி மதிப்புக் காணப்படுகிறது. ஓவியங்கள், சமூகத்திற்கு விழிப்புணர்வு ஊட்டும் ஊடகமாக விளங்கவேண்டும். அதன் வெளிப்பாடு அனைவரையும் கவர்வது மட்டுமல்லாது, அதன் வெளிப்பாடு உயிரோட்டம் போன்றவற்றால் சமூகத்தின் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படல்வேண்டும்.
ஓவியன் தனது மனதில் தோன்றுவதை வரைவது அவனது திறமைகளை வளர்க்கும் பண்பாகும். காற்றின், மழையின், ஒலிகளை இசையாக உருவாக்கும் வல்லமை இசையமைப்பாளனுக்கு காணப்படுவது போல, கண்களால் காணும் காட்சியைத் தத்ரூபமாக வரைவதில் வல்லமை மிக்கவனாக ஓவியன் திகழ்கின்றான்.
அவ்வாறு சிறப்பமிக்க ஓவியர்களை மாணவப் பருவத்தில் உருவாக்கமுடியும் என்ற சிந்தனையை வேள்ட் விஷன் லங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் நடாத்திப் பல்வேறு ஓவியர்களை எம்மத்தியில் உருவாக்கித்தந்துள்ளனர் தென்மராட்சி கல்விவலயத்தினர் என்றே கூற வேண்டும். அந்த அளவுக்கு அண்மையில் நடைபெற்ற கல்வி வலயத்தின் சித்திர பாட மாணவர்களால் உருவாக்கப்பட்ட ஆக்கங்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வு அமைந்திருந்தது.

### பாடசாலையில் சித்திரப்பாடம் கற்பித்தல் நீண்டகால நடைமுறை

பாடசாலைகளில் முன்னைய காலங்களில் இருந்தே சித்திரபாட ஆசிரியர்கள் மூலம் சித்திரக்கலை பாடம் நடாத்தப்பட்டு வருகின்றன. தற்போது சித்திர பாடமானது பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டங்களில் உள்வாங்கப்பட்டதால் சித்திரபாடத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற பல ஆசிரியர்கள் பாடசாலைகளில் சித்திரபாடத்தை மாணவர்களுக்குப் போதித்து வருகின்றனர். கலைஞன் உருவாக்கப்படுகிறான் என்பதற்கமைய ஒவ்வொரு ஓவியனும் உருவாக்கப்பட்டு மக்கள் மத்தியில் பிரபல்யம் பெறுகின்றான். ஓவியக் கலையை தெளிவறக் கற்றவர்கள் இன்று அதனைத் தொழிலாக்கி நிறையச் சம்பாதிக்கிறார்கள். அவ்வாறு உருவாக்கப்பட்டு பட்டம் பெற்ற ஆசிரியர்களைக் கொண்ட தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களை சித்திர பாடத்தில் தேர்ச்சி பெற வைப்பதற்காக உருவாக்கப்பட்ட 'விஷன்' என்னும் சித்திர பாட ஆக்கங்களின் காட்சிப்படுத்தல் வலயத்தினால் கடந்த நான்கு வருடங்களாக தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றன.

### முன்னுதாரணமாக செயற்படும் தென்மராட்சி கல்வி வலயம்

இதன் பிரதிபலிப்பாக இவ்வருட சித்திர பாட ஆக்கங்களின் காட்சிப்படுத்தல் தொடர்பாக பாடசாலைகளுக்கு அது தொடர்பான விடயங்களுடன் சுற்றுநிரூபம் அனுப்பப்பட்டபோது 263 மாணவர்கள் போட்டியில் பங்குபற்ற விண்ணப்பித்திருந்தமை வலயத்தின் செயற்பாட்டுக்கு உந்துசக்தியாக விளங்கியது எனத் தெரிவிக்கப்பட்டது. 263 மாணவர்களின் சித்திர பாட ஆக்கங்களும் கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என வகுப்பு ரீதியாக பிரிக்கப்பட்டு மாவட்டத்தின் மூன்று கல்வி வலயங்களில் பணியாற்றும் சித்திர பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மூலம் தேர்வு இடம்பெற்றது. அவர்களால் வகுப்பு ரீதியாக 30 ஆக்கங்கள் தேர்வு செய்யப்பட்டு வழங்கப்பட்டிருந்தன..

வலயத்தினர் இந்த 30 மாணவர்களையும் வலயத்திற்கு வரவழைத்து அவர்களிடம் வேள்ட்விஷன் நிறுவனத்தினால் சித்திரங்களை உருவாக்கக் கூடிய உபகரணங்கள், காகிதாதிகள், வர்ணங்கள் போன்றவை வழங்கப்பட்டு சித்திரங்கள் உருவாக்கப்பட்டன. அவ்வாறு 30 மாணவர்களாலும் சித்திர பாட ஆசிரியர்களாலும் உருவாக்கப்பட்ட 300க்கு மேற்பட்ட சித்திரங்கள் நிகழ்வில் காட்சிப்படுத்தப்பட்டன. இந்த சித்திரங்கள் சமூகத்தின் செயற்பாடுகள் தொடர்பாக மாணவர்களின் மதிப்பீடுகள், வெளிப்படுத்தல், மேம்பாடுகள், பௌதீக உளவியல் போன்றவை இந்தச் சித்திரங்களில் காணமுடிந்தது.

### பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்திய ஓவியங்கள்

வலயத்தினால் வழங்கப்பட்ட சுற்றுநிருபத்திற்கேற்ப மாணவர்களது சித்திரங்கள் இன்றைய சமூதாயத்தின் நிலைகளைத் தெட்டத் தெளிவாகச் சித்தரிக்கும் வகையில் காணப்பட்டன. படகுகளில் அவுஸ்திரேலியா செல்ல முற்படுவது, அதனால் குடும்பத்தினர் படும் கஷ்டங்கள், படகுகளில் செல்லும் போது ஏற்படும் உயிரிழப்புகள், திருப்பி அனுப்பப்படும் வேளைகளில் குடும்பத்தினர் படும் அவல நிலை போன்ற சித்திரங்கள் மற்றும் போதைப்பொருள்கள் பாவன்ன, அவற்றால் ஏற்படக்கூடிய விளைவுகள், பாதிப்புகள் போன்றவற்றைச் சித்திரிக்கும் சித்திரங்கள், மேலும் இன்றைய போக்குவரத்துகள் அவற்றைக்கையாளும் செயற்பாடுகளால் ஏற்படும் பாதிப்புகள் போன்றவற்றைச் சித்திரிக்கும் சித்திரங்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இவற்றடன் குமிழ்முனைப் பேனாவினால் லதுசிகன் என்னும் மாணவனால் புள்ளிகள் போட்டு வரைந்த பத்துக்கு மேற்பட்ட சித்திரங்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. குமிழ்முனைப் பேனாவினால் வரையப்பட்ட சித்திரங்கள் பார்வையாளர்கள் அனைவரையும் கவர்ந்திருந்தன. அத்துடன் சித்திர பாட ஆசிரியர்களால் உருவாக்கப்பட்ட சித்திரங்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.
மாணவர்களால் ஆக்கப்பட்டிருந்த சித்திரங்கள் அனைத்தும் மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவதுடன், சமூகத்துக்கான விழிப்புணர்வை ஊட்டக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டிருந்தமை பாராட்டத்தக்கது . இன்றைய சமூகம் என்ன நிலையில் உள்ளன என்பதைச் சுட்டிக்காட்டும் வகையில் சித்திரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. உண்மையில் எம்மிடையே தொற்று நோயாக மாறியுள்ள வெளிநாட்டுப் பயணங்கள் பணம் கொடுத்து சட்ட விரோதமாக படகுகளில் செல்வதால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள், படகுகள் கடலில் பிடிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டால் குடும்பத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புகள், போன்றவற்றைச் சுட்டிக் காட்டும் சித்திரங்கள் வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தை ஊதாரித்தனமாக செலவிட்டு போதைக்கு அடிமையாகிச் சமூகமே நோய்களுக்கு இலக்காகி அழிந்துபோவதைச் சுட்டிக் காட்டும் சித்திரங்கள் குடும்ப வாழ்க்கை முறைகள் ஆலயங்கள் பராமரிப்புகள் வழிபாடுகள் எம்மால் காலம் காலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் தொழில் முறைகள் போன்றவற்றைச் சித்திரிக்கும் சித்திரங்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.
தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற சித்திர பாட ஆக்கப் பொருட்களின் காட்சிப்படுத்தல் வலயக் கல்விப் பணிப்பாளர் சு. கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி ந. அமிர்தலிங்கமும், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்கள ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ. சு. சற்குணராஜாவும், மதிப்புறு விருந்தினர்களாக வேள்ட் விஷன் லங்கா நிறுவன சாவகச்சேரி பிரதேச செயற்றிட்ட முகாமையாளர் அ.கி. றொசைறோ, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, விரிவுரையாளர். நா. ராஜன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.
பாடசாலைகள் விடுமுறைக் காலமான போதிலும் நிகழ்வைக் காண பெருமளவு மாணவர்களும், ஆசிரியர்களும், அதிபர்களும், பெற்றோரும் வருகை தந்திருந்தமையை இந்த நிகழ்வுக்கு கிடைத்த ஊக்குவிப்பாக கருதலாம்
தென்மராட்சி கல்வி வலயம் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுடன் தொடர்புடைய நிகழ்வுகளை அடிக்கடி சிறப்புற நடத்தி வருகின்றது. அதன் ஓர் அங்கமாக 'விஷன்' என்னும் சித்திர பாட ஆக்கப் பொருட்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வினையும் வருடாந்தம் நடாத்தி சித்திர பாடம் கற்கும் மாணவர்களுக்கு ஊக்குவிப்பை வழங்குவதுடன் மேலும் பல மாணவர்களை உள்வாங்க வழி சமைக்கிறது. வலயத்தின் இந்த முன்மாதிரியான செயற்பாடு எதிர்காலத்தில் பிரதேசத்தில் சிறந்த ஓவியர்களை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறு பயிற்றப்பட்ட மாணவர்களில் லதுசிகன் என்னும் மாணவனின் குமிழ்முனைப் பேனாவினால் உருவாக்கப்பட்ட சித்திரங்கள் பார்வையாளர்களை கவர்ந்ததுடன் பிரதேசத்தில் மேலும் பல மாணவர்களை குமிழ்முனைப் பேனாவைக் கொண்டும் உருவங்கள், காட்சிகளை உருவாக்க முடியும் என்பதை எமக்குப் புரிய வைத்துள்ளமைக்கு வலயத்தினருக்கு பாராட்டுக்களைக் கூறிக் கொள்ளலாம்.



# வரலாற்றில் இன்றைய தினம் 20.09.2017



1977-ஐக்கியநாடுகள்சபையில்வியட்நாம்சோசலிசக்குடியரசு இணைந்தது.

1498 - ஜப்பானில் 'நாங்கை' நில நடுக்கத்தால் சுனாமி ஏற்பட்டது.

1697- பிரான்ஸ், பிரிட்டன், ஸ்பெய்ன் இடையெ நடைபெற்றுவந்தபோர்முடிவுக்குவந்தது.

1854- அல்மா போரில் பிரிட்டன் மற்றும் பிரெஞ் படைகளால் ரஷ்யப் படைகள் தோற்கடிக் கப்பட்டன.

1881- ஜேம்ஸ் ஏ கார்பீல்ட் சாவடைந்ததை அடுத்துஅமெரிக்கஅரசதலைவராகசெஸ் ரெர் ஏ ஆதர் பதவியேற்றார்.

1893 - திரவ எரிபொருளில் இயங்கும் மோட்டார் வாகனம் அமெரிக்காவில் உருவாக்கப் பட்டது.

1942 - உக்ரைனில் இரண்டு நாள்களில் ஜேர்ம னியப் படைகளால் மூவாயிரம் வரை யான யூதர்கள் கொல்லப்பட்டனர்.

1967 - குயீன் எலிசபெத் கப்பல் கட்டும்பணி ஸ்கொட்லாந்துஜோன்பிறவுன்நிறுவனத் தால் தொடங்கப்பட்டது.

1979 - மத்தியஆபிரிக்கப்பேரரசர்முதலாம்பொக் காசர் புரட்சி மூலம் பதவி கவிழ்க்கப் பட்டார்.

1990 - ஜோர்ஜியாவிடமிருந்துதெற்குஒசெற்றியா சுதந்திரம் பெற்றது.

2006 - பொத்துவிலிருந்துஅதிரடிப்படைதிரும்பப் பெறப்பட்டது. முகாம் பொறுப்பதிகாரியும் உடன் இடமாற்றம். முஸ்லிம்களின் கோரிக்கைக்கு அரசு இணங்கியது.

# இலக்கிய ஆய்வரங்கு நிகழ்வு







திருகோணமலை 'நீங்களும் எழுதலாம்' வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் இலக்கிய ஆய்வரங்கு கடந்த சனிக்கிழமை மாலை 4 மணிக்கு திருகோணமலை குளக்கோட்டன் மண்டபத்தில் ஆசிரியர் எஸ்.ஆர். தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்றது. நூற்றுக்கணக்கானவர்கள் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம40)

# திருமலையில் நல்லிணக்க நிகழ்வு







திருகோணமலைதிருமறைக்கலாமன்றத்தின் மாணவர்களுக்கும், காலிதிருமறைக்கலாமன்றத்தின் மாணவர்களுக்கும் இடையிலான நல்லிணக்க நிகழ்வொன்று திருகோணமலை கன்னியாவில் கடந்த சனி மற்றும் ஞாயிறு தினங்களில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஜேர்மன் நாட்டில் இருந்து, திருமறைக் கலாமன்றத்தின் பணிகளோடு இணைந்து செயலாற்ற வருகை தந்துள்ள தன்னார்வத் தொண்டர்கள் இருவரும் கலந்து சிறப்பித்தனர். (ம)



# புரட்டாதி மாத ராசிபலன்

## உங்களுக்கு எப்படி?

(17.09.2017 – 17.10.2017)

## கடகம்

**புது முயற்சிகள் தாமதம்**

நிறைகுறைகளை அலசிஆராய்ந்து மற்றவர்களைதுல்லியமாகக்கணிக் கும் நீங்கள் பிறரின் உணர்வுக்கு மதிப்பு கொடுப்பவர்கள். உங்கள் ராசிக்கு 2ஆம் வீட்டிலேயே கடந்த ஒரு மாதமாக அமர்ந்து கொண்டு ஓரளவு பணவரவையும், பேச்சால் சின்னசின்னபிரச்சினைகளையும் ஏற்படுத்தி வந்த சூரியன் ராசிக்கு 3ஆம் வீட்டில் வந்து அமர்ந்ததால் தடைப்பட்ட காரியங்கள் முடியும். கண்கோளாறு, பல்வலியிலிருந்து விடுபடுவீர்கள். சோர்வு நீங்கி சுறு சுறுப்பாவீர்கள். தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். அர சால்கௌரவம்உண்டு. சிலர்அயல் நாடு சென்று வருவீர்கள். வழக்கு கள்எதிர்பார்த்ததைவிடநல்லவிதத் தில் முடியும். மற்றவர்களை நம்பி ஏமாந்து போன விஷயங்கள் இந்த மாதத்தில் முடியும்.

ஆனால் ராசிக்குள் ராகுவும், 7இல் கேதுவும் தொடர்வதால் எதுவாக இருந்தாலும் நீங்களே நேரில் சென்று எல்லா வேலைகளை செய்து முடிப்பது நல்லது. இடைத் தரகர்களை நம்பி பெரிய பொறுப்பு களைஒப்படைக்கவேண்டாம். சில நேரங்களில் கோபப்படுவீர்கள். சிலரின் சுயரூபத்தை அறிந்து கொண்டுவருத்தப்படுவீர்கள். சிலர் ஏன் இப்படி எல்லாம் நன்றி கெட்டத் தனமாக நடந்து கொள்கிறார்கள் என்றுவேதனைப்படுவீர்கள். புதன் சாதகமான வீடுகளில் செல்வதால் பழைய இனிமையான அனுபவங் கள் நினைவுக்கு வரும். சுக்கிரன் சாதகமான வீடுகளில் செல்வதால் சமயோஜிதபுத்தியுடன்பேசுவீர்கள். குரு4இல்அமர்ந்திருப்பதால்தாயா ருக்கு முதுகுத் தண்டில் வலி, அசதி, சோர்வு வந்து நீங்கும். சிலர் வீடு மாறவேண்டியநிர்ப்பந்தம்உண்டா கும்.

வீட்டை விரிவுபடுத்துவது, புதுப்பிப் பதுபோன்றமுயற்சிகள்தாமதமாகி முடியும். செவ்வாய் சாதகமாக இல் லாததால் வீரியத்தை குறைத்துக் கொண்டு காரியத்தில் கூடுதல் கவ னம் செலுத்தப்பாருங்கள். சாதார ணமாகப்பேசப்போய்சண்டையில் முடிய வாய்ப்பி ருக்கிறது. அரசியல் வாதிகளே! கட்சி மேல்மட்டத்தில் மதிக்கப்படுவீர்கள்.

கன்னிப்பெண்களே!பெற்றோருடன் கலந்தா லோசித்து வருங்காலம் குறித்து சில முக்கிய முடிவுகள் எடுப் பீர்கள்.


மாணவமாணவிகளே! விளை யாடும் போது கவனம் தேவை. பய ணங்களின் போது பேருந்தில் படிக் கட்டில் நின்று பயணிக்க வேண் டாம். பொதுஅறிவுத்திறன்வளரும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு இலாபம் வரும். வேலையாள்களைஅவர்கள்போக் கிலேயே விட்டுப் பிடிப்பது நல்லது. இரசாயன வகைகள், கட்டிட உதிரி பாகங்கள், பருப்பு வகைகளால் ஆதாயமடைவீர்கள். உத்யோகத் தில் மேலதிகாரி கள் செய்த தவறுக ளுக்கெல்லாம் நாம் பலிகடா ஆகி விட்டோமேஎன்றெல்லாம்வருத்தப் படுவீர்கள். முக்கியஆவணங்களை கவனமாகக் கையாளுங்கள். சக ஊழியர்களால் அலைக்கழிக்கப் படுவீர்கள். கலைத்துறை யினரே! மூத்தகலைஞர்களின்நட்பால்ஆதா யமடைவீர்கள்.

விவசாயிகளே! தண்ணீர் பிரச்சி னையை சாமர்த்தியமாக சமாளிப் பீர்கள். உழுதவன் கணக்குப் பார்த் தால் உழக்குக் கூட மிஞ்சாது என்ப துபோலதான் இப்போதைய நிலை இருக்கும். நிதானத்தால் நெருக்கடி களை நீந்திக் கடக்கும் மாதமிது.

# ஆறறிவோடு ஐந்தறிவு கொள்ளும் இணைவு

## பாரம்பரியமான உறவு நிலை பேசல்

செ.கயல்



காலைச் சூரிய உதயத்தின் போதும் மாலையில் விரியும் அந்தி மாலைப் பொழுதின் போதும் பொன்னை வாரி இறைத்தது போல வானம் தங்க நிறம் தரித்துக் காணப்படும். நகர வாழ்க்கை ஓட்டத்தில் விழுந்துவிட்ட பலரும் சூரிய உதயத்தை ஒரு போதும் பார்ப்பதேயில்லை. அதிகபட்சம் அவர்கள் மாலை நேரத்தை பார்ப்பார்கள் என்று நம்புகிறேன். இப்படி பொன் வாரி இறைக்கப்பட்ட காலை, மாலை நேரங்கள் எமக்குள் சக்தியை ஏற்றி புத்துணர்ச்சியை ஏற்படுத்தும் தன்மை கொண்டவை. இப்படிப் பட்ட தருணங்களை மறக்க முடியாத அனுபவமாக மாற்றிவிடும் பண்பு பறவைகளிடம் உண்டு.

உண்மையில் பறவைகளிடம் இருந்து பல விடயங்களை மனித இனம் கற்றுக் கொண்டது. பறவையைக் கண்டான் விமானம் படைத்தான் என்ற திரைப்பாடல் வரிகள் இதனைப் பதிவு செய்துள்ளது. உண்மையில் இயற்கை சீராக இயங்குவதற்கான செயற்பாடுகளில் பறவைகள் பெரும் பங்காற்றுகின்றன. அந்தச் செயற்பாடுகள் குறித்து இதுவரை அதிக விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவில்லை.



மக்களின் வாழ்க்கையுடன் பறவைகள் இரண்டறக் கலந்துள்ளன. இயற்கை மீதும் பறவைகள் மீதும் பண்டைய காலம் முதல் தமிழர்கள் காட்டி வந்த ஆர்வம் பல்வேறு வகைகளில் பதிவாகியுள்ளன. தற்போது உள்ளதைப் போல சுற்றுச்சூழல் விழிப்புணர்வோ, அறிவியல் வளர்ச்சியோ இல்லாத காலமது.

தமிழர்களின் வாழ்க்கையில் இருந்து இயற்கைக் கூறுகளை பிரிக்க முடியாத காலங்களாக அவை இருந்து வந்தன. அதற்கான மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக சத்திமுற்றப் புலவரின் 'நாராய், நாராய்' என்று தொடங்கும் சங்கப்பாடலை குறிப்பிட்டுச் சொல்லிவிட முடியும்.

"நாராய், நாராய், செங்கால் நாராய்….
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய் செங்கால் நாராய்…!
நீயும் நின்பெடையும் தென்திசைக் குமரி ஆடி
வடதிசைக்கு ஏகுவீர் ஆயின் எம்மூர்
சத்திமுத்தம் வாவியுள் தங்கி…..!

என்று அமைகிறது அந்தப் பாடல்.

இந்தச் செய்யுள் வரிகளில் சிவப்பு கால்கள், பவளச்சிவப்பு நிறத்துடன் பனங்கிழங்கைப் பிளந்தது போல நீண்டு காணப்படும் அலகைப் பற்றி புலவர் வர்ணிக்கிறார். இந்தக் குறிப்புகளைக் கொண்டு பார்க்கும்போது புலவர் குறிப்பிடும் பறவை செங்கால் நாரையாகத் (W}ite Stork) தான் இருக்க வேண்டும். செங்கால் நாரையை தெளிவாக வர்ணிப்பது மட்டுமின்றி அப்பறவையின் இடப்பெயர்வு பண்புகளையும் புலவர் காட்சிப் படுத்தியுள்ளார். ஐரோப்பிய நாடுகளில் குளிரால் பனி போர்த்தப்படும்போது உணவு தேடிப் பல பறவைகள் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் வருகின்றன. ஆண்டுதோறும் குறிப்பிட்ட காலத்தில் பறவைகள் மேற்கொள்ளும் இந்த இடப்பெயர்வு 'வலசை போதல்' என்ற சொல்லால் குறிப்பிடப்படுகிறது. இந்த வலசை போதலை மேற்கண்ட செய்யுள் 18 நூற்றாண்டுகளுக்கு முன்பே பதிவு செய்துள்ளது. இயற்கை வரலாற்று குறிப்புகளை புலவர்கள் உவமையாகப் பயன்படுத்தியுள்ளனர். அந்தச் செய்யுளின் முதல் ஆறு வரிகளில் இயற்கையின் வரலாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆக, முன்பே இது பற்றியதாக அந்தச் சமூகத்தில் விழிப்புணர்வு இருந்திருக்க வேண்டும். பறவைகளின் பெயர் முதல் வலசை போகும் பண்பு வரை பல்வேறு அம்சங்களை பண்டைத் தமிழர்கள் கூர்ந்து நோக்கி, பதிவு செய்துள்ளனர் என்பது புலனாகிறது.

மக்கள், பறவைகள் இடையிலான உறவு என்பது பண்டையகாலம் தொட்டே தமிழர் பாரம்பரியங்களோடு உறுதியான பிணைப்பாகத் தொடர்ந்து வந்துள்ளதுள்ளமையும் தெளிவாகிறது.

# உபரிப் பற்கள்

## பறவைகள் கொண்ட இயைபாக்கம்


பறவைகளுக்குப் பற்கள் என்பது கிடையாது. ஆனாலும் அவை எப்படி தமக்கான உணவை உண்கின்றன என்ற கேள்வி எல்லோரையும் யோசிக்க வைக்கிறது. நீங்கள் யாராவது யோசித்ததுண்டா..? அநேகமாக அனைவருக்கும் குழந்தைகள் உட்பட பறவைகளுக்குப் பற்கள் இல்லை என்பது தெரிந்திருக்கும். கோழி, புறா, குருவி, வாத்து, வான்கோழி போன்ற பறவைகள் விதைகள், தானியங்கள் போன்றதான கடின ஆகாரங்களை உணவாக உட்கொள்வதைப் பார்த்திருக்கிறோம். அவைகள் பற்கள் உதவிகொண்டு கூழாக்கிச் சாப்பிடாது கடினமான உணவுவகைகளை எப்படி சமிபாடடையச் செய்கின்றன.


இதற்கான பதிலாக கிடைப்பது உடற்கூறின்படி பறவைகளின் வயிற்றின் கீழ்ப்பகுதியில் அமைந்துள்ள விசேட அமைப்பான 'ஜிசாட் '(Gizzard) என்னும் பகுதியாகும். நாம் உணவை வாயில் இட்டு பற்களின் உதவி கொண்டு கடித்து அதனைக் அரைத்து கூழாக்கி விழுங்குவதற்கு இணையான தொழிற்பாட்டையே இவை செய்வதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். உணவைக் கூழாக்கி செரிமானத்துக்குரியதான நிலைக்கு தயார் செய்வது ஜிசாட்டின் வேலையாகக் காணப்படுகிறது.


கடைவாய்ப் பற்களின் பணியைச் செய்ய பறவைகளில் உள்ள விசேட அமைப்பான ஜிசாட் பறவைகள் விழுங்கும் சிறுசிறு கூழாங்கற்களையும், மணற்துகள்களையும் பயன்படுத்தி கடினமான உணவுகளை உடைத்து செரிமானத்திற்கு தயார்ப்படுத்துகிறது. இரண்டு அல்லது மூன்று நாள்களுக்கு ஒருமுறை தேய்மானமான கற்களைக் கழிவாக கழித்துவிடுவதாகவும் புதிதாக கற்களையும், மணலையும் உணவுடன் எடுத்துக் கொள்வதாகவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

முதலை வகையான ஊர்வன, டைனோசரஸ், மீன்கள், மண்புழுக்களுக்கு இருப்பது போல ஜிசாட் அனைத்து வகையான பறவைகளுக்கும் இருப்பதாகத் தெரிகிறது. இது தடிமமான தசைகளால் ஆனது. இதன் உட்புறத்தைப் பாதுகாக்கவும் சமிபாட்டிற்கும் நொதியப்பூச்சுகள் அதில் காணப்படுவதாக சொல்லப்படுகிறது. ஒரு சில பூச்சியினங்களில் ஜிசாட் கடினமான செதில்களையும் சிறு சிறு பற்கள் போன்ற அமைப்பையும் கொண்டுள்ளது.

ஆக, பறவைகளுக்கே உரித்தான மேற்படி விசேட அம்சமானது பல் மருத்துவச் செலவில்லாத உபரிப் பற்கள் போன்ற விந்தைகள் நிறைந்த உணவுச் சமிபாட்டு அசைவியக்கமாக அவற்றினுள் இயைபாக்கமடைந்துள்ளன.



# அசிங்கமான உயிரினங்கள்

## இயற்கை கொண்ட தனித்துவ அசைவு மொழி

தமிழ்கோ

2013 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் இடம்பெற்றிருந்த 'பிறிட்டிஸ் சயன்ஸ் பெஸ்ரிவல்' (British Science Festival) நிகழ்வின் போது உலகிலேயே அசிங்கமான உயிரினமாக 'புளொப் பிஸ்' (Blobfish) அறிவிக்கப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது.

மக்களின் வாக்களிப்பு அடிப்படையிலே நடத்தப்பட்டதான இந்தப்போட்டியில் பல அலங்கோலமான உயிரினங்கள் பங்கேற்றன. எனினும் 'புளொப் பிஸ்' இனை அதிகமானோர் அசிங்கமான உயிரினமாக தேர்ந்தெடுத்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

10 ஆயிரம் வாக்குகளைப் பெற்ற இந்த உயிரினம் ஆஸ்திரேலியாவின் தாஸ்மானியப் பகுதியில் 600 தொடக்கம் ஆயிரத்து 200 மீற்றர் ஆழத்தில் வாழ்வதாகச் சொல்லப்படுகிறது.

மேலும் இந்த நிகழ்வில் 'புளொப் பிஸ்' உட்பட மொத்தமாக ஐந்து உயிரினங்களை உலகிலேயே அசிங்கமான உயிரினங்களாக அவர்கள் பட்டியலிட்டுள்ளனர்.

அவை வருமாறு,


1. **புளொப் பிஸ்** Blobfish



2. **தி ககபோ** - The Kakapo



3. **தி அக்சலோட்டி** The Axoloti



4. **தி ரிரிககஸ்கோர்ரம்** The Titicaca scrotum water frog (நீர்த் தவளை)




5. **தி புறோபோசிஸ் மங்கி** The Proboscis Monkey



# மரபியல்

## மூலக்கூற்றுத் தனிமங்கள் காணும் அர்த்தம்



கேரி முல்லிஸ் என்பவர் ஜேம்ஸ் வாட்டைப் போலவே புதுமையான பொருள்களை உருவாக்குவதில் ஆர்வம் கொண்டிருந்தவர். சிறு வயதிலேயே வேதியியல் பரிசோதனைகளில் ஈடுபட்டு பொழுதைக் கழித்தவர். இதன்பின்னர் மரபியலில் ஆர்வம் கொண்டு அது குறித்த ஆய்வுகளில் ஈடுபட்டார். டிஆக்ஸிரிபோ நியூக்ளிக் அமிலம் என்பதன் சுருக்கமான பொருள் தரலே டி.என்.ஏ.இவை இரட்டைச் சுருள் வடிவம் கொண்ட மரபுப் பொருள் என்பதும் எமக்குத் தெரியும். அதில் உள்ள அமில மூலக்கூறுகள் குறிப்பிட்ட இணை மூலக்கூறுகளுடன் மட்டுமே இணைந்திருக்கும். இவ்வாறு ஒரு இழையானது மற்றொரு இழையுடன் இணை மூலக்கூறுகளால் இணைக்கப்பட் டிருக்கும்.

சிறிய டி.என்.ஏ. துண்டுகள் சிலவற்றை அவர் ஆய்வு செய்தபோது அவை நீளமான இரட்டை இழைகளுடன் எதிரெதிர் முனைகளில் இணை சேர்வதைப் பார்த்தார். இது டி.என்.ஏ. மூலக்கூறுகளுக்கு மட்டுமே உள்ள தனித்த பண்பாகும். அதன்பிற்பாடு மேலும் சில டி.என்.ஏ. துண்டுகளையும், புரத மூலக்கூறையும் அதனுடன் சேர்த்த முல்லிஸ் இந்தச் சிறிய டி.என்.ஏ. மூலக்கூறுகளைப் பெருகச் செய்து நகல் டி.என்.ஏயை உருவாக்க முடியும் என்பதனைக் கண்டறிந்தார். இதன் விளைவாகவே பாலிமரேஸ் தொடர் வினைகள், டி.என்.ஏ யை சிறந்த முறையில் நகலெடுக்க உதவும் டி.என்.ஏ. பிரதி எடுக்கும் இயந்திரம் ஆகியவற்றை முல்லிஸ் உருவாக்கினார். 20 ஆம் நூற்றாண்டின் மிகச் சிறந்த புத்தாக்கமாக இக்கண்டு பிடிப்புகள் கருதப்படுகின்றன. குளோனிங் மற்றும் மரபுப் பொறியியல் ஆகிய துறைகளிலும், புதிய ஜீன்களைக் கண்டறிவதிலும் இவை பெரும் பங்கை ஆற்றுகின்றன. மேலும் தடயவியல் முதல் தொல்லியல் வரை அனைத்துத் துறைகளி லும் இவற்றின் பயன்பாடு என்பது அதிக பயனுறுதியைத் தருகின்றன. தந்துகொண்டிருக்கின்றன.

ஆக,மனித வாழ்க்கையை மாற்றியமைத்த கண்டுபிடிப்புகளும், புத்தாக்கங்களும் அதற்கேற்றதான சூழல் இயல்பூக்கம் பெற்றதான பகுதிகளிலேயே நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. புதுமையை வரவேற்றல், திறமைக்கு மதிப்பளித்தல், ஆர்வத்தை ஊக்கப்படுத்தல் என அறிஞர்கள் தங்கள் ஆய்வுகளைச் சுதந்திரமாகவும், சிந்தனை பூர்வமாகவும் செய்ய அனுமதிக்கின்ற சமூக நிலைத்திருப்புகள் தான் இதுவரையான இத்தகைய கண்டுபிடிப்புகளைச் சாத்தியமாக்கியுள்ளன. உண்மையில் இனி வரும் காலங்களும் அங்கு நிகழ்வதான கண்டுபிடிப்புகளும் இதுபோன்றதான அறிவார்ந்த சமுதாய வெளிகளில் தான் சாத்தியமாகும்.

# 'நியாண்டர்தால்' (Neanderthal) மனிதர்கள்



ஏறத்தாழ 30 ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் வரை மனிதர்களுடனேயே வாழந்த இன்னொரு உயிரின வெளியாக 'நியான்டர்தால்' (Neanderthal) மனிதர்கள் கூறப்படுகின்றனர். உருவஅளவில்சற்றுக்குள்ளமானவர்களாகவும். பெருத்த தலையுடன் உடல் வலுக் குறைந்தவர்களாகவும் இவர்கள் இருந்துள்ளனர்.

வேட்டையாடுவதில் ஏற்பட்ட போட்டித் தன்மைகளாலும், மனி தர்களின் ஆதிக்கப் போக்கினாலும் முரண்நிலைக்குட்பட்டு முற்றாக அழிந்து போகும் நிலமைகள் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

மனிதர்களால் இவர்கள் வேட்டையாடப்படும் போது தப்பிப் பிழைக்கும் நோக்குடன் மனிதன் இலகுவில் அண்மிக்க முடியாத இடங்களான மலைகள், குளிர்சார்ந்தபிரதேசங்களில் இவர்கள் தஞ்சம் புகுந்திருக்க வாய்ப்புள்ளதாகவும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்தநிலையிலே அந்தப்பிரதேசம் சார்ந்து அங்கு நிலவும் குளிருக்கு தகுந்தவாறு ஏற்கனவே வாழத்தகுதி உடைய கொரில்லா போன்ற விலங்குகளை இவர்கள் நாடி இனக் கலப்படைந்து இந்தப் புதுவிதமான 'பனி மனிதர்' என அழைக்கப்படும் உயிரினங்கள் தோன்றி இருக்கலமெனவும், கடும் குளிருக்கு அப்பிரதேசத்தில் தாக்குப்பிடிக்க முடியாத தனி நியாண்டர்தால் உயிரினம் முற்றாக

(27ஆம் பக்கம் பார்க்க)

கட்டாக்காலி மாடு ஏலவிற்பனை
இடம் : ஸல்லியடி முருகமூர்த்தி ஆலய வீதி
காலம் : 28.09.2017 (வியாழன்) மு.ப.10.30 மணி
மண்நிற பசு மாடு ஒன்று (1)
பெரும்பாக உத்தியோகத்தர் தலைமையில் நடைபெறும் ஏலத்தில் வெற்றி பெறும் கோரிக்கையாளர் ஏலப்பணத்தை உடன் செலுத்தி ஏலம் விடப்பட்ட இடத்திலிருந்து மாட்டினை அப்புறப்படுத்த வேண்டும்.
கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்
கமநல சேவைகள் நிலையம், கரவெட்டி.

New Master
A/L Day Classes
ஆரம்பம் - 20.09.2017
அலகு ரீதியான மீட்டலுடன் கடந்தகால வினாவிடை வகுப்பு.
பௌதிகவியல் (திங்கள் - முதல் வெள்ளி)
திரு.பா.சதீஸ்குமார்,
இரசாயனவியல் (திங்கள் - முதல் வெள்ளி)
திரு.சு.சுரேஸ்குமார்
Bsc (Hons) MBA PGDE (Merit)
அம்மன் வீதி, கந்தர்மடம்.
தொடர்பு- 077 555 9028, 077 844 8009

விஷேட பல் வைத்திய சேவை
- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)
மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்
- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)
சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:077 934 7687(லதா)

றோயல் மெடிக்கல் சென்ரர்
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (நர்சன்)


We Offer From Best Company
22 வருடமாக இயங்கிவரும் எமது நிறுவனத்தில் யாழ் மற்றும் வவுனியா. கிளிநொச்சி, மட்டக்களப்பு ஆகிய கிளைகளில் முகாமைத்துவ வேலைத்திட்ட பயிற்சிகள் இடம்பெற உள்ளது. இங்கு பயிற்சிக்குப் பின் நிரந்தர வேலையாக்கப்படும்.
- வயதெல்லை (18 - 30)
- முகாமைத்துவ பயிற்சிகளாக
  - நிர்வாக அதிகாரி
  - செயற்றிட்ட அதிகாரி
  - உதவி முகாமையாளர்
  - முகாமையாளர்
அனுபவம் அவசியம் இல்லை.
சிறந்த பயிற்சியாளர்கள் மூலம் பயிற்றுவிக்கப்படுவார்கள் பயிற்சியின் போது 18,500 - 22,500
பின் 50,000 + EPF, ETF அடங்கலாக.
077 802 1371/ 076 639 9954

பழமை வாய்ந்த ஏழு தலைமுறைகளாக செய்து வரும்
ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்
01. ஆண்/பெண் வசியம்
02. பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
03. வியாபார முன்னேற்றம்.
04. வீட்டில் ஒற்றுமை உண்டாக
05. போலியானவர்களிடம் ஏமாந்து விடாதீர்கள்
Note: (உங்களால் நேரில் வரமுடியாவிட்டால் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)
ரகசியம் பாதுகாக்கப்படும்

ஒருமுறை எம்மை வந்து சந்தித்துப் பாருங்கள் !!
ரெங்கசாமி காளியம்மா
மாத்தளை வீதி, கண்டி.
077 327 2302, 076 466 4153, 075 509 5887.

CANADA , USA
study & work visa
Minimum Qualification O/L
- VISA Consulting and Online from filling.
- குறைந்த செலவில், விரைவில் பயணம்.
- Bank Balance 100%
- குறைந்த தகைமை O/L
Swiss, France
செல்ல வழிகாட்டல்
Royal Visa Consultants & Education Service
No.128, Jampettah Street,
Colombo -13
Email: rvces_consultants@yahoo.com
Haarini : 011 232 3975
Office : 077 721 6291

# வண்ணத்துப் பூச்சி கொள்ளும் வண்ண மாற்றம்



குரோமோசோம்களின் நிலைப்பாடே வண்ணத்துப் பூச்சிகளின் நிறமாற்றத்துக்கு முக்கிய காரணமாகச் சொல்லப்படுகிறது. பொதுவாக வண்ணத்துப்பூச்சிகளின் வண்ணங்களும், அவைகளின் நிற மாறுபாடுகளும் குரோமோசோம்களில் அடங்கியதான குறிப்பிட்ட மரபணுத் தொகுப்பால் உருவாக்கப்படுகிறது. இந்த வகை மரபணுக்களை விஞ்ஞானிகள் 'சூப்பர் ஜீன்' என்றழைக்கின்றனர். இந்தத் தொகுப்பு ஜீன்கள் வண்ணத்துப்பூச்சிகளின் தற்காப்புக்காவும், உணவுகளைத் தக்கவைக்கவும், பிற இனத்தோடு இணை சேரவும் உதவுகின்றன. இந்த வகை மாற்றங்கள் நத்தை இனங்களிலும் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. சில நத்தைகள் ரோஜாப் பூக்களின் ரோஸ் நிறத்தைக் கண்டவுடன் அந்த நிறத்தை ஒத்ததாக தங்கள் நிறத்தையும் மாற்றிக் கொள்கின்றன. இவ்வாறான நிற மாற்றம் என்பது வண்ணத்துப்பூச்சிகளை பிற பறவைகளின் அடையாளம் காணலில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் சூழலை உருவாக்குகின்றன.

விஷமுள்ள வண்ணத்துப்பூச்சிகள் பெரும்பாலும் அடர்ந்த வனப்பகுதிகளில் வசிப்பவை. இவை அதிகம் வண்ணங்களை மாற்றிக் கொள்வதில்லை. அதற்கு மாறாக துர்நாற்றத்தை தங்கள் மலக்குழாய் வழியே பீய்ச்சியடித்து எதிரிகளை நிலைகுலையச் செய்கின்றன. வண்ணத்துப்பூச்சிகளின் சிவப்பு நிற உருவாக்கத்தை 'ஆப்டிக்ஸ்' என்ற மரபணு வழங்குகிறது. இது ஆபத்தை சுட்டிக் காட்டுவதுடன் பிற உயிரிகளுக்கு எச்சரிக்கைச் சமிக்கையாக வெளிப்படுத்துகிறது. தவிர தான் காதல் வயப்பட்டிருப்பதை, அதிக காமமுற்று உள்ளதை, நோய்வாய்ப்பட்டிருப்பதை வெளிப்படுத்தும் குறிப்பேற்று அறிகுறியாகவும் இது பயன்படுத்தப்படுகிறது. இந்தச் சிவப்பு நிறத்தை பொதுவாக அவற்றின் கண்களிலேயே அதிகம் உருவாக்கும். 'ஓம்மோ குரோம்' நிறமிகள் இதனுடன் சேர்ந்து இறகுகளின் நிறமியை உருவாக்குகின்றன. இந்த வகை குரோமோசோம்களின் கட்டமைப்புகள் பிராந்தியம் சார்ந்தும், சூழ்நிலைகளைப் பொறுத்தும் வெகு எளிதாகச் செயற்படுகின்றன.

## 'நியாண்டர்தால்' (Neanderthal) மனிதர்கள்

அழிவடைந்திருக்கலாமெனவும் சொல்லப்படுகிறது.
சாதாரணமாக மனித உடலமைப்பின் படியாக 12 விலா எலும்புச் சோடிகளை மனிதர்கள் கொண்டுள்ளனர்.எனினும் 5 வீதமானவர்களுக்கு 13 சோடிகள் இருக்கின்றன. இது மனிதனுக்கும் நியான்டர்தால் மனிதர்களுக்கும் இடையே இடம்பெற்ற இனக்கலப்பின் விளைவுகள் தந்த வெளிப்பாடாகவே கருதப்படுகிறது. குறிப்பாக நியான்டர்தால் மனிதனுக்கு 13 சோடி விலா எலும்புகள் இருந்தமை எலும்புப் படிவுகளின் ஆய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளது. மனிதனுடனேயே இனக்கலப்புச் சாத்தியமாகும் போது கொரில்லாவுடனான இனக்கலப்புச் சாத்தியமாக அமைந்திருக்கலாமெனவும் இவர்கள் வெளி உலகிற்கு வருவதற்கு பயந்திருப்பதற்கான காரணம் மனிதர்கள் மீது ஏற்பாட்ட பய உணர்வின் வெளிப்படு தன்மைகள் அவர்களின் மரபணுக்களில் பதியப்பட்டமையே எனவும் விஞ்ஞானிகள் கருத்து மொழிந்துள்ளனர்.

---


## அகத்தினுள்ளே ஆண்டுகள் பதினேழு



அமரர்
**வேலன் பசுபதி**
(காங்கேசன்துறை வைத்திய சாலை ஊழியர்)
**திதி: அபரபக்க சப்தமி**
பூவுலகில் 25.10.1924 — தேவஉலகில் 20.09.2000

பப்பாவே!
எம் பூவிழியில்
உம்விம்பம் நிழலாய்
பதினேழு ஆண்டுகளிலும்....

முதலாவது வீதி,
மானிப்பாய் வட கிழக்கு,
மானிப்பாய்.

ஆத்மார்த்தமான அமைதிக்காக
சந்நிதி முருகனை தொழும்
**மனைவி - குடும்பத்தினர்.**

---

## மரண அறிவித்தல்கள்

### மாணிக்கம் சபாரட்ணம்



சாவகச்சேரி, கோயிற்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும், மீசாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் சபாரட்ணம் 17.09.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சீதாலட்சுமியின்அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான யோகலிங்கம், கணேஸ், குலம் மற்றும் சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராஜேஸ்வரி (ஜேர்மனி), நகுலேஸ்வரி (ஜேர்மனி), இரட்ணசிங்கம் (சுவிஸ்), விமலேஸ்வரி (ஜேர்மனி), இரட்ணேஸ்வரி (ஜேர்மனி), கமலேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான குலசிங்கம், சீலன் மற்றும் அரசபிள்ளை, செல்வி, சம்மந்தா, சுதாகர் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜொன்சி, எறிக், திலீபன், இவோன், வனிதா, பமிலா, மிதுரா, சுஜீவன், அனுஜன், எரினா மிகைல், சீயா, தபிசியா, றிஷி, சபீரா ஆகியோரின் அன்புப் பேரனும், அஜய், அமீரா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2017) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்.**
**077 135 0441**

---

## கண்ணீர் அஞ்சலி



யா/யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையின்
முன்னைநாள் பிரதி அதிபர்
**திருமதி மேரி பிரக்சி ரட்ணவதி கனகரட்ணம்**
அவர்களின் அன்புத் தாயாரான
**திருமதி ஜெயமணி சிமியாம்பிள்ளை**

பிறப்பு 1926.04.12 — இறப்பு 2017.09.18

அவர்கள் கடந்த 18.09.2017 திங்கட்கிழமை இறைபதம் அடைந்துள்ளார். இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை சமூகம்.**

---

## மரண அறிவித்தல்

### வடிவேலு சிவகணேசன்
(சித்த ஆயுள் வேத வைத்தியர்)



வட்டு வடக்கு சித்தன்கேணியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வடிவேலு சிவகணேசன் (சித்த ஆயுள் வேத வைத்தியர்) 18.09.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியர் முருகுப்பிள்ளை வடிவேலு - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முத்துச்சாமி - குலக்கொழுந்து - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் தவக்கொழுந்தீஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வைத்தியர் சண்முகநாதன், முருகநாதன், நாமகள்தேவி, அன்னநாயகி மற்றும் வைத்திய கலாநிதி கயிலாயநாதன், சிதம்பரநாதன், அம்பலநாதன், செல்வநாயகி, சித்திதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற பரமானந்தன் மற்றும் சாம்பசிவம், தவசீலன், சித்திராதேவி (நோர்வே), பேரின்பசிவம் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - தீவக வலயம்), சுதந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் யசிந்தா, ஸ்ரீமதி, தனுசா(அபிவிருத்தி உத்தியோகத்தர் - காரைநகர் கலாசார மத்திய நிலையம்), மகாத்ம ஜோதி, சுவேந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் டினுசன், சயந்தினி, கஜந்தன், பத்மகஜன், புவிதரன், நிவேந்தன், மகிசினி, நவீனா, நிமேஸ், பினிதா, தேனுஜா, சங்கீதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2017) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்துத்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வட்டு வடக்கு,**
**சித்தன்கேணி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

---

### கந்தையா ஜெயவீரசிங்கம்
**(சிவம் மாஸ்ரர்)**
(ஓய்வு நிலை ஆசிரியர் - சாவகச்சேரி இந்துக்கல்லூரி)



வரணி கரம்பைக் குறிச்சியைப் பிறப்பிடமாகவும் 56/3, தட்டாதெரு சங்கத்தானை சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஜெயவீரசிங்கம் நேற்று (19.09.2017) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் உமாதேவி (ஆசிரியர் சாவகச்சேரி - டிபேறிக் கல்லூரி) யின் பாசமிகு கணவரும் ஆதுஜன் (பிரான்ஸ்), ஜீவகன்(வைத்தியர் - ஊர்காவற்றுறை வைத்தியசாலை), வைகுந்தன் (பிரான்ஸ்), ஆரூரன் (கிழக்குப்பல்கலைக்கழக மாணவன்), லாவண்யா(ஆய்வு கூட உதவியாளர் - பல்கலைக்கழகம் - பொறியியற்பீடம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்லத்துரை (சிவசக்தி அரிசி ஆலை), யோகராசா (இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர் - இ.போ.ச வடக்கு) காலஞ்சென்ற யோகேஸ்வரி அம்மா மற்றும் சோதிமலர் (கனடா), ஜெயராணி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெகதீஸ்வரனின் அன்பு மைத்துனரும் சர்மிலாவின் உடன்பிறவா சகோதரனும் யசோதாயினி, நிறோகினி, அபிராம், சதுஸ்னா, சாயிராம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2017) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**56/3, தட்டாதெரு**
**சங்கத்தானை, சாவகச்சேரி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**


**077 744 6994 - மனைவி/ 077 357 0730 - மகன்**

## பாரதி இன்று பாடினால்....



ஓடி விளையாடாதே பாப்பா...
ஊர்ச் சாலையெங்கும் படுகுழிகள் பாப்பா...
கூடி விளையாடாதே பாப்பா...
இங்கே ஒக்சிசன் பற்றாக்குறை பாப்பா...
நீட்டுக்கு படித்து விடு பாப்பா...
இல்லையேல்
நீட்டுக் கயிறு உனக்கிருக்கு பாப்பா...
கேள்வி ஞானம் மறந்துவிடு பாப்பா...
உனை கேலி செய்தே கொலை
செய்திடுவார் பாப்பா...
போர்க்குணம் மறந்துவிடு பாப்பா...
அன்றி வாழ்க்கையே
போராட்டமாகிவிடும் பாப்பா...
தவ வாழ்க்கை என்று சொல் பாப்பா...
அதில் தவறெல்லாம் மறைந்து விடும் பாப்பா...
பலகோடி பதுக்கி வை பாப்பா...
அது பரோலுக்கு வழி செய்யும் பாப்பா...
ஆன்மாவிடம் பேசக் கற்றுக் கொள் பாப்பா...
அது அரசியலில் கை கொடுக்கும் பாப்பா...
சென்றிடுவீர் எட்டுத்திக்கும் பாப்பா...
நீ செல்லாத நாடே இருக்கக்கூடாது பாப்பா...
விவசாயம் தேவையில்லை பாப்பா...
விரைவில்
விளைந்த நெல்லே விமானத்தில் வந்திறங்கும் பாப்பா...
20 வரைவில்வரும் என்பார்கள் பாப்பா...
அதில் இரண்டு வருடம் பறந்துவிடும் பாப்பா

## பொங்கலுக்கு வெளிவரும் 'தானா சேர்ந்த கூட்டம்'




சினிமா

விக்னேஷ் சிவன் இயக்கத்தில் சூர்யா நடித்துவரும் படம் 'தானா சேர்ந்த கூட்டம்'. இந்தப் படம் பொங்கலுக்கு வெளியாகும் எனப் படக்குழு அறிவித்திருக்கிறது.
'தானா சேர்ந்த கூட்டம்' படம் எப்போது திரைக்கு வரும் என்ற தகவலை வெளியிடாமல், படப்பிடிப்பில் முழுமையாகக் கவனம் செலுத்தி வந்தார்கள். தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியிருப்பதால், பொங்கலன்று வெளியீடு என்று அதிகாரபூர்வமாக அறிவித்திருக்கிறது படக்குழு.
மேலும், ஒக்டோபரில் 2ஆவது பாடல், நவம்பரில் படத்தின் முன்னோட்டப்பதிவு, டிசம்பரில் முழுப் பாடல்கள் மற்றும் முன்னோட்டக் காணொலி ஆகியவை வெளியிடப்படும் என்றும் தெரிவித்திருக்கிறது.
விக்னேஷ் சிவன் இயக்கத்தில் உருவாகியிருக்கும் இப்படத்தில் சூர்யா, கீர்த்தி சுரேஷ், செந்தில், கார்த்திக், ரம்யா கிருஷ்ணன், சுரேஷ் மேனன், ஆர்.ஜே.பாலாஜி உள்ளிட்ட பலர் நடித்து வருகிறார்கள். தினேஷ் கிருஷ்ணன் ஒளிப்பதிவு செய்து வரும் இந்தப் படத்துக்கு அனிருத் இசையமைத்து வருகிறார்.

**பெண்: என்னை ஏன் உனக்குப் பிடித்திருக்கிறது**

**ஆண்: 2 நிமிடம் பேசிவிட்டு 24 மணி நேரமும் நினைக்க வைக்கிறாயே...**




**காதலிக்கும்போதும் கல்யாணத்துக்கு பிறகும் ஒரே டயலொக்தான். ஆனா அர்த்தம் வேற வேற....**

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 3 | 6 | | | | | 2 | |
| | 2 | | | 3 | | 6 | | |
| | 4 | 1 | | | | 3 | 8 | |
| | | 9 | 7 | | 3 | | | 2 |
| | 7 | | 1 | 2 | 8 | | | |
| 2 | | | 4 | | | 7 | | |
| | 8 | 7 | | | | 9 | 3 | |
| | | 2 | | 7 | | | | |
| | | | | | | 2 | 7 | 6 |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | 6 | 2 | 1 | 7 | 4 | 3 | 8 |
| 8 | 7 | 4 | 6 | 3 | 5 | 9 | 2 | 1 |
| 3 | 2 | 1 | 4 | 8 | 9 | 7 | 5 | 6 |
| 6 | 4 | 5 | 9 | 7 | 3 | 8 | 1 | 2 |
| 1 | 3 | 7 | 8 | 4 | 2 | 6 | 9 | 5 |
| 2 | 8 | 9 | 1 | 5 | 6 | 3 | 4 | 7 |
| 9 | 6 | 3 | 5 | 2 | 8 | 1 | 7 | 4 |
| 7 | 1 | 2 | 3 | 6 | 4 | 5 | 8 | 9 |
| 4 | 5 | 8 | 7 | 9 | 1 | 2 | 6 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் '1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டி ருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

## புரட்டாசி மாத பிரார்த்தனை



**எந்த நண்பனும் ஆடு, மாடு, கோழி எண்டு விருந்து வைச்சு வெறுப்பேத்தக் கூடாது.**

**கல்யாண அழைப்புக்கள் வரக்கூடாது.**

**பக்கத்து வீட்டில பிரியாணி செய்யிற வாசனை வரக்கூடாது...**

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உற்சாக மனப்பான்மையுடன் பணியாற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் குறுக்கிட்ட இடையூறு விலகும். இலாபம் படிப்படியாக உயரும். கடனில் பெரும்பகுதி அடைபடும்.

**இடபம்:** சிலரது பேச்சால் சங்கடத்திற்கு ஆளாகலாம். தொழில் வியாபாரத்தில் இலாபம் சராசரி அளவில்இருக்கும். பெண்களுக்குஉடல்நலனில் அக்கறை தேவை..

**மிதுனம்:** திடீர் அவசரப்பணியால் சிரமப்படலாம். தொழில் வியாபாரத்தில் மறைமுகப் போட்டி குறுக்கிடும். பெண்கள் பிள்ளைகளின் வழியில் செலவு செய்வர்.

**கடகம்:** நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழில் வியாபாரத்தில் இலாபம் பன்மடங்கு அதிகரிக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரிடம் பரிசு, பாராட்டுப் பெறுவர்.

**சிங்கம்:** மனதில் இருந்த குழப்பம் நீங்கும். வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

**கன்னி:** சிலர் சுயநல எண்ணத்துடன் நெருங்கிப் பழகுவர். தொழில் வியாபாரத்தில் உழைப்புக் கேற்ப இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து ஓரளவு விடுபடுவர்.

**துலாம்:** அறிமுகம் இல்லாதவரிடம் உதவி கேட்க வேண்டாம். தொழில் வியாபாரத்தில் குறுக்கிட்ட இடையூறு விலகும். வருமானம் சுமாராக இருக்கும்.

**விருச்சிகம்:** எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். தொழில் வளர்ச்சியால் ஆதாயம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் பணியிடத்தில் செல்வாக்குடன் திகழ்வர்.

**தனுசு:** நண்பரின் செயலை விமர்சிக்க வேண்டாம். தொழில் வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.

**மகரம்:** நேர்மை எண்ணத்துடன் செயல்படுவீர்கள். முயற்சி முழு அளவில் வெற்றி பெறும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி உண்டாகும்.

**கும்பம்:** யாரிடமும் குடும்பவிஷயத்தைப் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் சக ஊழியர்களுடன் கருத்து வேறுபாடு கொள்வர்.

**மீனம்:** வாழ்க்கைத்தரம் மேம்படும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர். உடல் நிலை பலம் பெறும்.

**கணவன்:** என்ன டின்னர்?
**மனைவி:** மதியம் மிச்சமான சோத்துல முட்டை மிளகு போட்டு தாளிச்சு வச்சு இருக்கேன்..
**கணவன்:** எனக்குப் பசிக்கலை.!

அடுத்த நாள்..
**கணவன்:** என்ன டின்னர்?
**மனைவி:** 'எக் ஃப்ரைட் ரைஸ்'
**கணவன்:** அட சூப்பர்.!
நீதி: சோறு வைக்கிறது பெருசு இல்லை... அதுக்கு பேரு வைக்கறது தான் பெருசு.

WhatsApp

மாஸ்டர் பீஸ் Retweeted
மாஸ்டர் பீஸ் @Kannan_Twitz · Sep 16
தாம் வாழ பிறரை மாற்ற முயற்சிக்காமல் தான் மாறிக் கொள்வதினால் பச்சோந்தியும் மதிக்கத்தக்கதே. சில இட(நே)ரங்களில் பச்சோந்தியாய் இருத்தல் நலம்.
3 74 87

## சுமந்திரன்...

பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

குடும்பப் பொருளாதார சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டே 5 சந்தேகநபர்களுக்கும் நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிப்பதாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் கட்டளை வழங்கினார்.

நாடாளுமன்றஉறுப்பினர்எம்.ஏ.சுமந்திரனைக் கொலை செய்ய முயற்சித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த , காராளசிங்கம் குலேந்திரன் , ஞானசேகரலிங்கம் ராஜ்மதன் , முருகையா தவேந்திரன் . வேலாயுதன் விஜயகுமார் மற்றும் லூயிஸ் மரியநாயகம் அஜந்தன் ஆகியோர் கடந்த ஒன்பது மாதங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் ஐவரும் விடுதலைப்பு லிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்களாக இருந்து மறுவாழ்வின் பின்னர் சமூகத்துடன் இணைக்கப்பட்டவர்கள்.

ஐவருக்கும் எதிராக போதைப்பொருள் தடுப்பு கட்டளை சட்டம், நிதிச் சலவைத் தடுப்பு சட்டம் , பயங்கரவாத செயற்பாடுகளுக்கு நிதி வழங்கல் மற்றும் ஊக்குவிப்புக்கு எதிரான சட்டம் மற்றும் அபாயகரமான ஆயுதங்கள் தடுப்பு சட்டம் உள்ளிட்டவையின் கீழ் கிளிநொச்சி நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. நீதிவான் மன்றின்உத்தரவில்5பேரும்விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

ஐந்து சந்தேகநபர்களையும் பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டும் என அவர்கள் சார்பில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் பிணை மனு தாக்கல் செய்யபப்ட்டது. அந்த மனு மீதான விசாரணை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று விசார்ணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஐந்து சந்தேகநபர்களுக்கும் எதிரான வழக்கின் சுருக்கமுறையற்ற விசாரணைகள் கிளிநொச்சி நீதிவான் மன்றில் நிறைவடைந்துவிட்டன. வழக்குக் கோவை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை 5 சந்தேகநபர்களும் மிகவும் வறிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களில் ஒருவரின் குழந்தைக்கு சத்திரச் சிகிச்சை மேற்கொள்வதற்கு தந்தையின் அனுமதி பெற வேண்டி உள்ளது. தந்தை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையால் குழந்தையின் சத்திரச் சிகிச்சை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

நாடாளுமன்றஉறுப்பினரைக் கொலை செய்ய முயற்சித்தார்கள் என இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டு இருந்தாலும் , அது தொடர்பான எந்த அறிக்கையையும் கிளிநொச்சி நீதிவான் மன்றில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் இதுவரையில் முன்வைக்கவில்லை. எனவே ஐந்து சந்தேகநபர்களும் பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டும்" என சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தில்லைநாதன் அர்ச்சுனா மன்றில் விண்ணப்பம் செய்தார்.

அரச சட்டவாதி நாகரத்தினம் நிஷாந்த், பிணை மனுவுக்கு ஆட்சேபனை தெரிவித்து விண்ணப்பம் செய்தார்.

"நாடாளுமன்ற உறுப்பினரைக் கொலை செய்ய திட்டம் தீட்டிய குற்றச்சாட்டில் இவர்கள் 5 சந்தேகநபர்களையும் தவிர ஆறாவது சந்தேகநபர் ஆஸ்திரேலியாவில் உள்ளார். அவர் தான் இவர்கள் 5பேரையும் வழிநடத்தினார் எனச் சந்தேகிக்கப்படுகிறார்.

அந்தச் சந்தேகநபரைக் கைது செய்வதற்கு , பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் ஆஸ்திரேலியா சென்று அங்கு அதிகாரிகளுடன் பேசி சிலரது சாட்சியங்களையும் பதிவு செய்துள்ளனர். அத்துடன் அவரைக் கைது செய்யும் நடவடிக்கைகளும் முன்னேடுக்கப்பட்டுள்ளன.

தற்போது விளக்கமறியலிலுள்ள ஐந்து சந்தேகநபர்களையும் பிணையில் செல்ல அனுமதித்தால் அவர்கள் அனைவரும் கடல் மார்க்கமாக இலங்கையைவிட்டு தப்பிச் செல்ல உள்ளதாக புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளன. எனவே இவர்களை பிணையில் செல்ல அனுமதிக்கக் கூடாது" என்று அரச சட்டத்தரணி மன்றில் விண்ணப்பம் செய்தார்.

இரு தரப்பினரின் விண்ணப்பங்களையும் ஆராய்ந்த மேல் நீதிமன்ற நீதிபதி, "5 சந்தேகநபர்களும், கடந்த ஒன்பது மாதங்களாக விளக்க மறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் குடும்பம் பொருளாதார ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. முன்னாள் போராளிகள் என்பதனால் தொடர்ந்து விளக்கமறியலில் வைத்திருக்க முடியாது. இவர்களுக்கு எதிரான இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் வரையில் அவர்கள் நிரபராதிகளே. அந்த வகையில் நிபந்தனைகளின் அடிப்படையில் இவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்படுகின்றார்கள்" என்று கட்டளை வழங்கினார்.

"சந்தேகநபர்கள் ஐவரும், தலா 10 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையிலும் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். அத்துடன் ஒவ்வொரு மாதமும் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் , கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் காலை 9 மணி முதல் மதியம் 12 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் கையொப்பம் இடவேண்டும். கடவுசீட்டுக்களை கிளிநொச்சி நீதிவான் மன்றில் சமர்ப்பிக்க வேண்டும்" ஆகிய நிபந்தனைகளையும் பிணை மனுக் கட்டளையில் மேல் நீதிமன்று நிர்ணயித்தது. (வ-37)

## குடும்பத்....

மையுடன் தொடர்புடைய பிணக்கொன்றினாலேயே குடும்பத்தலைவர் கொலை செய்யப்பட்டார் என்று தெரிவிக்கும் பொலிஸார், இந்தக் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் தந்தை, மகன் உறவுள்ள இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் கூறினர்.

இந்தச் சம்பவத்தில் யாழ்ப்பாணம் நாவலர் சாலையைச் சேர்ந்த செல்வநாயகம் இரட்ணபால சிங்கம் (வயது - 38) என்பவரே உயிரிழந்தார். அவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

யாழ்ப்பாணம் நாவலர் சாலையில் உள்ள குடும்பத் தலைவரின் வீட்டில் சம்பவம் இடம் பெற்றது. நான்கு மோட்டார் சைக்கிள்களில் சென்ற எட்டுப்பேர் கொண்ட கும்பல் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து வீட்டிலிருந்தவர்களைச் சரமாரியாகத் தாக்கியது. பின்னர் குடும்பத்தலை வர் மீது வாளால் வெட்டியது. அவரது மகனையும் அந்தக் கும்பல் வெட்டியது.

படுகாயமடைந்த நிலையில் அவரது மகனான இரட்ணபாலசிங்கம் ரஜீவன்(வயது -18) என்பவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குடும்பத் தலைவரை வாள்வெட்டுக் கும்பல் காயத்துடன் கடத்திச் சென்றுள்ளது. நல்லூர் சங்கிலியன் பகுதியில் அவரைப் போட்டுவிட்டு வாள்வெட்டுக் கும்பல் தப்பிச் சென்றுள்ளது. வெட்டுக்காயங்களுடன் குருதி வெள்ளத்தில் அவர் கிடந்துள்ளார். சாலையில் பயணித்தவர்கள் அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். அங்கு சென்ற பொலிஸார் சாலையில் பயணித்தவர்களுடன் இணைந்து படுகாயமடைந்து கிடந்தவரை மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுக் காலை சேர்த்திருந்தனர்.

சிகிச்சை பலனளிக்காது அவர் சில மணிநேரத்தில் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார் கொலைச் சந்தேகத்தில் நல்லூரடியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை மகன் இருவரையும் கைது செய்துள்ளனர். இருவரும் பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர். சம்பவ இடத்துக்கு நீதிவான் சென்று விசாரணைகளை மேற்கொண்டார். அத்துடன், யாழ் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த இறந்தவரின் சடலத்தை பார்வையிட்ட நீதிவான், உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார். (வ-4,8-ரி1)

## சிங்களவருக்கு...

மக்களுக்கு வீரராவார். சரியோ பிழையோ அது தான் உண்மை" என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எந்த அரசியல் கொள்கையில் இருந்தாலும் நாட்டு மக்கள் மகிந்தவுக்கு நன்றியுடையவராக இருக்க வேண்டும். மகிந்த வாழ்நாள் முழுவதும் நாட்டில் அரசராக இருக்கவேண்டியவர். அது நடைபெறவில்லை. அவரைச் சுற்றியிருந்த ஆலோசகர்கள் சரியான ஆலோசனைகளை வழங்கியிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது.

விடுதலைப் புலிகளை போரின் மூலம் தோல்வியடையச்செய்தாலும் அவர்களால் சமூகமயமாக்கியுள்ள பிரிவினைவாத நிகழ்ச்சி நிரலை தோற்கடிக்க முடியவில்லை. உண்மையான விடுதலைப் புலிகள் வடக்கில் இல்லை. வெளிநாடுகளில் இருக்கின்றனர். அவர்கள் சொல்வதையே பிரபாகரன் இங்கு மேற்கொண்டார்.

வடக்கில் போரின் மூலம் புலிகளை வெற்றி கொண்ட பின்னர் அங்கு அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டன. பாடசாலைகள் அமைக்கப்பட்டன. தமிழ் மக்களின் உள்ளத்தை வெற்றிகொள்வதற்கு அன்று அரசிடம் எந்த வேலைத் திட்டமும் இருக்கவில்லை. என்னதான் அபிவிருத்திகளை மேற்கொண்டாலும் மக்களின் உள்ளத்தை மாற்றுவது இலகுவான விடயமல்ல. தேசிய ஒற்றுமையை பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு நந்திக்கடலில் பிரபாகரனுக்காக நினைவுத்தூபி அமைப்பதும் பிரச்சினை இல்லை.

போர் வெற்றி விழாக்களை கொண்டாடவேண்டும். நாட்டின் அடையாளத்தை பாதுகாத்துக் கொண்டு அந்த மக்களின் உரிமையையும் பாதுகாக்கவேண்டும் - என்றார். (வ-5,31)

## தேர்தலை...

தலையில் தானே மண்ணைப் போட்டுக் கொள்ளக்கூடாது. ஆளும் கட்சிக்குள்ளிருந்து இவ்வாறான குரல்கள் நேற்று வெளிப்பட்டுள்ளன. அமைச்சர்கள் ரவூப் ஹக்கீம், ரிசாத் பதியுதீன் ஆகியோர், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் எடுத்துரைத்துள்ளனர்.

தற்போதைய அரசியல் நிலவரம் மற்றும் 20ஆவது திருத்தச் சட்டவரைவு தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய வியாக்கியானம் என்பன குறித்து ஆராய்வதற்காக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை அவசரக் கூட்டமொன்றை அலரிமாளிகையில் கூட்டினார்.

அமைச்சர்கள் சம்பிக்க ரணவக்க, மலிக் சமரவிக்ரம, ரவூப் ஹக்கீம், ரிசாத் பதியூதீன், கபீர் ஹாசிம் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

தேர்தல்முறைமை மாற்றத்தின் ஊடாக தேர்தலை ஒத்திப்போடுவது தொடர்பில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இங்கு தெரிவித்துள்ளார்.

இந்த யோசனைக்கு அமைச்சர்கள் ரவூப் ஹக்கீமும், ரிசாத் பதியுதீனும் கடும் எதிர்ப்பை வெளியிட்டதுடன், தொகுதிவாரி மற்றும் விகிதாசார கலப்புமுறை என்ற அடிப்படையில் எடுத்த எடுப்பிலேயே தேர்தல் நடைபெற்றால் அது சிறுபான்மை மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும்என்று அவர்கள்சுட்டிக்காட்டியுள்ளனர். தேர்தலொன்று இப்போது வந்தால் ஆளும் கூட்டணி நிச்சயமாக வெற்றியடையக்கூடிய வாய்ப்புகள் உள்ளதாக தலைமை அமைச்சரிடம் சுட்டிக்காட்டிய அமைச்சர் ரவூப் ஹக்கீம், ஓர் ஒழுங்குவிதிகளின்றி தேர்தலைப் பிற்போடுவது கூட ஏற்றுக்கொள்ளமுடியாதென்று எடுத்துக் கூறினாரென அறியமுடிந்தது.

'தேர்தலை ஒத்திவைக்க ஏற்பாடுகள் நடைபெறுமாயின் அந்தத் திருத்தங்களுக்கு அமைச்சரவையில் அனுமதி பெறப்பட்டு அவை வர்த்தமானியில் வெளியிடப்பட்டு முறையான ஒரு வரையறைத் திட்டம் இருக்கவேண்டும். எதுவுமே இல்லாமல் எடுத்த எடுப்பில் தேர்தல்களை மேலும் ஒத்திவைப்பது சிறந்ததல்ல. இது அரசுக்குப் பின்னடைவையே தரும்' என்று தலைமை அமைச்சரிடம் இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (வ-5)

## அரசியல்...

நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம், பொது வாக்கெடுப்பில் வெற்றி பெறக்கூடிய சூழல் இருக்குமாயின் நாம் அந்தச் சந்தர்ப்பத்தை விட முடியாது. நிதானமாக பக்குவமாக விடயங்களைக் கையாள வேண்டும். வாயைப் பொத்திக் கொண்டு விடயங்களை நகர்த்த வேண்டும்.

அரசமைப்புத் தொடர்பில் மகிந்தவுடன் பேசினேன். தமிழ் மக்களின் தீர்வுக்கு பல்வேறு உறுதிகளை இந்தியாவுக்கு நீங்கள் (மகிந்த) வழங்கினீர்கள் என்பதைச் சுட்டிக்காட்டினேன். அதனைச் செய்யவில்லை என்பதையும் கூறினேன்.

தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய பெரும் பொறுப்பு இந்தியாவுக்கு இருக்கின்றது. இந்தியா எங்களைக் கைவிட முடியாது. கைவிடவும் மாட்டாது.

13ஆவது திருத்தச் சட்டத்தில் எமக்கு உடன்பாடு இல்லையாயினும், அதை முற்றாக நிராகரிக்க முடியாது. அது எமக்கான இறுதித் தீர்வும் அல்ல. புதிய அரசமைப்பில் ஒற்றையாட்சியைக் கைவிடுவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி இணங்கியுள்ளது. 13ஆவது திருத்தத்திலிருந்து எவ்வளவோ தூரம் நாம் முன்னேறி வந்துள்ளோம். புதிய அரசமைப்பில் நூறு வீதம் திருப்தி இல்லையாயினும், அதில் எவ்வளவோ முன்னேற்றமான விடயங்கள் உள்ளன. தற்போது நாடாளுமன்றத்துக்கு வருவது இடைக்கால அறிக்கைதான்.

கூட்டாட்சி என்று நாம் சொற்களில் தொங்கிக் கொண்டிருக்கக் கூடாது. உலகில் பல நாடுகளில் எந்தப் பெயரும் இல்லாமல் அதிகாரங்கள் பகிரப்பட்டிருக்கின்றன. நாம் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை தவறவிடக் கூடாது - என்றார். (வ-5)

## தமிழ்...

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில், தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர்களை இரா.சம்பந்தன், நேற்று இரவு சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபைகள் தேர்தலை ஒரே நாளில் நடத்தும் சட்டவரைவு தொடர்பில் நாம் அதிருப்தி வெளியிட்டோம். அரசு எங்கள் திருத்தங்களை ஏற்றுக் கொண்டது.

20ஆவது திருத்தச் சட்டவரைவு தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய வியாக்கியானத்தில், ஏன் பொது வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டும் என்பதற்கு முழுமையான விளக்கம் கொடுக்கப்படவில்லை. இருப்பினும் உயர் நீதிமன்றம் சுயாதீனமாகச் செயற்படுகின்றது. கடந்த காலத்தில் அவ்வாறான நிலமை இல்லை.

ஒரு சனநாயகக் கட்சிக்குள் பல்வேறு கருத்து வேறுபாடுகள் விமர்சனங்கள் இருக்கும். அதே போன்றுதான் கூட்டமைப்பினுள்ளும் இருக்கின்றன. நாம் மற்றையவர்களின் விடயங்களில் அவர்களுடைய தீர்மானங்களில் முட்டுக்கட்டை போடுவதில்லை. ஆனாலும் நாம் கூட்டமைப்பாகச் செயற்படுகின்றோம். ஒவ்வொரு விடயத்தையும் நாங்கள் பகிரங்கப்படுத்தி எல்லோருக்கும் சொல்லிச் செய்து கொண்டிருக்க முடியாது.

வடக்கு மாகாண முதலமைச்சராக சி.வி.விக்னேஸ்வரனை நியமித்த எனது முடிவு சரியானது. எங்களுக்குள் பிரச்சினை இருக்கலாம். அவர் முதலமைச்சராக இருப்பது எமக்குப் பலம். விக்னேஸ்வரனை மீண்டும் முதலமைச்சர் வேட்பாளராக நியமிப்பது தொடர்பில் கட்சி எந்த முடிவும் இதுவரை எடுக்கவில்லை.

நான் விடயங்களைச் செய்யவில்லை என்று என்மீது குற்றம் சுமத்துகின்றனர். என்னால் செய்யக் கூடியவற்றை நான் நாளையே செய்து முடிப்பேன். நான் மற்றவர்களைக் கொண்டு செய்து முடிக்க வேண்டி இருக்கின்றது. இதனாலேயே காலதாமதம் ஏற்படுகின்றது. கேப்பாபிலவு மக்களின் பிரச்சினைகளுக்கு, அரச தலைவர் நாடு திரும்பியதும் நிச்சயம் தீர்வைப் பெற்றுக் கொடுப்பேன்.

நாங்கள் தமிழ் மக்களை விற்கமாட்டோம். எமது மக்களின் உரிமைகளை அடகுவைக்க மாட்டோம். இது அரச தலைவர் மைத்திரிபாலவுக்கும் தெரியும். தலைமை அமைச்சர் ரணிலுக்கும் தெரியும் - என்றார். (வ-5)

## யாழ்...

யாழ்ப்பாணம், செப். 20

யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் விளக்கமறியல் கைதிக்கு வழங்குவதற்கு என ஹெரோயின் போதைப் பொருளை கடத்த முற்பட்ட இளைஞரொருவர் நேற்று முன்தினம் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

விளக்கமறியலில் கைதியான தனது சகோதரரைப் பார்ப்பதற்காக ஊர்காவற்றுறை நாரந்தனையைச் சேர்ந்த இளைஞரொருவர் ஆடைகளை கொண்டு சென்றுள்ளார். அந்த ஆடைகள் மீது சந்தேகம் கொண்ட சிறைக்காவலர்கள் அதனை பரிசோதித்துள்ளனர். அப்போது சிறு பொலித்தீன் உறைக்குள் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போதைப் பொருள் அடங்கிய சிறிய பொதி கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து சிறைச்ச்ாலை உத்தியோகத்தர்களால் அந்த இளைஞர் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அவரிடமிருந்து 170மில்லிக் கிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர், யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் நேற்று முற்படுத்தப்பட்டார். அவரை ஒக்ரோபர் மாதம்3ஆம்திகதிவரைவிளக்கமறியலில்வைக்குமாறு நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார்.

இதேவேளை, கடந்த மாதம் சிறைக் கைதியொருவரை பார்ப்பதற்காக சென்ற பெண்ணொருவர் கொண்டு சென்ற பிட்டுக்குள்ளிருந்து கஞ்சா கைப்பற்றப்பட்டது. கடந்த 12 ஆம் திகதி மற்றொரு சம்பவத்தில் குடும்பத்தலைவர் ஒருவர் கொண்டு சென்ற கோழிக் குழம்புக்குள் இருந்து ஹெரோயின் கைப்பற்றப்பட்டிருந்தது. (வ-103)

# ஆவரங்கால் மத்தி - இந்து இறுதியில் மோதத் தகுதி

யாழ்ப்பாணம், செப். 20

அமரர் சிவலிங்கம் ஞாபகார்தக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம், ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் என்பன இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. 5 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் முதல் இரு செற்களையும் 25:21, 25:23 என்ற புள்ளிகளின் இந்து இளைஞர் அணி கைப்பற்றியது. அடுத்த இரண்டு செற்களையும் பலத்த போராட்டங்களின் பின் 33:31, 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கலைமதி அணி கைப்பற்றியது. முதல் நான்கு செற்களின் நிறைவில் இரண்டு அணிகளும் 2:2 என்றிருந்த காரணத்தால் ஐந்தாவது செற்றில் வெற்றியாளரைத் தீர்மானிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த செற்றை 15:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய இந்து இளைஞர் அணி 3:2 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் அச்சுவேலியுத் விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் 3:1 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம். (ம-108)



# போராடி வென்றது பாடும்மீன்

யாழ்ப்பாணம், செப். 20

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் குருநகர் பாடும்மீன் அணி போராடி வெற்றிபெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. ஆட்டத்தின் 13 நிமிடத்தில் மயூரன் பாடும்மீனின் முதல் கோலைப் பதிவுசெய்தார். முதல் பாதியின் முடிவில் 1:0 என்ற முன்னிலை வகித்தது பாடும்மீன்.

இரண்டாம் பாதியின் 9ஆவது நிமிடத்தில் குருநகர் பாடும்மீன் அணியின் கிறிஸ்ரன் தனது அணியின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். 18ஆவது நிமிடத்தில் றேஞ்சர்ஸ் அணியின் முதல் கோலைப் பதிவு செய்தார் ஆர்த்திகன். முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் பாடும்மீன் அணி வெற்றி பெற்றது. (ம-23)

# ஐயனாரை வென்றது பல்கலை

யாழ்ப்பாணம், செப். 20

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் போராடி வெற்றிபெற்றது.

அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் இடம்பெற்றது. ஆட்டத்தின் 13ஆவது நிமிடத்தில் ஐயனார் அணியின் சார்பாக முதல் கோலைப் பதிவுசெய்தார் சுபராஜ். 19ஆவது நிமிடத்தில் பல்கலையின் கோலைப் பதிவு செய்து பதிலடி கொடுத்தார் பத்ம நிதர்சன். மாற்றங்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியிலும் கோல் கணக்கில் மாற்றங்கள் ஏற்படவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி. சிறந்த வீரராக பல்கலைக் கழகத்தின் சல்மான் பாருஸ் தெரிவானார். (ம-23)



# வடமாகாண அணி நான்காவது இடம்

யாழ்ப்பாணம், செப். 20

43ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஒரு அங்கமான கடற்கரை கபடித் தொடரில் பெண்கள் பிரிவில் வடக்கு மாகாண அணி வெண்கலப் பதக்கத்தைத் தவறவிட்டது.

பாணந்துறை கடற்கரையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் வடக்கு மாகாண அணியை எதிர்த்து வடமேல் மாகாண அணி மோதியது. இதில் வடமேல் மாகாண அணி 59:43 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றதை அடுத்து வடக்கு மாகாண அணிக்கு நான்காவது இடம் கிடைத்தது. (ம-23)

# றோயல் அணி அபார வெற்றி

யாழ்ப்பாணம், செப். 20

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் றோயல் அணி வெற்றிபெற்றது. அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் றோயல் அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் அணி மோதியது. ஆட்டத்தின் 21ஆவது நிமிடத்தில் றோயலின் முதல் கோலைப் பதிவுசெய்தார் கயகோபன். 25ஆவது நிமிடத்தில் எடிசன் மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது றோயல் அணி. இரண்டாவது பாதியின் 20ஆவது நிமிடத்தில் றோயலின் மூன்றாவது கோலைப் பதிவுசெய்தார் எடிசன். அவர் 26ஆவது நிமிடத்திலும் ஒரு கோலைப் பதிவுசெய்தார். முடிவில் 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ஊரெழு றோயல் அணி. (ம-23)



# இளைஞர் சம்பியன்

யாழ்ப்பாணம், செப். 20

புலோலி இளைஞர்கள் விளையாட்டுக் கழகத்தின் துடுப்பாட்டத் தொடரில் கொம்மந்தறை இளைஞர் அணி சம்பியனானது.

புலோலி இளைஞர்கள் விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் அண்மையில் இந்த ஆட்டம் நடைபெற்றது. கொம்மந்தறை இளைஞர் அணியை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய இளைஞர் அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 67 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொலின்ஸ் அணி 47 ஓட்டங்களை மாத்திரமே பெற்றதை அடுத்து 20 ஓட்டங்களால் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது இளைஞர் அணி. (ம-108)

# இன்றைய மோதல்கள்

**சரஸ்வதி ச.ச.நி. கால்பந்தாட்டம்**

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நசரேத் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**தாச்சித்தொடர்**

யாழ்ப்பாண மாவட்ட தாச்சிச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் அரையிறுதி ஆட்டத்தில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)


# இலங்கையை வீழ்த்த இந்தியாவின் வியூகம்

இலங்கை அணியை வீழ்த்துவதற்கு இந்திய அணி வகுத்த கச்சிமான திட்டங்கள் தொடர்பிலான தகவல்கள் தற்போது வெளிவந்துள்ளன.

இந்திய அணி அண்மையில் இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரிலும், ஐந்து ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் தொடரிலும், ஒரு ரி-20 ஆட்டத்திலும் விளையாடியது. இலங்கை அணிக்கு சிறு வாய்ப்பையேனும் வழங்காமல், குறித்த தொடர்களை முறையே 3:0, 5:0, 1:0 என்று வழித்துத் துடைத்தது இந்திய அணி. இந்தப் படுதோல்விகளை அடுத்து இலங்கை அணி மீது கடும் விமர்சனங்கள் வைக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் இலங்கையின் துடுப்பாட்ட வீரர்கள் ஒவ்வொருதருக்கும் எதிராக இந்திய அணி தனித்தனியாக வியூகங்கள் வைத்திருந்த விடயம் தற்போது வெளிவந்துள்ளது.

இந்திய அணியினரின் ஓய்வறையில் இலங்கையின் முக்கிய துடுப்பாட்ட வீரர்கள் சிலரின் பெயர்களும் அவர்கள் சுழல்பந்தை எப்படி எதிர்கொள்வார்கள், வேகப் பந்துவீச்சை எப்படி எதிர்கொள்வார்கள் என்பது போன்ற விவரங்களும் எழுதி ஒட்டப்பட்டுள்ளன. இதன்படி கருணாரத்ன, தரங்க, குசல் மெண்டிஸ், மத்தியூஸ், டிக்வெல்ல, அசல குணரத்ன, தனஞ்சய டி சில்வா, டில்ருவான் பெரேரா ஆகியோருக்கு எதிராகவே இந்திய அணியினர் தனித்தனியாக வியூகம் வகுத்துள்ளனர்.

(ம)






## தம்பி, பிளைட் இன்னும் வரல

இந்திய அணியின் தலைமைத்துவத்தில் இருந்து விலகினாலும் விலகினார், டோனியின் இளமைச் சேட்டைகள் அவரிடம் மீளவும் ஆரம்பித்துவிட்டன.

இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரின்போது ரசிகர்கள் மைதானத்துக்குள் குழப்பம் விளைவித்த போது ஆட்டம் சுமார் 40 நிமிடங்கள் தடைப்பட்டது. இந்த இடைவெளியில் மைதானத்துக்குள் படுத்து உறங்கிவிட்டார் டோனி. அது தொடர்பான ஒளிப்படங்கள் சமூக வலைத்தளத்தில் மிகவும் வைரலானது. தற்போது இந்தியா - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் நடைபெற்று வருகிறது. கடந்த 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதலாவது ஆட்டம் நடைபெற்றது. இந்த ஆட்டதிலும் டோனியின் மிகச் சிறந்த திட்டங்களாலேயே இந்திய அணி வெற்றிபெற்றது. அடுத்த ஆட்டம் கொல்கத்தாவில் நாளை நடைபெறுகிறது. இதனால் கொல்கத்தாவுக்கு செல்வதற்காக சென்னை வானூர்தி நிலையத்தில் இந்திய வீரர்கள் காத்திருந்த போது வானூர்தி நிலையத்தில் படுத்துக்கிடந்துள்ளார் டோனி. தற்போது இது தொடர்பான ஒளிப்படங்களும், காணொலிகளும் வைரலாகி வருகின்றன.

(ம)

## இலங்கை கிரிக்கெட் சபையின் புதிய தெரிவுக்குழு அறிவிப்பு

இலங்கை கிரிக்கெட் சபையின் புதிய தெரிவுக்குழு நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு எதிரான தொடரில் கிடைத்த தொடர் தோல்விகளை அடுத்து சனத் ஜெயசூர்ய தலைமையிலான இலங்கை கிரிக்கெட் அணியின் தெரிவுக் குழு பதவி விலகியது. இதையடுத்து புதிய தொரு குழுவைத் தெரிவுசெய்ய வேண்டிய கட்டாயம் இலங்கை கிரிக்கெட் சபைக்கு ஏற்பட்டது. இந்தத் தெரிவுக்குழு நேற்றுத் தெரிவுசெய்யப்பட்டது.

புதிய தெரிவுக்குழுவின் தலைவராக கிரேம் லெப்ரோய் நியமிக்கப்பட்டுள்ளார். காமினி விக்கிரமசிங்க, வூட்டர்ஸ், பெர்னான்டோ ஆகியோரும் தெரிவுக்குழுவில் இடம்பிடித்துள்ளனர். (ம)






## மழை அச்சுறுத்தச் சாத்தியம்

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் மழையால் பாதிக்கப்பட அதிக சாத்தியமுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் தற்பேர்து நடைபெற்று வருகிறது. சென்னையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய அணி வெற்றிபெற்று 1:0 என்று முன்னிலை வகித்தது. இரண்டாவது ஆட்டம் கொல்கத்தாவில் நாளை நடைபெறவுள்ளது. இந்த ஆட்டம் மழையால் பாதிக்கப்பட அதிக சாத்தியமுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னையில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தின் போதும் சுமார் இரண்டரை மணி நேரம் மழை குறுக்கீடு செய்தமை குறிப்பிடத்தக்கது.

(ம)

## ஞானம்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், செப். 20

புலோலி இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்திய மென்பந்தாட்டத் துடுப்பாட்டத் தொடரில், கரவெட்டி ஞானம்ஸ் அணி சம்பியனானது.

புலோலி இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்திய அணிக்கு 6 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் குறித்த கழக மைதானத்தில் அண்மையில் இடம் பெற்றது. இதில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகமும் பருத்தித்துறை வீனஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ரஜீபன் ஆட்டமிழக்காமல் 53 ஓட்டங்களையும், பிரகாஸ் 16 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சாருஜன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

83 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய வீனஸ் அணி 4 இலக்குகளை இழந்து 41 ஓட்டங்களைப் பெற்று 41 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக விவேக் 26 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ஜெனி 2 இலக்குகளையும், துவி, ஜனன் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக ஞானம்ஸ் அணியின் ரஜீபன் தெரிவுசெய்யப்பட்டார்.

(ம-108)



இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் ஆட்டம், அபுதாபியில் எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடருக்காக பாகிஸ்தான் அணி தொடர்ந்து கடும் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறது. (ம)

## டயமன்ஸ் சம்பியன்

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் வதிரி டயமன்ஸ் அணி சம்பியனானது.

இமையாணன் மத்தியின் விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் டயமன்ஸ் அணியும், கலைமதி அணியும் மோதின. முதல் பாதியின் முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது டயமன்ஸ் அணி. அந்த அணி இரண்டாவது பாதியிலும் சிறப்பாக ஆதிக்கம் செலுத்தி முடிவில் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

முன்னதாக இடம்பெற்ற மூன்றாமிடத்திற்கான ஆட்டத்தில் கரவெட்டிப் பிரதேச செயலக அணியும் அல்வாய் மனோகரா அணியும் மோதின. இதில் 4:1 என்ற அடிப்படையில் மனோகரா அணி வெற்றி பெற்றது. (ம-108)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/L எழுதியோர், இளைஞர், யுவதிகள்,
வெளிநாடு செல்வோர், தொழில்புரிவோர் இணையமுடியும்
சனி, ஞாயிறு பயிற்சி ஆரம்பம் : 23.09.2017
பிரிவு 1 : காலை 08.00-10.00 பிரிவு 2 : மு.ப 10.00-12.00
பிரிவு 3 : பி.ப 01.00-03.00 பிரிவு 4 : மாலை 03.00-05.00
ஆங்கிலத்தில் ஓரெழுத்துத்தெரியாதவர்களும் எமது பயிற்சியில் இணைந்து சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்.
வாரநாள் பிரிவுகள் (திங்கள் மற்றும் புதன்) - 25.09.2017
1. காலை : 08-10 2. காலை 10-12
ஷாம்சன் ஆசிரியரின் நேரடி வகுப்பு - ஒரு பிரிவில் 20 பேர் மட்டும்
SAAMSON
Experts in English Training
279, வெலிங்டன் சந்தி அருகில், யாழ்நகர்.
077 1570 486
021 320 3313

இலவச ஆங்கில வகுப்பு
யாழ்ப்பாணத்தில்
இலகு முறையில் ஆங்கிலத்தினை கற்பதற்கு
2 நாள் பயிற்சி பட்டறை
23, 24ஆம் திகதிகளில் 9 a.m to 1.00 p.m
முன் பதிவுகளுக்கு - 076 697 3040
021 221 2410
ELAS Sir Pon Ramanathan Rd, Jaffna.
பல்கலை எதிரில்

அறுசுவை யாழ் உணவு
புதன், சனி, ஞாயிறு பகலில்
மதி மறவாத தனிச்சுவை
யாழ் ஒடியல் கூழிற்கு
பிரசித்தி பெற்ற எமது உணவகத்தில்
புதன்கிழமைகளில்
மாலை 6.30 மணி முதல்
சகல வைபவங்களுக்கும்
இலவச மண்டப வசதியுடன்
கணவாய் இறால் மரக்கறி
நண்டு சுறா நாட்டுக்கோழி
சுடச்சுட உடன் குழல் புட்டு
மேலும் பல விஷேட யாழ் உணவுகள்
ரூபா 50/=
விருந்து @ யாழ் பாடி
+94759875800, +9421 222 6868

# 2023ஆம் ஆண்டு வரை டோனி விளையாடலாம்

## இது கிளார்க்கின் கருத்து



"இந்திய அணியின் முன்னாள் தலைவரும், தற்போதைய நட்சத்திர வீரருமான டோனி, எதிர்வரும் 2023ஆம் ஆண்டுவரையும் விளையாடக்கூடிய உடல் தகுதியையும், வல்லமையையும் கொண்டுள்ளார்" இவ்வாறு தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் கிளார்க்.

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் கொல்கத்தாவில் நாளை நடைபெறவுள்ள நிலையில் இந்த ஆட்டம் தொடர்பாக நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"சிமித்தின் துடுப்பாட்டம் நீண்ட காலமாக தனித்துவமாக அமைந்தது. ஆனால் அவரது தலைமைத்துவத்துக்கு தற்போது சவால் ஏற்பட்டுள்ளது. ஆஸ்திரேலியா இரண்டாவது ஆட்டத்தில் வெற்றி பெற்றேயாக வேண்டும். இந்த ஆட்டம்தான் இந்தத் தொடரின் போக்கைத் தீர்மானிக்கும். குல்தீப் யாதவ் ஒரு தாக்குதல் பந்துவீச்சாளர். அவரை ஓட்டங்களைக் கட்டுப்படுத்தும் பந்துவீச்சாளர் என்ற எண்ணுவது தவறு. அவரிடம் அனைத்துத் திறமைகளும் உள்ளன. இரு புறமும் பந்தைத் திருப்புகிறார். ஏராளமான பந்துப்பரிமாற்றங்களை வீசுகிறார். டெஸ்ட் தொடரிலும் சிறப்பாக வீசுகிறார். டோனி 2019ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரில் விளையாடுவாரா என்று கேட்காதீர்கள். அவர் எதிர்வரும் 2023ஆம் ஆண்டுவரையும் விளையாடக்கூடிய உடல் தகுதியையும், வல்லமையையும் கொண்டுள்ளார்" என கிளார்க் மேலும் தெரிவித்தார்.

(ம)

## அரச தலைவர் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத் தொடர் விரைவில்

யாழ்ப்பாணம், செப். 19

யாழ்ப்பாண மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அங்கத்துவ அணிகளுக்கு இடையில், அரச தலைவர் கிண்ணத்துக்காக கரப்பந்தாட்டத் தொடரொன்று விரைவில் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர்.

(ம-23)

## புற்களுடன் கூடிய ஆடுகளங்கள் தரப்படுவதில்லை

### மலிங்க முறைப்பாடு



"பலமுறை புற்களுடன் கூடிய ஆடுகளங்களைக் கோரியுள்ள போதிலும், புற்கள் வெட்டப்பட்ட ஆடுகளங்களே தரப்படுகின்றன" என்று விளையாட்டுத்துறை அமைச்சரிடம் முறையிட்டுள்ளார் மலிங்க. இந்த விவகாரத்தில் விசாரணை நடத்துமாறு விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி உத்தரவிட்டுள்ளார்.

இலங்கை அணி கடந்த சில ஆட்டங்களில் படுமோசமான தோல்விகளைச் சந்தித்துள்ளது. இந்தத் தோல்விகளுக்கு மலிங்கவின் பந்துவீச்சும் மோசமாக இருந்தமையே முதன்மைக் காரணம். அவர் மீது கடுமையான விமர்சனங்கள் வைக்கப்பட்டன. இதையடுத்து மலிங்க - தயாசிறி இடையிலான உரையாடலொன்றில், "பலமுறை நாம் புற்களுடன் கூடிய ஆடுகளங்களைக் கோரிய போதிலும் எமக்கு அது மறுக்கப்படுகிறது. இந்த விடயத்தில் விசாரணை நடத்தப்பட வேண்டும்" என்று மலிங்க கோரியிருந்தார். இதையடுத்து விசாரணை நடத்துமாறு உத்தரவிட்டார் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி.

(ம)

GCE A/L | Commerce Stream
English Medium
Your way for Success
- MOCK EXAMS AND COACHING
- STUDENT FOCUSED LECTURING
- CONVENIENT LOCATION AND TIME
- COMPETENT PANEL OF LECTURERS
- COMPREHENSIVE SYLLABUS COVERAGE AND REVISION
A/L 2018 Batch Commences on 01-Oct-2017
Inquiries : 021 222 4111 | 0777 83 66 53
IBM
Quality Learning for Quality Life
IBM, No. 01, Second Lane, Power House Road, Jaffna

புதிய பிரிவுகள் ஆரம்பம்
வங்கியியல் கற்கை நெறிகள்
Banking Courses
IABF & DABF
(Tamil & English Medium)
Qualification : G.C.E.O/L 6 Passes with 5 Credits including Maths.
ஆரம்பம் - 23.09.2017
கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Executive Level & Business Level
(Tamil & English Medium)
Qualification : G.C.E. A/L 3 Passes
Note:- 2017 பரீட்சை எடுத்த மாணவர்களும் பதிவு செய்யலாம்.
ஆரம்பம் - 23.09.2017
Students A waiting (A/L) Results Enrich your Proficiency in English
Certificate Course in English
15 Batches have successfully completed the course
Register your names before 23.09.2017
Further Details
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna,
021 222 3382/ 021 222 9149

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.